# இஸ்லாமிய ஷரீஆவின்
# விசாலத்தன்மையும் நெகிழும் தன்மையும்



கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி

தமிழில்: அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். அப்பாஸ் (நளீமி)

இஸ்லாமிய ஷரீஆவின்

விசாலத்தன்மையும் நெகிழும் தன்மையும்

ISBN: 978-955-54392-2-0

கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி

தமிழில்: அஷ்ஷெய்க் ஏ.பீ.எம். அப்பாஸ் (நளீமி)

November 2013
136 + x pages
1000 Copies

Layout:
Azar wazeer (azarwazeer@gmail.com)

Cover designing:
Ahsan Ariff

Published by:
Dharu Hikma Publishers - Copy right ©
110, Kalawewa, Vijithapura.
Contact : 0772262640, 0714204216

Printed by:
AJ Prints (Pvt) Ltd
Dehiwala.

Price: Rs. 250.00

## பொருளடக்கம்

இஸ்லாமிய ஷரீஆவின் விசாலத் தன்மைக்கும் நெகிழும் தன்மைக்கும் வழிவகுக்கும் காரணிகள் 01

*முதலாவது காரணி*
சட்டமியற்றப்படாது வெறுமையாக விடப்பட்டுள்ள பரந்த பகுதி 03

*இரண்டாம் காரணி*
அடிப்படையான சட்டங்களில் கவனம் செலுத்தும் சட்ட வசனங்கள் 38

*மூன்றாம் காரணி*
பல்வேறு விளக்கங்களுக்கு இடமளிக்கும் சட்ட வசனங்கள் 50

*நான்காம் காரணி*
நிர்ப்பந்தங்களையும் சங்கடங்களையும் விதிவிலக்கான சூழ்நிலைமைகளையும் கருத்தில் கொள்ளல்: 72

*ஐந்தாம் காரணி*
காலம், இடம், சூழ்நிலை, வழக்காறுகள் மாறுபடுவதற்கேற்ப தீர்ப்புக்கள் மாறுபடல் 84

# முன்னுரை

இஸ்லாமிய ஷரீஆ மிகவும் விரிந்தது, நெகிழும் தன்மை கொண்டது, மனித சமூகம் அடைகின்ற முன்னேற்றங்களை எதிர் கொள்ளும் ஆற்றல் மிக்கது, கால மாற்றங்கள் இட வேறுபாடுகள் முதலிய அனைத்துக்கும் ஈடுகொடுக்கக் கூடியது, ஆகவே, எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் அமுல்படுத்தப் படுவதற்கு மிகவும் ஏற்றதாகவும் பொருத்தமானதாகவும் அது அமைந்திருக் கிறது என்பதனை நாம் உறுதியாக நம்புகிறோம். அதனை தெளிவு படுத்துவதே இவ்வாய்வில் எனது நோக்கமாக அமைந்துள்ளது.

காழ்ப்புணர்வுடனும் குற்றச்சாட்டுக்களை சாட்ட வேண்டும் எனும் மனப்பாங்குடன் இஸ்லாம் சம்பந்தமாக எழுதுகின்ற சில மனிதர்கள் உள்ளனர். கீழைத்தேய ஆய்வாளர்களையும் அவர் களைப் போன்றவர்களையும் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவர்களது பார்வையில்: ''இஸ்லாமிய ஷரீஆ வளரக்கூடியதல்ல, தேக்க நிலையில் தொடர்ந்தும் நிலைக்கக்கூடியது, கடும் போக்குக் கொண்டது, முன்னேற்றங்களுக்கு ஏற்ப இசைந்து கொடுக்கும் பரந்த மனம் அதற்கில்லை, அவ்வாறே கால மாற்றங்களோடு உருவாகும் நவீன பிரச்சினைகளுக்கு அவ்வக் காலத்துக்கு பொருத்தமான தீர்வை முன்வைக்கும் சமயோசிதம் அதற்கு இல்லை. இவற்றுக்குக் காரணம் இஸ்லாமிய ஷரீஆவுக்கு வஹீயே அடிப்படையாக அமைந்திருப்பதாகும்.

இறைவனிடமிருந்து வந்த வசனங்களே அதனது பிரதான மூலாதாரமாகக் காணப்படுகிறது. இவ்வசனங்களைச் செவியுறு வதும் முழுமையாக அவற்றுக்குக் கட்டுப்படுவதும் தான் ஒரு முஸ்லிமினது பணியாகக் காணப்படுகிறது. அதைத் தவிர வேறொன் றும் செய்யும் அதிகாரம் அவனுக்கு வழங்கப்படவில்லை.

''அத்துடன் இறைநம்பிக்கை கொண்டவர்கள் தமக்கிடையில் நிகழும் வழக்குகளில் இறைதூதர்தான் தீர்ப்பு வழங்கவேண்டும் என்பதற்காக அல்லாஹ்வின் பக்கமும் அவனுடைய தூதரின் பக்கமும் வருமாறு அழைக்கப்படும்போது நாங்கள் செவியேற் றோம் கீழ்படிந்தோம் என்று கூறுவதே அவர்களின் தன்மையாகும்.'' *(24:57)*

''அல்லாஹ்வும் அவனது தூதரும் ஏதேனும் ஒரு விவகாரத்தில் தீர்ப்பளித்து விட்டால், பிறகு அந்த விவகாரத்தில் சுயமாக தீர்ப் பளிக்கும் அதிகாரம் இறைநம்பிக்கை கொண்டுள்ள எந்த ஆணுக்கும் இறைநம்பிக்கை கொண்டுள்ள எந்த பெண்ணுக்கும் கிடையாது.'' *(33:36)*

என்றெல்லாம் அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளமை இதற்கு சான்றாகும் என இவர்கள் கூறுகின்றனர்.

இஸ்லாமிய ஷரீஆவைப் பற்றி இவர்கள் குறிப்பிட்டுள்ள இக்கருத்து அது ஏக இறைவனைச் சார்ந்தது தெய்வீகமானது என்ற வகையில் பொருத்தமானதே. இருப்பினும் அக்கருத்தை அடிப்படை யாகக் கொண்டு அவர்கள் எடுத்துள்ள முடிவுகள் சரியானதல்ல. பிரமையும் பிரயாசையும் குற்றம் சுமத்த வேண்டும் என்ற மனப் பாங்குமே அவர்கள் இத்தகைய முடிவுகளுக்கு வருவதற்கு தூண்டு கோலாய் அமைந்துள்ளன. இறைவன் ஆழமான அறிவுள்ளவன், ஞானமுள்ளவன், நன்மைகளைப் புரியக் கூடியவன், கருணை மிக்கவன், தான் வழங்கிய இந்த ஷரீஆ பரிபூரணமானது என அவன் வர்ணித்துள்ளான். அதன் மூலம் கருணையையும் இலகுவையுமே தான் நாடியதாகக் கூறுகிறான். அதிலே கஷ்டமோ தொந்தரவோ இருக்கமாட்டாது என குறிப்பிட்டுள்ளான்.

இந்நிலையில் அவனிடமிருந்து அவனது இறுதித் தூதருக்கு வழங்கப்பட்டிருக்கும் பொதுவான, நிலையான ஷரீஆ அதனைப் பின்பற்றுவோருக்கு அவர்களது மார்க்க விவகாரங்களைப் பொறுத்தவரையில் தொந்தரவு விளைவிப்பதாக அமைவது எந்த வகையிலும் சாத்தியமானதல்ல. அவ்வாறே உலக விவகாரங்களில் அவர்களுக்கு பெரும் கஷ்டங்களைக் கொடுக்கக் கூடியதாக இருப்பதும் சாத்தியமானதல்ல. அவ்வாறே புதிதாக வடிவெடுக்கும் நிலைமைகள், சூழல்களை எதிர்கொள்வற்கு திராணியற்றதாக அது காணப்படுவதும் அசாத்தியமானதாகும்.

இந்த ஷரீஆ சுமார் பதிமூன்று நூற்றாண்டுகள் சட்டவாக்கத்துக் கான, நீதித் துறைக்கான, சட்டத் தீர்ப்புகளுக்கான அடிப்படையாக அமைந்திருந்தது. அக்காலப்பகுதியில் வித்தியாசமான சூழல்களில் அது பிரவேசித்தது, பல்வேறு இனங்களை அது ஆட்சி செய்தது. பல நாகரிகங்களை அது சந்தித்தது. இருப்பினும், புதிதாக உருவாகிய எதனையும் அதற்கேயுரிய வகையில் முகங்கொடுப்பதில் சங்கடப்படவில்லை. எந்தவொரு தேவையையும் நிறைவு செய்யாது அது பின்வாங்கியதில்லை. மாற்றமாக அது எதிர் கொண்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அதனிடம் தீர்வு காணப்பட்டது. அது எதிர்கொண்ட அனைத்து நிகழ்வுகளுக்கும் உரிய வழி காட்டல்கள் அதனிடம் இருக்கவே செய்தன.

இந்த ஷரீஆவுக்கான அடிப்படையாக அமைந்துள்ள இறைவனது வசனங்கள் இஸ்லாமிய சமூகத்தின் இயக்கத்துக்கோ, இஸ்லாமிய நாகரிகத்தின் வளர்ச்சிக்கோ தடையை ஏற்படுத்தும் விலங்குகளாக அமையவில்லை. மாறாக வழிகாட்டும் களங்கரை விளக்கு களாகவும் நன்மைகளின் பாதையில் பயணிப்பதற்கான தூண்டு கோலாகவும் தீமைகள் சீர்கேடுகளின் பாதையில் செல்வதற்கு தடைவிதிப்பதாகவுமே அவை அமைந்திருந்தன.

பல்வேறுபட்ட காலங்களின் நிகழ்வுகளை, வித்தியாசமான சூழல்களின் நிகழ்வுகளையும் எதிர்கொள்ளும் அளவுக்கு எவ்வாறு இஸ்லாமிய ஷரீஆ விரிந்து காணப்படுகிறது? முன்னேற்றத்தை அது எவ்வாறு எதிர்கொள்கின்றது? புதிதாக தோற்றம் பெறுகின்ற

அனைத்துப் பிரச்சினைகளையும் மனிதர்களின் நலன்களைப் பூர்த்தி செய்யும் வகையிலும் ஷரீஆவின் இலக்குகளைப் பரிபூரணப் படுத்தும் வகையிலும் காலத்தின் தேவையைப் புறக்கணிக்காத வகையிலும் அது எவ்வாறு தீர்த்து வைக்கின்றது? போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் பொறுப்பையே இவ்வாய்வு ஏற்றுள்ளது. மிகவுமே நம்பகமான மூலாதாரங்களிலிருந்து பெறப் பட்ட ஆதாரங்களுடன் இவ்விடைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

''மேலும் (நான் ஆற்ற விரும்பும் அனைத்தும்) அல்லாஹ்வின் பேருதவியைப் பொறுத்தே இருக்கின்றன. நான் அவனையே முழுமையாகச் சார்ந்து விட்டேன். மேலும், (ஒவ்வொரு விடயத்தி லும்) அவன் பக்கமே நான் திரும்புகிறேன்.'' *(11:88)*

**கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி**

# வெளியீட்டுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அகிலத்தாரின் இறைவன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், அல்ஹம்துலில்லாஹ்! உலகத்தாருக்கு ஓர் அருட்கொடையாக வந்த இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்கள், தோழர்கள், உலக முஸ்லீம்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் அருளும் ஈடேற்றமும் உண்டாவதாக.

கலாநிதி யூஸுஃப் அல் கர்ளாவியின் 'இஸ்லாமிய ஷரீஆவின் நெகிழ்வுத்தன்மையும் விசாலத்தன்மையும்'' என்ற நூலை காலத்தின் தேவை என உணர்ந்து வெளியிடுவதற்கு முன்வந்துள்ளோம். இவ்வாறான நூல்கள் தமிழ் மொழியில் மிகவும் அரிதாகவே காணப் படுகின்றது. வாசகர்கள் இதனை வரவேற்பார்கள் என எதிர் பார்க்கின்றோம்.

தாருல் ஹிக்மா வெளியீட்டகத்தின் மூன்றாவது வெளியீடாக இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். எமது முன்னைய வெளியீடுகளான 'இறைத்தூதரும் கல்வியும்', 'குடும்பம் என்ற நிறுவனமும் பெண் வகிக்கும் பாத்திரமும்' போன்ற நூல்கள் வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. அதுபோன்று இந் நூலையும் வாசகர்கள் வரவேற்பார்கள் என எதர்பார்க்கின்றோம் இன்ஷா அல்லாஹ்!

இந்நூலை வெளியிடுவதற்கு எமக்கு இயலுமையைத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப்புகளும் அல்ஹம்துலில்லாஹ்!. இதை எளிய தமிழ் மொழிநடையில் மொழிபெயர்த்துத் தந்த ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷேய்க் ஏ.பீ.எம். அப்பாஸ் (நளீமி) அவர்களுக்கும், இதன் பக்கங்களை வடிவமைத் துத் தந்த சகோதரர் அஸார் வஸீர் அவர்களுக்கும், அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்த அஷ்ஷெய்க் அஹ்ஸன் ஆரிப் (நளீமி) அவர்களுக்கும், இதன் திருத்தங்களைச் செய்ததுடன் எங்களுக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அஷ்ஷெய்க் ஸையித் ஹஸன் (நளீமி) அவர்களுக்கும், இதனை பிரயோசனமுள்ளதாக ஆக்கிக்கொள்ளும் வாசகர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

யாஅல்லாஹ்! எங்களது இந்த முயற்சியை அங்கீகரித்து அதன் மூலம் எமது மறுமை வாழ்வை பயனுள்ளதாக ஆக்கித் தந்தருள் வாயாக. ஆமீன்.

**சட்டத்தரணி நூர்தீன் ஸவாஹிர்**
தாருல் ஹிக்மா வெளியீட்டகம்.
ஒக்டோபர் 2013

# இஸ்லாமிய ஷரீஆவின் விசாலத் தன்மைக்கும் நெகிழும் தன்மைக்கும் வழிவகுக்கும் காரணிகள்

இஸ்லாமிய உலகு பரந்த எல்லைகளைக் கொண்டிருந்தது, பல்வேறுபட்ட இனங்களை பெற்றிருந்தது, அதனுள்ளே வித்தியாச மான நாகரிகங்கள் காணப்பட்டன. காலமாற்றங்களுக்கு ஏற்ப புதுப்புது பிரச்சினைகள் அங்கே தோற்றம் பெற்று வந்தன. இருப்பினும் இஸ்லாமிய ஷரீஆவானது உலகின் வித்தியாசமான பண்புகளைக் கொண்ட பல்வேறு பாகங்களிலும் வியாபித்திருந்தது, ஆட்சி செய்தது என்பது அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற ஓர் உண்மையாகும்.

இஸ்லாமிய ஷரீஆ தனது மூலாதாரங்கள், மூல வசனங்கள், அடிப்படை விதிகள் என்பவற்றுடன் புதுப்புது பிரச்சினைகள் தோற்றம் பெற்றபோது கைகட்டிக் கொண்டு, வாய் பேசாத மௌனியாக இருந்து விடவில்லை. ஸஹாபாக்களின் காலத்தி லிருந்து அது தனது பணியைத் தொடர்ந்து செய்து வந்தது. சுமார் பதின்மூன்று நூற்றாண்டுகள் இஸ்லாமிய நாடுகளில் அமுல்படுத்தப் படுகின்ற, புனித சட்டமாக அது திகழ்ந்து வந்தது. மேற்குலக காலனித்துவ யுகம் ஆரம்பிக்கும் வரை இந்நிலை தொடர்ந்தது. காலனித்துவம் இஸ்லாமிய ஷரீஆவுக்கு மாற்றமாக மனிதன் உருவாக்கிய சட்டங்களை திணித்தது. மாத்திரமல்லாது அல்லாஹ்

தடுத்தவற்றுக்கு அது அனுமதி வழங்கியது, அல்லாஹ் கடமை யாக்கியவற்றை அது இரத்துச் செய்தது.

இஸ்லாமிய ஷரீஆ ஆட்சியிலிருந்தபோது அனைத்து சமூகங் களினதும் தேவைகளை நிறைவு செய்து வைத்தது. தான் பிரவேசித்த அனைத்து சூழல்களிலும் எதிர்கொண்ட சகல பிரச்சினைகளுக்கும் நீதியான, மிகப் பொருத்தமான தீர்வுகளையும் முன்வைக்க அதனால் முடிந்தது. இதற்கான காரணம் மனிதனது அறிவோடு உறவாடு கின்ற, மனித இயல்பை வளர்க்கின்ற, நடைமுறையைக் கருத்திற் கொள்கின்ற, கடமைகளுக்கும் உரிமைகளுக்குமிடையில் சமநிலை பேணுகின்ற, ஆன்மீகத்துக்கும் சடவாதத்துக்கும் மத்தியில் சமநிலை பேணுகின்ற, இம்மைக்கும் மறுமைக்குமிடையில் நடுநிலை பேணுகின்ற, மனிதர்கள் சகலருக்கும் மத்தியில் நீதியை நிலை நாட்டுகின்ற, மனித நலன்கள் நன்மைகளுக்கே காரணமாக அமை கின்ற, சீர்கேடுகளையும் தீமைகளையும் தவிர்க்கக்கூடிய விதத்தில் என்றும் மாறாத அடிப்படை விதிகளை அது தன்னகம் பெற்றிருப்ப தோடு அல்லாஹ் வழங்கியுள்ள அதிசயமான நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையையும் கொண்டிருப்பதாகும். இந்த நெகிழ்ந்து கொடுக்கும் பண்பினால் எதிர்பாராத எதனையும் எதிர்கொள்ளும் ஆற்றலை அது பெற்றுள்ளது. புதிதாக தோற்றம் பெறும் எப்பிரச்சினைக்கும் எதுவித சிரமமுமின்றி, தன்னை வருத்திக் கொள்ளாது தீர்வு வழங்கும் ஆற்றலை அது கொண்டுள்ளது எனலாம்.

இஸ்லாமிய ஷரீஆவில் காணப்படுகின்ற நெகிழ்ந்து கொடுக்கும் இப்பண்புக்கும் மற்றும் விசாலத்தன்மைக்குமான இயல்புக்குமான காரணிகள் யாவை என்பவற்றை பற்றியே நீங்கள் படிக்கப் போகும் இனிவரும் பக்கங்களில் நாம் விளக்க இருக்கிறோம். குறிப்பிட்ட அந்த காரணிகளைத் தொடர்ந்து தேவையான ஆதாரங்ளையும் ஆங்காங்கே குறிப்பிட்டிருக்கிறோம்.

முதலாவது காரணி

## சட்டமியற்றப்படாது வெறுமையாக விடப்பட்டுள்ள பரந்த பகுதி

இஸ்லாமிய ஷரீஆவை, அதன் சட்டங்களைப் படிக்கும் ஒருவர் அங்கு சட்டமியற்றாது வெறுமையாக விடப்பட்டுள்ள பரந்த ஒரு பகுதி இருப்பதைக் கண்டுகொள்வார். சமூகத்திலுள்ள முஜ்தஹித்கள் மிகவும் பொருத்தமான சட்டங்களினால், காலத்துக்கும் சூழ்நிலை களுக்கும் மிகவும் ஏற்ற சட்டங்களினால் அப்பகுதியை நிரப்ப வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது ஷரீஆவின் பொதுவான இலக்குகளை அவர்கள் கருத்திற் கொள்ள வேண்டும். ஷரீஆவின் பொதுவான போக்கிற்கு ஏற்றவகையிலும் தெட்டத் தெளிவான மூல வசனங்களின் வழிகாட்டலின் கீழும் அவர்கள் தொழிற்பட வேண்டும் என்பதற்காகவே, சட்ட வசனங்கள் அப்பகுதி பற்றி பேசாது வேண்டுமென்றே மௌனமாக இருந்துள்ளன எனலாம்.

இவ்வாறு சட்டமியற்றாது, வெறுமையாக விடப்பட்டுள்ள பகுதி, வேண்டுமென்றே சட்டமியற்றுவோனால் (இறைவனால்) வெறுமையாக விடப்பட்டுள்ள பகுதியாகும் என்று நான் கூறியதற் குக் காரணம் நபி (ஸல்) அவர்கள் கூறுகின்ற பின்வரும் ஹதீஸாகும்.

- ''நிச்சயமாக அல்லாஹ் சில வரம்புகளை விதித்துள்ளான், அவற்றைத் தாண்டாதீர்கள். சிலவற்றை கடமையாக்கியுள்ளான், அவற்றைப் பாழ்படுத்தி விடாதீர்கள். சிலவற்றைப் பற்றி

மௌனம் சாதித்துள்ளான். அதற்கு மறதி காரணமல்ல. உங்கள் மீது கொண்ட அன்பே காரணமாகும் அவற்றைத் தேடிக் கொண்டிருக்காதீர்கள்.''[1]

இந்த ஹதீஸில் இடம்பெற்றுள்ள 'அவற்றைத் தேடிக் கொண்டிருக்காதீர்கள்!' எனும் கட்டளை வஹி இறங்கும் காலப் பகுதியில் வாழ்ந்த ஸஹாபாக்களை நோக்கியே விடுக்கப்பட்டுள்ளது. கடமைகள் விதிக்கப்படுவதனூடாக அல்லது சில விடயங்கள் தடைசெய்யப்படுவதனூடாக பொறுப்புக்கள் அதிகரித்து சிரமம் உண்டாவதற்கு அவர்களது தேடுதலும் வருத்திக் கொள்ளலும் காரணமாக அமைந்து விடக்கூடாது என்பதனாலேயே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவேதான் இன்னொரு ஹதீஸில் நான் உங்களை எவற்றில் விட்டுவிட்டேனோ அவற்றில் நீங்கள் என்னை விட்டுவிடுங்கள்[2] என குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்குர்ஆனில் பின்வரும் வசனம் இடம்பெற்றுள்ளது. ''இறை நம்பிக்கை கொண்டவர்களே! சில விடயங்கள் உங்களிடம் வெளிப் படுத்தப்பட்டால் அவை உங்களுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தும். அவற்றைப் பற்றி நீங்கள் வினவாதீர்கள். ஆயினும் குர்ஆன் இறக்கியருளப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் அவற்றைப் பற்றி நீங்கள் வினவினால் அப்போது அவை உங்களுக்கு வெளிப் படையாகக் கூறப்பட்டு விடும். நீங்கள் (இதுவரை) கேட்டவற்றை அல்லாஹ் மன்னித்து விட்டான். அல்லாஹ் மன்னிப்பு வழங்கு பவனாகவும் சகிப்புத்தன்மையுடையவனாகவும் இருக்கின்றான்.'' *(5:101)*

---

1- மூலாதாரம் : தாரகுத்னீ, இமாம் நவவீ அல் அர்பஈன் எனும் நூலில் இதனை ஹஸன் தரத்திலுள்ள ஹதீஸ் என்கிறார். அவருக்கு முன்னரே அபுபக்ர் அஸ்ஸன்ஆனி தனது ஆமாலீ எனும் நூலில் இந்த ஹதீஸ் ஹஸன் என கூறியுள்ளார். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை சம்பந்தமாக கருத்து வேறுபாடுகள் உண்டு. இப்னு ரஜப் ஜாமிஉல் உலூம் வல் ஹிகம் எனும் நூலில் அது பற்றி விளக்கியுள்ளார்.

2- மூலாதாரம்: அஹ்மத், முஸ்லிம், நஸாஈ, இப்னு மாஜா. அறிவிப்பாளர்: அபூஹுரைரா (றழி)

• ஸல்மான் (றழி) அவர்கள் அறிவிக்கின்ற பின்வரும் ஹதீஸாகும் சட்டமியற்றாது வெறுமையாக விடப்பட்ட பகுதி எனும் பெயரை நாம் இடுவதற்குக் காரணமாக அமைந்தது.

அல்லாஹ் தனது வேதத்தில் ஆகுமாக்கியவையே ஹலாலாகும். அவன் தடை செய்தவையே ஹராமாகும். அவன் பேசாமல் விட்டவைகள் அவன் மன்னித்து விட்டவைகளாகும். அல்லாஹ்விடமிருந்து அவன் மன்னித்து விட்டவைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எதையும் மறக்கக் கூடியவனல்லன் எனக் கூறிய நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து பின்வரும் வசனத்தை ஓதினார்கள். ''மேலும் உன் இறைவன் மறக்கக் கூடியவனல்லன்.''

இவையனைத்தும் ஒரு விடயத்தை எங்களுக்கு சுட்டிக்காட்டுகின்றன. பொறுப்புக்களைக் குறைத்தல், சட்டமியற்றாது வெறுமையாக ஒரு பரந்த பகுதியை விட்டுவிடல் என்பன தற்செயலாக, இடம்பெற்ற தொழிற்பாடுகளல்ல. மாறாக, இஸ்லாமிய ஷரீஆ பொதுவானதாக, நிலையானதாக, எல்லாக் காலங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் எல்லா சூழ்நிலைகளுக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும் என விரும்பிய சட்டமியற்றுவோனின் திட்டப் பிரகாரமே அத்தொழிற்பாடுகள் இடம் பெற்றுள்ளன என்பதே அவ்விடயமாகும்.

## வெறுமையான பகுதிக்குரிய சட்டங்களை வகுப்பதற்கான மூலாதாரங்கள்:-

நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் வஹி வரப் போவதில்லை. எனவே, வெறுமையாக விடப்பட்டுள்ள பகுதிக்கு தேவையான சட்டங்களை வகுத்து அப்பகுதியை நிரப்பும் பணி, அப்பகுதியை ஒழுங்குபடுத்தும் பணி முஜ்தஹித்களிடம் விடப்பட்டுள்ளது. அவர்கள் இஜ்திஹாத் பணியை மேற்கொள்ள தகுதியானவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தவிர வேறெந்த நெருக்குதலுமின்றி இப்பணியை மேற்கொள்ள அவர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் இஜ்திஹாதை மேற்கொள்ளும்போது வழிமுறைகள் வித்தியாசப்படலாம். சட்ட அறிஞர்கள் பயன்படுத்தும் மூலாதாரங்களும் பல்வேறுபட்டவையாக அமையலாம். இவ்வாதாரங்கள், இவ்வழிமுறைகள் உரிய நிபந்தனைகளுடன் பொருத்தமான இடங்களில் கையாளப்படுமானால் அவற்றுள் எதனை பயன்படுத்தினாலும் அதையிட்டு ஷரீஆ அலட்டிக் கொள்ளப் போவதில்லை.

இனி அந்த வழிமுறைகளை நோக்குவோம்.

## *(1) அல் கியாஸ்:*

இஜ்திஹாதில் கியாஸின் பங்களிப்பு முக்கியமானதாகும். கியாஸ் என்பதை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம்.

**''அல் குர்ஆனில் அல்லது ஹதீஸில் தீர்வு முன்வைக்கப்படாத ஒரு பிரச்சினையை, அவற்றில் தீர்ப்பு முன்வைக்கப்பட்டுள்ள ஒரு பிரச்சினையோடு ஒப்புநோக்கி தீர்வு வழங்குதலே கியாஸாகும். இவ்விரு பிரச்சினைகளுக்கும் இடையிலே பொதுத்தன்மை காணப்படுவதும், குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படாதிருப்பதும் இவ்வாறு தீர்வு வழங்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய நிபந்தனைகளாகும்.''**

■ ***கியாஸுக்கான சில உதாரணங்கள் பின்வருமாறு:***

- *உமர் (றழி) அவர்கள் கலீபாவாக இருக்கும்போது அவரிடம் வந்த ஒரு கவர்னர் ''சில மனிதர்கள் குதிரைகளை சொந்தமாக வைத்திருக்கின்றனர். ஒரு குதிரையின் பெறுமதி பல ஒட்டகைகளின் பெறுமதிக்கும், நூற்றுக்கணக்கான ஆடுகளின் பெறுமதிக்கும் சமனாக உள்ளது'' என எடுத்துரைக்க உமர் (றழி) அவர்கள் ''அப்படியானால் நாற்பது ஆடுகளிலிருந்து ஸகாத்தை எடுக்கும் நாம் குதிரைகளிலிருந்து எதையும் பெறாது விடுவதா?!'' என வினா எழுப்பினார்கள்.*

*பிறகு 'கியாஸுல் அவ்லா' என அழைக்கப்படும் கியாஸின் ஒரு பிரிவைப் பயன்படுத்தி குதிரைகளிலிருந்து ஸகாத் பெறப்பட வேண்டும் என்ற கட்டளையை பிறப்பித்தார்கள். இமாம் அபூஹனீபா இக்கருத்தையே ஏற்றுள்ளார்.*

- 'ஸகாத்துல் பித்ர்' வழங்கும் போது நாட்டில் பெரும்பான்மை யாக பயன்பாட்டில் உள்ள தானியத்தை வழங்கலாம் எனும் கருத்தை பல இமாம்கள் கொண்டுள்ளனர். ஹதீஸில் வந்துள்ள பேரீச்சம் பழம், திராட்சை, கோதுமை, பாற்கட்டி என்பவற்றுடன் தானியத்தை ஒப்பிட்டமையே இம்முடிவுக்கு வரக் காரணமாகும்.

- திருமணம் முடித்த, கற்புடைய ஆண்களுக்கு அவதூறு கூறினால் 80 கசையடிகள் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு அறிஞர்கள் வந்தனர். அதற்கு, திருமணம் முடித்த, கற்புடைய பெண்களுக்கு அவதூறு கூறினால் வழங்கப்பட வேண்டிய தண்டனை பற்றி வந்துள்ள அல்குர்ஆன் வசனத்தோடு ஒப்பு நோக்கியமையே காரணமாக அமைந்தது. ''எவர்கள் கற்புடைய பெண்கள் மீது அவதூறு சொல்லி, பின்னர் நான்கு சாட்சியங் களைக் கொண்டுவர வில்லையோ அவர்களுக்கு 80 கசையடி கொடுங்கள்.'' *(24:04)*

- வேதத்தையுடைய பெண்களைத் திருமணம் முடித்து, உறவு கொள்ள முன்னர் விவாகரத்து செய்துவிட்டால் இத்தா இருக்க வேண்டிய அவசியமில்லை என்ற முடிவுக்கு அறிஞர்கள் வந்தனர். இறைநம்பிக்கை கொண்ட பெண்களுடன் வேதத்தை யுடைய பெண்களை ஒப்பு நோக்கியமையே இம்முடிவுக்கு காரணமாக அமைந்தது.

''இறைநம்பிக்கை கொண்டவர்களே! இறைநம்பிக்கைக் கொண்ட பெண்களை நீங்கள் திருமணம் செய்து, பின்னர் அவர் களைத் தொடுவதற்கு முன்பாக விவாகரத்து செய்து விட்டால், நிறைவேற்றுமாறு நீங்கள் கோரக்கூடிய வகையில் உங்களுக்காக அவர்கள் மீது 'இத்தா' எதுவும் இல்லை.'' *(33: 49)*

- வியாபாரத்துடன் வாடகைக்கு விடுதலை ஒப்பு நோக்கியமை ஜும்ஆ தினத்தில் ஜும்ஆவுக்கான 'அதானி'ன் பின்னர் வாடகைக்கு கொடுப்பது கூடாது என்ற முடிவு பெறப்பட காரணமாக அமைந் தது. ''அல்லாஹ்வை நினைவு கூறுவதன் பக்கம் விரைந்து செல்லுங்கள். வியாபாரத்தை விட்டுவிடுங்கள்.'' *(62: 9)*

அவ்வாறே வாடைகைக்கு வழங்கும் தொழிற்பாடானது யாருக்கும் எதிராக மேற்கொள்ளப்படக் கூடாது என்ற முடிவு பெறப்பட வியாபாரத்துடன் அதனை ஒப்புநோக்கியமை காரணமாக அமைந்தது. ''உங்களில் எவரும் தனது சகோதரனின் வியாபாரத்துக்கு எதிரான வகையில் வியாபாரம் செய்யக் கூடாது.'' (புகாரி, முஸ்லிம்)

- தங்க, வெள்ளி பாத்திரங்களை குளிக்கவோ, எண்ணெய் தோய்க்கவோ, சுருமா இடவோ, வேறு தேவைகளுக்கோ பயன் படுத்தக் கூடாது என்ற முடிவு, தங்க, வெள்ளி பாத்திரங்களில் சாப்பிடவோ, குடிக்கவோ கூடாது என்ற கருத்தில் வந்துள்ள ஹதீஸ்களுடன் ஒப்பு நோக்குவதன் மூலம் பெறப்பட்டுள்ளது. ''தங்க, வெள்ளி பாத்திரத்தில் சாப்பிடாதீர்கள். அவற்றினாலான பாத்திரங்களில் குடிக்காதீர்கள்.'' (புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ, நஸாஈ) தங்க, வெள்ளிப் பாத்திரங்களில் குடிப்பவனது வயிற்றில் சப்தத்தை எழுப்புவது நரக நெருப்புத்தான்.'' (முஸ்லிம்)

இமாம் ஷாபிஈயின் மாணவரான இமாம் முஸ்னீ, ''நபி (ஸல்) அவர்களது காலம் முதல் இன்றுவரை சட்ட அறிஞர்கள் தொடர்ந்தும் கியாஸை தமது மார்க்க விவகாரங்கள் சம்பந்தமான சட்டங்கள் அனைத்தையும் பெற பயன்படுத்தியுள்ளனர்'' என கூறுகிறார். ''தொடர்ந்தும் அவர் சத்தியத்திற்கு நிகரானதும் சத்தியமே, அசத்தியத்திற்கு நிகரானதும் அசத்தியமே'' எனும் ஏகோபித்த முடிவுக்கு அவர்கள் வந்தனர். எனவே, கியாஸ் விடயங்களுடன் ஒப்பீடு செய்வதாக அவற்றுக்கு உதாரணம் கூறுவதாக அமைந்துள்ளது என்று காரணம் காட்டி யாரும் கியாஸை நிராகரிக்கக் கூடாது'' என குறிப்பிட்டுகிறார்.

கியாஸை நான்கு இமாம்களும், பெரும்பாலான அறிஞர்களும் ஏற்றுள்ளனர். அவர்கள் எமக்கு கியாஸின் வரைவிலக்கணம் அதற்கான அடிப்படைகள், அதன் நிபந்தனைகள், அதனைக் கையாள்வதற்கான எல்லைகள் என்பவை சம்பந்தமாக அநேகமான ஆய்வுகளை விட்டுச் சென்றுள்ளனர். 'உஸூலுல் பிக்ஹு' நூல்களில் வித்தியாசமான மத்ஹபுகளால் வித்தியாசமான வழிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வுகளைக் காணமுடியும்.

## (2) அல் இஸ்திஹ்ஸான்

கியாஸை எல்லா நிலைகளிலும் -பொதுத்தன்மை காணப்படும் போதும் காணப்படாத போதும் -பயன்படுத்துவதானது ஷரீஆவின் நோக்கங்களுக்கும் அதனது இலகுதன்மைக்கும், நீதியான தன்மைக்கும் முறணான விளைவுகளுக்கும் இட்டுச்செல்லக்கூடும். எனவே, சில இடங்களில் முஜ்தஹித் கியாஸை முழுமையாக விட்டு விடுவார். அல்லது, 'கியாஸுன் ஜலீயுன்' (தெளிவான கியாஸ்) என அழைக்கப்படும் கியாஸை விட்டுவிட்டு 'கியாஸுன் கபீயுன்' (மறைவான கியாஸ்) எனும் கியாஸ் வகையைப் பயன்படுத்துவார். அல்லது, பொதுவான சட்டத்திலிருந்து ஒரு கிளை அம்சத்துக்கு விதிவிலக்கை வழங்குவார். தீங்கை தடுக்கும் நோக்கில் அல்லது நீதியை நிலைநாட்டும் நோக்கில்தான் ஒரு முஜ்தஹித் இவ்வாறு தொழிற்படுவார். இதனையே இஸ்திஹ்ஸான் என்பர். அறிவில் பத்தில் ஒரு பகுதி இஸ்திஹ்ஸான் ஆகும்'' என இமாம் மாலிக் கூறியதாக ஒரு அறிவிப்பு உள்ளது. அவரின் மாணவரான அஸ்பஃ என்பவர் ''கியாஸில் மூழ்கிவிடுபவர் ஸுன்னாவை விட்டு விலகி விடும் நிலையில் உள்ளார். இஸ்திஹ்ஸான் அறிவின் அடிப்படை யாகும்'' என குறிப்பிட்டுள்ளார்.

இமாம் அபூஹனீபா, ''எவ்விடயங்களில் கியாஸை பயன் படுத்து வது அவலட்சணமாகத் தோன்றுகிறதோ அவ்விடயங்களில் இஸ் திஹ்ஸானை பயன்படுத்த வேண்டும்'' என கூறியதாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இமாம் அபூஹனீபா கியாஸை பயன்படுத்தி முடிவுக்கு வந்த வேளைகளில் அம்முடிவு பற்றி அவரது மாணவர் கள் அவரோடு தர்க்கித்ததுண்டு. ஆனால், இஸ்திஹ்ஸானை பயன் பயன்படுத்தி முடிவுக்கு வந்த சந்தர்ப்பங்களில் எவரும் அவருடன் வாதிக்க முற்படவில்லை.

இஸ்திஹ்ஸான் என்பது எந்த ஓர் அடிப்படையும் இன்றி சுய விருப்பப்படி மனோ இச்சைப் பிரகாரம் முடிவுகளைப் பெறுவதற் கான ஒரு பெயரல்ல. மாறாக நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஷரீஆவானது கருத்திற்கொள்கின்ற ஒரு கிளை நலனை கியாஸை விட முற்படுத்துவதனை அது குறிக்கின்றது. அல்லது,

'கியாஸுன் ஜலீயுன்' எனப்படும் தெளிவான கியாஸை விட்டுவிட்டு மறைவான கியாஸுக்கு முன்னுரிமை வழங்குவதனை அது குறிக்கின்றது. அல்லது, ஏற்கத்தக்க ஓர் ஆதாரத்தின் அடிப்படையில் பொதுவான சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுவதனை அது குறிக்கின்றது. அல்லது, இது போன்ற தொழிற்பாட்டையே அது குறிக்கின்றது.

மாலிகீ மத்ஹபைச் சார்ந்த இமாம் ஷாதிபீ, ''இரு ஆதாரங்களில் மிகவும் பலமானதை வைத்து தொழிற்படுவதையே நாங்களும், ஹனபீக்களும் இஸ்திஹ்ஸான் என்கிறோம், அத்தோடு பொதுவான சட்டத்தை தொடர்ந்தும் பயன்படுத்துகையில் ஏதேனும் ஓர் ஆதாரத்தின் அடிப்படையில் பொதுவான சட்டத்திலிருந்து விலக்களித்து குறிப்பான சட்டத்தை வழங்கலாம். இவ்வாறே, கியாஸை கையாள்கையில் ஏதேனும் ஓர் ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு கியாஸைப் பயன்படுத்தாது விலகியிருக்கலாம்''என இமாம் அபூஹனீபா, இமாம் ஷாபிஈ ஆகியோர் கருதுகின்றனர்'' என குறிப்பிடுகிறார்.

இஸ்திஹ்ஸானுக்கு பல வரைவிலக்கணங்கள் உள்ளன. ஆனால், அவற்றுள் எந்தவொரு வரைவிலக்கணத்திலாவது ஆதாரம் எதுவுமின்றி மனோஇச்சையின் அடியாக முடிவுகளுக்கு வருவதே இஸ்திஹ்ஸான் எனும் கருத்து இடம் பெறவில்லை.

இமாம் ஷவ்கானீ இவ்வரைவிலக்கணங்களுள் சிலவற்றைத் தந்துள்ளார். இஸ்திஹ்ஸான் என்றால் என்ன என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது.

- ''முஜ்தஹிதின் உள்ளத்தில் ஊசலாடுகின்ற வார்த்தைகளினால் விளக்குவதற்குச் சிரமமான ஓர் மூலாதாரமே இஸ்திஹ்ஸான்'' என சிலர் கூறுவர்.
- ''கியாஸை விட்டுவிட்டு அதனை விட பலமான வேறு ஒரு கியாஸைப் பயன்படுத்துவதே இஸ்திஹ்ஸான்'' எனவும் கூறப்படுகின்றது.

- ''ஆதாரம் வழங்கும் தீர்ப்பை விட்டுவிட்டு மனித நலனைக் கருத்திற் கொண்டு வழக்காரின் அடிப்படையில் தீர்வைப் பெறுதலே இஸ்திஹ்ஸான்'' என்றொரு வரைவிலக்கணமும் உண்டு.
- ''கியாஸின் அடிப்படையிலான சட்டத்திலிருந்து விதிவிலக்களித்து, அதனைவிடப் பலமான ஓர் ஆதாரத்தின் அடிப்படையில் குறிப்பான ஒரு சட்டத்தை வழங்குதலே இஸ்திஹ்ஸானாகும்'' என இன்னொரு வரைவிலக்கணம் கூறுகின்றது.
- ''பொதுவான கியாஸுக்குப் பகரமாக கிளை நலனொன்றைப் பயன்படுத்தலே இஸ்திஹ்ஸான்'' என்றொரு வரைவிலக்கணமும் உள்ளது.

இவ்வரைவிலக்கணங்கள் அனைத்னையும் நோக்குகையில் இவற்றுள் எதுவுமே மனோஇச்சையின் பிரகாரம், அல்லது சுய விருப்பின் பிரகாரம், அல்லது வெறுமனே பகுத்தறிவின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவதை இஸ்திஹ்ஸான் என குறிப்பிடவில்லை. ஒரு முஜ்தஹித் ஒரு பிரச்சினைக்கு அதுபோன்ற வேறு ஒரு பிரச்சினையுடன் ஒப்பு நோக்கி தீர்ப்பு வழங்காதிருப்பதாயின் அல்லது பொதுவான சட்டத்திலிருந்து ஒரு கிளையம்சத்துக்கு விதிவிலக்கு அளிப்பதாயின் அதற்கான பிரத்தியேகமான ஷரீஆ ஆதாரமொன்று இருக்க வேண்டும் என்ற கருத்தையே இவ்வரைவிலக்கணங்கள் அனைத்தும் முன்வைக்கின்றன.

■ **இஸ்திஹ்ஸான் எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதனைப் பொறுத்து அதனை அறிஞர்கள் பிரித்து நோக்கியுள்ளனர்.**

1- வழக்காறை அடிப்படையாகக் கொண்ட இஸ்திஹ்ஸான்:-

- இதற்கு உதாரணமாக முற்பணம் வழங்குதலைக் குறிப்பிடலாம். இங்கு அதுவரை தயாரிக்கப்படாத பொருளுக்கோ அல்லது, இல்லாத பொருளுக்கோ பணம் வழங்கப்படுகின்றது. அடிப்படையில் இல்லாத ஒன்றுக்காக பணம் வழங்குவது ஏற்கத்தக்கதல்ல. எனினும் இஸ்திஹ்ஸானின் அடிப்படையில் இதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஏனெனில், வழக்காறு இவ்வாறான கொடுக்கல் வாங்கல்

முறையை ஆட்சேபிக்காது ஏற்றுக்கொண்டுள்ளது. அவ்வாறே அசையும் சொத்துக்களை 'வக்பு' செய்யலாம் என அல்குர்ஆனோ, ஹதீஸோ கூறவில்லை. எனினும், புத்தகங்கள் போன்ற அசையும் சொத்துக்களை 'வக்பு' செய்தல் சமூகத்தில் வழக்கில் உள்ளது.

**2- நிர்ப்பந்தத்தை (அத்தியாவசிய தேவையை) அடிப்படை யாகக் கொண்ட இஸ்திஹ்ஸான்:-**

சிறுநீர் கழிக்கும் போது உடம்பில் சற்று தெறித்திருந்தால் அதனைச் சுத்தம் செய்ய சிரமமாக இருப்பதால் விட்டுவிடல், கொடுக்கல் வாங்கலின்போது ஏற்படும் சிறு நஷ்டத்தைப் பொருட் படுத்தாது விட்டுவிடுதல். (உதாரணம்: ஐந்து தேங்காய் வாங்கி விட்டு திருப்பி ஐந்து தேங்காய் வழங்கும்போது பகரமாக சிறிய தேங்காய் கிடைத்திருக்கலாம்), சுத்தப்படுத்தும் போது நிறம், மனம், சுவை அகற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனைகள் மூன்றையும் கிணற்றை சுத்தப்படுத்தும்போது நூற்றுக்கு நூறு வீதம் கருத்திற் கொள்வது முடியாததாகையால் அதிலிருந்து விலக்களித்தல் போன்ற வற்றை இங்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

**3- மஸ்லஹாவை (மனித நலன்களை) அடிப்படையாகக் கொண்ட இஸ்திஹ்ஸான்:-**

பொதுவான கூலியாளியின் (உதாரணம்: சலவைத் தொழிலாளி) கையால் ஒரு சொத்து அழிந்து விட்டால் அதற்கு அவர் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற சட்டத்தை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

■ இஸ்திஹ்ஸானுக்கான சில உதாரணங்கள் பின்வருமாறு:

- வாரிசுச் சொத்துப் பங்கீடு சம்பந்தமான பின்வரும் பிரச்சினை யைக் இங்கு குறிப்பிடலாம்.

ஒரு பெண் மரணித்து விடுகின்றாள். அவளது தாயும், கணவ னும், தாய்வழி சகோதரர்களும், உடன்பிறந்த சகோதரர்களும் உயி ருடன் இருந்தனர். இந்நிலையில் கணவனுக்கு அவளது சொத்தில் பாதியும், தாய்க்கு 1/6 பகுதியும், தாய்வழி சகோதரர்களுக்கு 1/3

பகுதியும் சேர வேண்டும். உடன் பிறந்த சகோதரர்களுக்கு எதுவுமே கிடைக்காது. ஏனெனில், பங்கு நிர்ணயிக்கப்பட்டவர்கள் சொத்தி லிருந்து தமக்குரிய பங்குகளைப் பெற்றதன் பின்னர் மீதியைப் பெறுகின்ற 'அஸபா' எனும் வாரிசுகளின் பிரிவிலேயே இவர்கள் அடங்குவர். (1/21/61/3) இங்கு பங்கு நிர்ணயிக்கப்பட்டவர்களுக்கு முழுமையாக சொத்து சென்று விட்டதனால் உடன் பிறந்த சகோதரர்களுக்கு எதுவுமே மீதமாகவில்லை.

இத்தகைய ஒரு பிரச்சினை உமர் (றழி) அவர்களிடம் முன்வைக் கப்பட்டபோது, அவர்கள் உடன்பிறந்த சகோதரர்களுக்கு வாரிசுச் சொத்தில் எப்பங்கையும் வழங்கவில்லை. அப்போது, அவர்களில் ஒருவர், ''விசுவாசிகளின் தலைவரே! எமது தந்தையாரை ஒரு கழுதை என வைத்துக்கொள்ளுங்கள். அப்படியிருந்தாலும் நாம் ஒரே தாயின் புதல்வர்களல்லவா?'' (அதாவது தாய்வழி சகோதரர்களுக்கு பங்கு கிடைக்கும் போது உடன்பிறந்த சகோதரர்களாகிய எமக்கு பங்கு கிடைக்காதிருப்பது எவ்வாறு நியாயமாகும்? என்றே வினவுகிறார்). அவ்வினாவைத் தொடர்ந்து தான் ஏற்கனவே வழங்கிய தீர்ப்பை இரத்துச் செய்த உமர் (றழி) அவர்கள் தாய் வழி சகோதரர்களோடு உடன்பிறந்த சகோதரர்களையும் இணைத்து 1/3 பகுதியை அவர்களிடையே சமமாகப் பகிர்ந்தளித்தார்கள். உமர் (றழி) அவர்கள் தீர்வை முன்வைத்தபோது அதனை ஆட்சேபித்தவர் உடன் பிறந்த சகோதரர்களுள் ஒருவரல்ல. மாற்றமாக ஒரு ஸஹாபி தான் அவர்களது தந்தையை ஒரு கழுதை என கருதுங்கள். அப்படி யிருந்தாலும் இவர்களிடையே நெருக்கம் தானே அதிகரித்திருக்கும் என கூறினார் என்றொரு கருத்தும் காணப்படுகிறது.

இத்தகைய ஒரு பிரச்சினையின் போது உமர் (றழி) அவர்கள் இரண்டாவதாக வழங்கிய தீர்ப்பே வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை உமர் (றழி), உஸ்மான் (றழி), ஸைத் பின் ஸாபித் (றழி) ஆகியோர் கொண்டுள்ளனர். இக்கருத்தை அலி (றழி), இப்னு மஸ்ஊத் (றழி), இப்னு அப்பாஸ் (றழி) ஆகியோர் ஏற்பதில்லை. அன்பரீ ;'அலி (றழி) அவர்களது கருத்து கியாஸின் அடிப்படையில் பெறப்பட்டதாகும். உமர் (றழி) அவர்களது கருத்து இஸ்திஹ்ஸானின்

அடிப்படையில் பெறப்பட்டதாகும்'' என கூறுகின்றனர். கபரீ ''இது அழகிய ஒரு வழிமுறையாகும். சரியான ஒரு வார்த்தையாகும்'' என குறிப்பிடுகிறார்.

''உமர் (றழி) அவர்கள் இக்கருத்தின் மூலம் நீதியை நிலை நாட்டு கின்ற, கஷ்டத்தை நீக்குகின்ற இஸ்திஹ்ஸான் எனும் வழிமுறையை வகுத்துத் தந்திருக்கிறார்கள்'' என அஷ்ஷெய்க் அபூஸஹ்ரா குறிப்பிடுகின்றார்.

- இஸ்திஹ்ஸானுக்கு இன்னோர் உதாரணமாக மருத்துவ சிகிச் சைக்காக 'அவ்ரத்தை' (மறைவான இடத்தை) பார்க்க அனு மதிக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். அவ்ரத்தைப் பார்ப் பது ஹராமாகும் என்ற பொதுவான விதியிலிருந்து, நோயாளி களுக்கு தீங்கு நிகழ்வதைத் தடுக்கும் நோக்கில் இங்கு விலக் களிக்கப்பட்டுள்ளது.
- அவ்வாறே பண்டங்களைப் பண்டங்களுக்கு பரிமாற்றம் செய்து கொள்ளும்போது அவற்றின் அளவையில் காணப்படுகின்ற அற்ப மான வேறுபாடுகள் வட்டியாகக் கருதப்படவில்லை. எனவே, நீண்ட தாமதத்துக்குப் பின்னர் பொருளைத் திருப்பிச் செலுத்தும் போது காணப்படும் சிறு வேறுபாடு அனுமதிக்கப்பட்டிருக் கிறது. இது இஸ்திஹ்ஸானுக்கான இன்னோர் உதாரணமாகும்.

நீதியான சாட்சிகள் இல்லாத பிரதேசங்களில் இப்பண்பைக் கொண்டிராத சாட்சிகளை ஏற்றுக் கொள்ளலாம்.

- கூலியை நிர்ணயிக்காது, கால அளவை வரையறுக்காது, பயன்படுத்தப்படப் போகும் நீரின் அளவை கணிப்பிடாது குளியலறைகளில் நுழையலாம்.

அடிப்படையில் இவை அனுமதிக்கப்படாதவையாக இருப்பி னும் இஸ்திஹ்ஸானின் அடிப்படையில் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இமாம் மாலிக் கூலியாளை உணவு வழங்குவது எனும் உடன் பாட்டின் அடிப்படையில் கூலிக்கு அமர்த்த அனுமதிக்கிறார். அவன்

சாப்பிடுகின்ற அளவு ஏற்கனவே வரையறுக்கப்படாவிட்டாலும் இலகுவைக் கருத்திற் கொண்டும், அவனது பிரச்சினையைத் தணிப்பதை நோக்கமாகக் கொண்டும் உணவைப் பொறுத்தவரை யில் பிரச்சினை எழமாட்டாது என்ற அடிப்படையிலும் இவ்வனு மதியை அவர் வழங்கியுள்ளார்.

அவ்வாறே, தவணையைப் பொறுத்தவரையில் இடம்பெறும் சிறு மோசடியை அனுமதிக்கிறார். ஆனால் பெறுமதியில் செய்யப் படும் சிறு மோசடியைக் கூட அனுமதிக்கவில்லை. ஏனெனில், தவணையை பொறுத்தவரையில் விட்டுக்கொடுக்கும் மனப்பாங் குடன் நடப்பதும், பெறுமதியைப் பொறுத்தவரையில் விட்டுக் கொடுக்காது கடுமையாக நடந்து கொள்வதும் சமூக வழக்காறாக உள்ளது. ஒரு வியாபாரி பெறுமதியைச் செலுத்துவதற்கான காலத்தை வழங்குவதில் தாராளத்தன்மையோடு நடந்து கொள்வார். ஆனால், அவர் உடனடியாக பெறுமதியைக் கையேற்கும்போது அதனது அளவைப் பொறுத்தவரையில் கண்டிப்பாகவே இருப்பார். காலத்தில் காட்டும் தயவை பெறுமதியில் (விலையில்) எதிர்பார்க்க முடியாது.

## 3. அல் இஸ்திஸ்லாஹ்:

வெறுமையான பகுதியை நிரப்புவதில் இஸ்திஸ்லாஹ்'' எனும் மூலாதாரத்தின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. ''அல்குர்ஆன், ஹதீஸ் வசனங்கள் இல்லாத இடங்களுக்கு தேவையான சட்டங் களை வகுப்பதற்கு பயன்படும் வளமான ஒரு வழிமுறையே இது. சட்ட வாசகமானது மனித முன்னேற்றங்களுக்கு இயைந்த வகையில் இடம்பெறுவதற்கும், அவர்களது நலன்களையும் தேவைகளையும் நிறைவு செய்வதற்கும் இது பேருதவியாக அமைகிறது''என அறிஞர் அப்துல் வஹ்ஹாப் கல்லாப் குறிப்பிட்டுள்ளார்.

'இஸ்திஸ்லாஹ்' என்பது 'மஸ்லஹா முர்ஸலா' எனும் மூலா தாரத்தையே குறிக்கின்றது. ஒரு குறிப்பிட்ட நலன் சம்பந்தமாக அது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கான பிரத்தியேகமான ஆதாரமோ அல்லது கருத்திற் கொள்ளப்படவில்லை என்பதற்கான

பிரத்தியேகமான ஆதாரமோ காணப்படாதபோது அதனை 'மஸ்லஹா முர்ஸலா' எனப்படுகிறது. ஷரீஆ எப்போதும் மனித நலன்களைக் கருத்திற் கொள்கிறது. தான் இயற்றியுள்ள அனைத்து சட்டங்களிலுமே அவற்றை நோக்காகக் கொண்டுள்ளது.

அவ்வாறே எல்லா நிலைமைகளிலும் மனிதர்களை விட்டும் தீங்குகளையும் சீர்கேடுகளையும் - அவை சடரீதியானவையாக இருந்தாலும் சரியே, மானசீக ரீதியானவையாக இருந்தாலும் சரியே, நிஜ உலகில் தற்போது நிலவுபவையாக இருந்தாலும் சரியே, எதிர்பார்க்கப்படுபவையாக இருந்தாலும் சரியே - அகற்றுவதை நோக்காகக் கொண்டுள்ளது என்பதற்கான பொதுவான ஆதாரம் காணப்படுகின்றது. அவ்வாதாரத்தின் அடிப்படையிலேயே பிரத்தியேகமான ஆதாரத்தைக் கொண்டிராத இந்நலன் கருத்திற் கொள்ளப்படுகிறது.

முஸ்லிம் சட்ட அறிஞர்களுள் பெரும்பாலோர் 'மஸ்லஹா முர்ஸலாவை' ஒரு சட்ட மூலாதாரமாகக் கொள்கின்றனர். அதனை அடியாகக் கொண்டு சட்டங்களை வகுக்கின்றனர். சட்டத் தீர்ப்புக் களை வழங்குகின்றனர். மார்க்கத் தீர்ப்புக்களை முன்வைக்கின்றனர். சட்ட நூல்களை வாசிக்கும் ஒருவர் **நலன்களை அடிப்படையாகக் கொண்டு அல்லது தீங்குகளைத் தவிர்ப்பதை நோக்காகக் கொண்டு** உருவாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான சட்டங்களைக் கண்டு கொள்வார்.

இஸ்லாமிய ஷரீஆவை மிகவும் தெளிவாக விளங்குபவர்களாகத் திகழ்ந்த ஸஹாபாக்கள் மிக அதிகமாக 'மஸ்லஹா' மூலாதாரத்தைப் பயன்படுத்தினர். அதிகமான சந்தர்ப்பங்களில் இம்மூலாதாரங்களை அடியாகக் கொண்டு தொழிற்பட்டனர்.

**இஸ்திஸ்லாஹ்வுக்கான உதாரணங்கள்:**

- அபூபக்ர் (றழி) அவர்கள் அல்குர்ஆனை ஒன்றுதிரட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வர இம்மூலாதாரமே காரணமாக இருந்தது. அபூபக்ர் (றழி) அவர்களுக்கு முன்னர் அல்குர்ஆன் ஒரு நூலாக தொகுக்கப்பட்டிருக்கவில்லை. பல இடங்களில் அது எழுதி

வைக்கப்பட்டிருந்தது. ஒரே நூலாக தொகுக்கும் பணியை நபி (ஸல்) அவர்கள் செய்யாததனால் ஆரம்பத்தில் அபூபக்ர் (றழி) அவர்கள் இப்பணியில் ஈடுபட தயங்கினார்கள். பின்னர் உமர் (றழி) அவர்களின் ஆலோசனைப் பிரகாரம் இப்பணியை முன் னெடுக்க அவர்கள் முன்வந்தார்கள். இதனால் இஸ்லாத்துக்கு வரவிருக்கும் நன்மைகளை, நலன்களை உணர்ந்தமையே இதில் ஈடுபட அவர்களைத் தூண்டியது.

- நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும்போது தமக்குப் பின்னால் ஆட்சிப் பொறுப்புக்கு யாரையும் நியமித்து விட்டுச் செல்ல வில்லை. இருப்பினும் அபூபக்ர் (றழி) அவர்கள் மரணிக்கும் போது தமக்குப் பின்னால் உமர் (றழி) அவர்களைக் கலீபாவாக நியமித்து விட்டுச் சென்றார்கள். சமூக நலனைக் கருத்திற் கொண்டமையே இதற்குக் காரணமாகும்.
- உமர் (றழி) அவர்கள் வரி விதித்தல், திணைக்களங்களை உரு வாக்குதல், நகரங்களை நிர்மாணித்தல், சிறைச்சாலைகளை அமைத்தல், விற்பனைக்காக உள்ள நீர் கலக்கப்பட்ட பாலை தரையில் கொட்டி விடுதல், கவர்னர்கள் தமது பதவிக் காலத்தில் வியாபாரம் செய்தால் அவர்களது சொத்தில் பாதியைப் பறிமுதல் செய்தல் போன்ற சீர்திருத்தத் தண்டனைகளை வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நலன்களைக் கருத்திற் கொண்ட மையே காரணமாக அமைந்தது.
- உஸ்மான் (றழி) அவர்கள் அன்று சமூகத்திலிருந்த அல்குர்ஆன் பிரதிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து எரித்து விட்டு, ஒரே ஒரு முஸ்ஹபின் (அல்குர்ஆன் தொகுப்பு) கீழ் முழு சமூகத்தை யும் ஒன்றுதிரள வைத்தார்கள். அவ்வாறே ஒருவர் மரணப் படுக்கையில் இருக்கையில், தனது மனைவிக்கு வாரிசுச் சொத்து சேரக்கூடாது என்பதற்காக அவளை விவாகரத்துச் செய்தால் அப்பெண்ணுக்கு வாரிசுச் சொத்திலிருந்து பங்கு வழங்கப்பட வேண்டும் என தீர்ப்பளித்தார்கள். நலன்களைக் கருத்திற் கொண்டதனாலேயே அவர்கள் இம்முடிவுகளுக்கு வந்தார்கள்.

- அலி (றழி) அவர்கள் அறபுமொழிக்குரிய இலக்கண விதிகளை வகுக்குமாறு அபுல் அஸ்வத் அத்துஅலீ என்பவரைப் பணித்தார்கள். அவ்வாறே தொழிலாளர்கள் வசமுள்ள ஏனைய மனிதர்களின் சொத்துக்கள் அழிந்தால், அதற்கு தாம் காரணமல்ல என்பதை நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற சட்டத்தைப் பிறப்பித்தார்கள். அவ்வேளை, ''இதுவே மனிதர்களை சீர்திருத்தும்'' எனவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அலி (றழி) அவர்கள் நலன்களை அடிப்படையாகக் கொண்டே இம்முடிவுகளுக்கு வந்தார்கள்.
- முஆத் பின் ஜபல் (றழி) அவர்கள் தானியங்களிலிருந்தும் பழங்களிலிருந்தும் ஸகாத் பெறும் போது உரிய பண்டங்களைப் பெறுவதற்குப் பகரமாக ஐந்து முழு ஆடைகளை அல்லது வேறு ஆடைகளை கொண்டு வந்து தாருங்கள். சோளத்துக்கும், வாற் கோதுமைக்குப் பகரமாக நாம் அவற்றை ஏற்றுக் கொள்வோம். அது உங்களுக்கு இலகுவாக இருக்கும் அதேவேளை மதீனாவில் வாழும் ஏழைகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என யெமன் தேசத்தில் வைத்து குறிப்பிட்டார்கள். இவ்வாறு குறிப்பிட நலன்களை அவர் கருத்திற் கொண்டமையே இதற்கு காரணமாக அமைந்தது.
- முஆவியா (றழி) அவர்கள் ஸகாத்துல் பித்ரை ஒன்று திரட்டும் போது ஒரு 'ஸாஉ' பேரீச்சம் பழங்களுக்குப் பதிலாக 1/2 'ஸாஉ' கோதுமையைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களது காலத்தில் வாழ்ந்த அனைத்து ஸஹாபாக்களும் இம்முடிவை ஏற்றுக் கொண்டனர். அபூ ஸஈத் அல் குத்ரீ (றழி) அவர்கள் மாத்திரம் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. முஆவியா (றழி) நலன்களை அடிப்படையாகக் கொண்டே இம்முடிவுக்கு வந்தார்கள்.
- நேர்வழி நடந்த கலீபாக்களுக்குப் பின்னால் வந்த ஆட்சியாளர்கள் தபால் சேவையை அறிமுகப்படுத்தினர். அறபு மொழியை அரச கரும மொழியாக்கினர். நாணயங்களை அச்சிட்டனர். இவை தவிர்ந்த இன்னும் பல அரச அலுவல்களை மேற்கொண்டனர். இந்நடவடிக்கைகளை அக்காலப்பகுதியில் வாழ்ந்த

அறிஞர்கள் எவரும் ஆட்சேபிக்கவில்லை. நலன்களை அடிப் படையாகக் கொண்டு இவை மேற்கொள்ளப்பட்டமையே அதற்குக் காரணமாகும்.

- இமாம் அபூஹனீபா பருவ வயதை அடைந்த, சித்தசுயாதீன முள்ள ஒருவர் புத்தி குறைந்தவராக இருந்தாலும் அவரது கொடுக் கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்படுவதை ஏற்க வில்லை. மனிதன் என்ற ரீதியில் அவன் மதிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையே இதற்குக் காரணமாகும். ஆனால், இதே இமாம் அபூஹனீபா வெட்கங்கெட்ட ஒருவர் மார்க்கத் தீர்ப்பு வழங்குவதை தடை விதித்தார். அறிவிலியான ஒரு வைத்தியர் மருத்துவப் பணிகளில் ஈடுபடுவதைத் தடுத்தார். அறிவிலியான ஒருவர் வாடகைக்கு விடுவதையும் தடுத்தார். நலன்களை அடிப் படையாகக் கொண்டே இம்முடிவுகளுக்கு அவர் வந்துள்ளார். பொது மக்களுக்கு இத்தகையோரால் பாதிப்பு ஏற்படக்கூடாது என்ற நோக்கிலேயே இத்தடைகளை விதித்துள்ளார்.
- திறைசேரியில் போதிய பணமில்லாத வேளையில் நாட்டின் பாதுகாப்புக்கு பணம் தேவைப்பட்டால் வரிசெலுத்த முடியு மானவர்கள் மீது மேலதிக வரி விதிப்பது கடமை எனும் மார்க்கத் தீர்ப்பை மாலிக் மத்ஹபைச் சேர்ந்த பல அறிஞர்கள் வழங்கி யுள்ளனர். அவர்களது இத்தீர்ப்புக்கு பின்னணியாக நலன்களே இருந்துள்ளன.
- நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களைக் கேடயமாகப் பயன்படுத்தி போராடுகையில், அவர்களோடு போராடுவதற்கு அம்முஸ்லிம் களைக் கொலை செய்வதைத் தவிர வேறு வழியில்லாவிட்டால் அவர்களைக் கொலை செய்ய முடியும் என்ற கருத்தை பெரும் பாலான சட்ட அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். இம்முடிவு நலன் களை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்டுள்ளது.
- ஹனபி, ஷாபிஈ மத்ஹப்களைச் சார்ந்த அறிஞர்களும், மாலிகி மத்ஹபைச் சார்ந்த அறிஞர்கள் பலரும், ஹன்பலி மத்ஹபைச் சார்ந்த அறிஞர்கள் சிலரும், ஒரு தாய் மரணித்த பின்னர் அவளது கருவறையிலுள்ள சிசுவை வெளியேற்றுவதற்காக அவளது

வயிற்றைப் பிளக்கலாம் என்கின்றனர். அச்சிசுவை உயிரோடு வெளியேற்றலாம் என்ற நிலையே பெரும்பாலும் உள்ளதாயின் அவர்கள் வயிற்றைப் பிளக்க அனுமதிக்கின்றனர். ஷரீஆ ரீதியில் மரணித்தவரது உடலுக்கு பாதிப்புகளை ஏற்படுத்துவது அனுமதிக்கப்படாதிருந்தும் கூட இவ்வாறு வயிற்றைப் பிளக்க அவர்கள் அனுமதித்துள்ளனர். சில அறிஞர்கள் ஒருபடி மேல் சென்று வயிற்றைப் பிளப்பது கடமை என்கின்றனர். ஏனெனில், மரணித்தவரது உடலின் ஒரு பாகத்துக்கு தீங்கு ஏற்படுவதன் ஊடாக இங்கு ஓர் உயிர் முழுமையாக காப்பாற்றப்படுகின்றது. ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்தவரான 'முஹத்தப்' என்ற நூலின் ஆசிரியர் இதனை ஓர் உவமையினூடாக விளக்குகிறார். ஒரு பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பிரேதத்திலிருந்து ஒரு பகுதியை சாப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. இந்நிலையில் உயிருள்ளவரது உரிமையும் மரணித்தவரது உரிமையும் ஒன்றுடனொன்று முரண்படும்போது உயிருள்ளவரது உரிமைக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். தாயின் உடலுக்கு ஏற்படுத்தப்படும் தீங்கை விட கருவறையிலுள்ள சிசுவைக் காப்பாற்றுவதன் நலனே இங்கு மிகைத்து நிற்கின்றது. இந்நிலையில் குறைந்த தீங்கு எதுவோ அதனைச் செய்து, கூடிய நலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.[4]

---

4- ஹன்பலி மத்ஹபின் கருத்துப்படி கருவறையிலுள்ள சிசுவுக்காக மரணித்த தாயின் வயிற்றைப் பிளப்பது தடை செய்யப்பட்டதாகும். ஏனெனில், கருவறையிலுள்ள சிசு உயிருடன் உள்ளது என்பது ஊகமாகும். அவ்வூகத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டவட்டமான ஹராத்தைச் செய்ய முடியாது. தாய் மரணித்திருந்தால் பெரும்பாலும் சிசு உயிரோடிருக்க மாட்டாது என்பதே வெளிப்படையான உண்மையாகும் எனவும் அவர்கள் கூறுகின்றனர். இமாம் அஹ்மத், மரணித்தவரின் எலும்பை முறிப்பது உயிருள்ளவரின் எலும்பை முறிப்பதைப் போன்றதாகும்'' (அபூதாவூத்) எனும் ஹதீஸையும் இக்கருத்துக்கு ஆதாரமாக முன்வைக்கிறார். நிர்ப்பந்தமோ, எதுவித நலனோ இன்றி மரணித்தவருக்கு தீங்கு செய்வதே தடுக்கப்பட்டுள்ளது. வயிற்றைப் பிளத்தல் என்பதில் எலும்பை முறித்தல் சம்பந்தப்படுவதில்லை'' என இதற்கு மறுப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. ''மரணித்த தாயின் வயிற்றைப் பிளந்ததன் பின்னர் கருவிலுள்ள சிசுவை உயிரோடு வெளியேற்றலாம் என்பதற்குரிய அடையாளங்கள் இருந்தால் கருவிலுள்ள சிசு துடித்துக் கொண்டிருந்தால் வயிற்றைப் பிளக்கலாம். ஏனெனில், இங்கு சிசு உயிரோடு உள்ளது என்பது ஊகமல்ல ஓர் எதிர்பார்ப்பாகும் என்ற கருத்தை இம்மத்ஹபைச் சேர்ந்த சிலர் கொண்டுள்ளனர்.

## 'மஸ்லஹா முர்ஸலா'வைக் கொண்டு ஆதாரம் பெறுவதில் நான்கு மத்ஹபுகள்

சட்ட அறிஞர்களில் சிலர் அல்குர்ஆனைப் போன்று ஹதீஸைப் போன்று, 'இஜ்மாவைப்' போன்று, 'கியாஸைப்' போன்று 'மஸ்ல ஹாவை' மார்க்கத் தீர்ப்பு வழங்குவதிலோ, சட்டத் தீர்ப்புக்களை வழங்குவதிலோ சட்டங்களை வகுப்பதிலோ அடிப்படையாகக் கொள்ள முடியுமான தனியான ஒரு சட்ட மூலாதாரமாகக் கருத வில்லை. இவர்களுக்கு உதாரணமாக இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்களைக் குறிப்பிடலாம். அவரது வார்த்தைகளில் கூறுவதாயின், மஸ்லஹா என்பது கற்பனையில் உள்ள ஒரு மூலாதாரமாகும்.

இவ்வாறு குறிப்பிட்ட இமாம் கஸ்ஸாலி பல பிரச்சினைகள் பற்றிப் பேசியுள்ளார். அவற்றுள் அநேகமானவற்றில் மஸ்லஹாவை அவர் சார்ந்திருக்கின்றார். இதனால் ஏனைய ஆதாரபூர்வமான மூலாதாரங்களோடு மஸ்லஹாவை அவர் இணைத்து அதனை ஒரு தனியான மூலாதாரமாக ஆக்க வேண்டியிருந்தது.

இவ்வாறு தனியான ஒரு மூலாதாரமாக மஸ்லஹாவைக் கையாண்டுள்ள இமாம் கஸ்ஸாலி அவ்வாறு அதனை தனியான மூலாதாரமாகக் கொள்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கின்றார். பின்னர் அவ்வாட்சேபனைக்குரிய மறுப்பையும் முன்வைக்கிறார். ''யார் அதனைத் தனியான ஒரு மூலாதாரமாக கருதுகின்றனரோ அவர்கள் தவறிழைத்து விட்டனர். ஏனெனில், மஸ்லஹா'' என்று நாம் குறிப்பிடுவது ஷரீஆவின் நோக்கங்களைப் பாதுகாத்தலுடன் தொடர்புபட்டது என்றே கூறுகிறோம். அல்குர்ஆனும், ஸுன்னாவும் இஜ்மாஃவுமே ஷரீஆவின் நோக்கங்களை அறிவதற்கான வழிமுறை களாகும். அல்குர்ஆனிலிருந்தும் ஸுன்னாவிலிருந்தும் இஜ்மாஃவி லிருந்தும் புரியப்பட்ட ஒரு நோக்கத்தைப் பாதுகாப்பதோடு தொடர்புபடாத எந்த மஸ்லஹாவாக இருந்தாலும் அது ஷரீஆவின் தொழிற்பாடுகளுடன் இணங்கிச் செல்லாத, அதற்குப் புறம்பான மஸ்லஹாவாகும். அது பிழையானதாகும். தூக்கி எறியப்பட வேண்டியதாகும். யார் இத்தகைய ஒரு மஸ்லஹாவைப் பயன் படுத்துகின்றாரோ அவர் சட்டமியற்றி விடுகின்றார்.

இஸ்திஹ் ஸானைப் பயன்படுத்துபவர் சட்டமியற்றி விடுவதைப் போன்றே இவரும் சட்டமியற்றி விடுகின்றார். ஷரீஆவின் நோக்க மொன்றைப் பேணுவதோடு சம்பந்தப்பட்ட எந்த மஸ்லஹாவாக இருந்தாலும் அது அல்குர்ஆனினால், ஸுன்னாவினால், இஜ்மாஃ வினால் ஏற்கப்பட்டதாகும். அது இம்மூலாதாரங்களுக்கு அப்பாற் பட்டதாக அமையாது. இருப்பினும், அதனை 'கியாஸ்' என்று பெயரிட்டு அழைக்க முடியாது. மாற்றமாக 'மஸ்லஹா முர்ஸலா' என்றே அதனை அழைக்க வேண்டும். ஏனெனில், கியாஸ் தனியான ஒரு சட்ட மூலாதாரமாகும்.

ஷரீஆவின் நோக்கத்தைப் பாதுகாப்பதுதான் மஸ்லஹா என நாம் விளக்குவதாயின், அதனைப் பற்றி அபிப்பிராய பேதங்களை உருவாக்கி கொள்ள வேண்டிய எத்தேவையும் கிடையாது. மாற்ற மாக அது ஒரு சட்ட மூலாதாரம் என அப்போது தாம் அதனை உறுதியாக ஏற்க வேண்டியது கட்டாயமாகும். இரு நலன்களுக்கிடை யில், இரு நோக்கங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படுகின்றபோது தான் கருத்துவேறுபாடு உருவாகும். அவ்வேளை அவ்விரண்டில் பலமானதைப் பலப்படுத்துவதே கட்டாயமானதாகும் எனவும் இமாம் கஸ்ஸாலி குறிப்பிட்டுள்ளார்.

மாலிகி மத்ஹப் மாத்திரமே மஸ்லஹாவை ஒரு சட்ட மூலாதார மாகக் கொள்கிறது என்ற கருத்து பலரிடமும் உள்ளது. மாலிக் மத்ஹபைச் சார்ந்த இமாம் ஷிஹாபுத்தீன் கராபீ (இறப்பு 684 ஹி) அக்கருத்தை ஆட்சேபிக்கிறார். ''மத்ஹபுகளை நீங்கள் எடுத்து ஆராய்ந்தால் அவை இரு பிரச்சினைகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பிடும்போது, அல்லது இணைத்து நோக்கும்போது, அல்லது பிரித்து நோக்கும் போது அவ்வாறு இணைத்தமைக்காக அல்லது பிரித்தமைக்காக ஆதாரம் தேடிக் கொண்டிருப்பது கிடையாது. மாற்றமாக இவ்விரு பிரச்சினைகளுக்கும் இடையில் காணப்படும் பொருத்தப்பாட்டை அவர்கள் போதுமான ஆதாரமாகக் கொள்கின்ற னர். இதுவே மஸ்லஹா முர்ஸலாவாகும். அப்படியாயின், இது அனைத்து மத்ஹபுகளிலும் காணப்படுகிறது'' என அவர் குறிப்பிடுகிறார்.

மேலுள்ள கருத்தே ஆய்வின்போது ஏற்கத்தக்க கருத்தாகும். மாலிகீ மத்ஹப் தவிர்ந்த ஏனைய மத்ஹபுகளின் நூல்களை வாசிக்கும் ஒருவருக்கும் நூற்றுக்கணக்கான சட்டப் பிரச்சினைகளுக்கு மஸ்லஹாவைக் காரணம் காட்டி தீர்வு முன்வைக்கப்பட்டிருப்பதைக் காண முடியுமாகும். இவ்வாறு காரணம் காட்டுகையில் ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்தவர்களை விட ஹனபி, ஹன்பலீ மத்ஹபுகளைச் சார்ந்தவர்கள் அதிகமாக மஸ்லஹாவை காரணம் காட்டியுள்ளனர்.

'இமாமுல் ஹரமைன்' என போற்றப்படும் இமாம் அப்துல் மலிக் பின் அப்துல்லாஹ் அல்ஜுவைனீ (478 ஹிஜ்ரி) தனது 'கியாஸீ' எனும் நூலில் சில விடயங்களை அனுமதித்து - மாலிகி மத்ஹபை சார்ந்தோர் அவற்றை அனுமதிப்பதில்லை - துணிச்சலாக மார்க்கத் தீர்ப்பு வழங்கியுள்ளார். அவற்றை அனுமதிப்பதற்கு மஸ்லஹாவை மாத்திரமே அவர் காரணமாகக் காட்டியுள்ளார். இவ்வாறே இமாம் கஸ்ஸாலி 'ஷிபாஉல் ஙலீல்' எனும் நூலில் இதே பணியை மேற்கொண்டுள்ளார். இவர்கள் இருவருமே மஸ்லஹா முர்ஸலா விவகாரத்தில் - மாலிக் மத்ஹபைச் சார்ந்தவர்களான எங்களைக் கடுமையாக ஆட்சேபிக்கக் கூடியவர்கள் எனவும் இமாம் கராபீ குறிப்பிடுகின்றார். இமாமுல் ஹரமைன் இமாம் கஸ்ஸாலி ஆகியோர் ஷாபிஈ மத்ஹபை சார்ந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இமாம் கஸ்ஸாலி தனது 'முஸ்தஸ்பா' ''எனும் நூலில் மஸ்லஹா முர்ஸலாவைப் பயன்படுத்துவதனைக் கஷ்டப்படுத்தியிருக்கின்றார். அம்மூலாதாரத்தைப் பயன்படுத்த அவர் இட்டிருக்கும் நிபந்தனைகள் இலகுவில் பூர்த்தி செய்ய முடியுமானவையல்ல. அந்நிபந்தனைகள் பின்வருமாறு:-

1- அத்தியவசியமான நலனாக அது இருக்க வேண்டும். அதாவது மனிதனது மார்க்கம், சந்ததி, உயிர், அறிவு, செல்வம் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட ஒரு நலனாக அது காணப்பட வேண்டும். தேவைகளுடன் சம்பந்தப்பட்ட ஒரு நலனாக அல்லது மேலதிக தேவைகளுடன் தொடர்புபட்ட ஒரு நலனாக அது

இருந்தால் அதனைக் கருத்தில் கொள்ள முடியாது. இந்நலன்கள் அத்தியவசியமானவையல்ல.

2- முஸ்லிம்கள் அனைவருடனும் சம்பந்தப்பட்ட நலனாக இருக்க வேண்டும். சிலருக்கு மாத்திரம் பயனளிக்கும் நலனை அல்லது குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் பயன்படும் நலைனக் கருத்திற் கொள்ள முடியாது.

3- அந்நலன் திட்டவட்டமானதாக இருக்க வேண்டும் அல்லது ஓரளவேனும் உறுதியானதாக இருக்க வேண்டும்.

இமாம் குர்துபீ, மஸ்லஹா முர்ஸலா குறித்த இந்நிபந்தனை களைப் பூர்த்தி செய்திருந்தால் அதனைக் அங்கீகரிப்பதில் கருத்து வேறுபாடு கொள்ள வேண்டிய அவசியமில்லை என்கிறார். இமாம் இப்னுல் முனீரின் பார்வையில் இந்நிபந்தனைகள் அவற்றை முன்வைத்தவரது சுயவிருப்பின் பேரில் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் மட்டுமே.

ஸஹாபாக்களது நடவடிக்கைகளை நோக்குகையில், அவர்கள் இத்தகைய நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை என்பதனைத் தெளிவாக உணரலாம். மஸ்லஹா கிளையம்சங்களுடன் சம்பந்தப் பட்டதாக இருந்தாலும் சரியே, தேவைகளுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரியே, திட்டவட்டமானதாக இல்லாவிட்டாலும் சரியே அவர்கள் அதனை ஏற்றுக் கொள்பவர்களாகவே காணப் பட்டனர்.

உமர் (றழி) அவர்கள் காணாமல் போயுள்ள மனிதனின் மனைவி நான்கு வருடங்களின் பின் - காணாமல் போய் நான்கு வருடங்களின் பின் அல்லது நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்து நான்கு வருடங்களின் பின் - விவாகரத்து பெற்றவளாக கருதப்படுவாள் என தீர்ப்பு வழங்கினார்கள். மனைவியின் நலனைக் கருத்திற் கொண்டும், அவளுக்கு தீங்கு நிகழ்வதைத் தடுக்கும் நோக்கிலும் தான் இத்தீர்வு வழங்கப்பட்டுள்ளது. அவளது கணவன் மரணித்து விட்டதாக இங்கு நிச்சயிக்கப்படவில்லை. எனவே, இங்கு கருத்திற் கொள்ளப்பட்டி ருக்கும் நலன் ஒரு துணை நலனே, தேவையுடன் தொடர்புபடும்

ஒரு நலனே, உறுதிப்படுத்தப்படாத ஒரு நலனே. உமர் (றழி) அவர்களது இத்தீர்ப்பை உஸ்மான் (றழி), அலி (றழி), இப்னு உமர் (றழி), இப்னு அப்பாஸ் (றழி) ஆகியோரும், தாபிஈன்களில் ஒரு கூட்டத்தினரும் ஒத்துக் கொள்கின்றனர்.

உமர் (றழி) அவர்கள் முஹம்மத் பின் மஸ்லமா (றழி) அவர்களுக்கு எதிராக, ழஹ்ஹாக் பின் கைஸ் (றழி) அவர்களுக்கு சாதகமாக ஒரு தீர்ப்பை வழங்கினார்கள். ழஹ்ஹாக், மஸ்லமாவின் அயலவராகக் காணப்பட்டார். மஸ்லமாவின் தோட்டத்தில் ஒரு வாய்க்காலை வெட்டி அதனூடாக தனது தோட்டத்துக்கு நீர் பாய்ச்ச உமர் (றழி) அவர்கள் ழஹ்ஹாகுக்கு அனுமதி வழங்கினார்கள். ஏனெனில், வாய்க்கால் மஸ்லமாவின் அயலவருக்கு பயனுள்ளதாக அமையும். அதேவேளை அதனால் மஸ்லமாவுக்கு எந்த தீங்கும் விளையப் போவதில்லை. அப்படியிருந்தும் மஸ்லமா அதற்கு அனுமதி வழங்காது மறுத்து வந்தபோதே உமர் (றழி) அவர்கள் இத்தீர்ப்பை வழங்கினார்கள். ழஹ்ஹாக், மஸ்லமாவை நோக்கி: அதனைச் செய்யவிடாது நீர் என்னைத் தடுக்கின்றீர். அது உமக்கும் பயனுள்ளது தானே!'' எப்போதும் நீர் அதிலிருந்து நீர் பாய்ச்சலாம். அதனால், உமக்கு தீங்கு நிகழப் போவதில்லை எனக் கூறினார். இருவரும் உமர் (றழி) அவர்களிடம் சென்று தீர்வை வேண்டி நின்றபோது, மஸ்லமாவை நோக்கி உமர் (றழி) அவர்கள், உமது சகோதரருக்கு பயனளிக்கின்ற, உமக்கு தீங்கிழைக்காத ஒரு விடயத்தையிட்டு அவரைத் தடுக்கின்றீரா?! என வினவினார்கள். அப்போதும், அனுமதி வழங்க முடியாது என்ற கருத்திலேயே மஸ்லமா விடாப்பிடியாக இருந்தார். அவ்வேளை, உமர் (றழி) அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர் வாய்க்காலை வெட்டி நீரை ஓட்டிச் செல்வார். அது உமது வயிற்றின் மேலால் வெட்டப்பட்டாலும் சரியே! என்று குறிப்பிட்டார்கள். பின்னர் மஸ்லமாவின் தோட்டத்தில் வாய்க்காலை வெட்டி நீரை ஓட்டிச் செல்லுமாறு அவர்கள் ழஹ்ஹாகைப் பணித்தார்கள். அவரும் அதனைச் செய்து முடித்தார்.

இவ்விடயத்தில் நேர்வழி நடந்த ஸஹாபாக்களின் வாழ்வில் ஏராளமான உதாரணங்கள் காணப்படுகின்றன. எனவேதான் இமாம் ஷாதிபீ மஸ்லஹா முர்ஸலாவுக்கு இமாம் கஸ்ஸாலி விதித்த எந்த நிபந்தனையையும் விதிக்க முற்படவில்லை. மாற்றமாக, மஸ்லஹாவை பயன்படுத்தும்போது மூன்று அம்சங்களைக் கட்டாயம் கருத்தில் கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டார். அவை யாவன:

1- அக்குறிப்பிட்ட மஸ்லஹாவானது அறிவுக்கு ஏற்றதாக அமைய வேண்டும். அதனை முன்வைக்கும் போது பகுத்தறிவு அதனை மறுக்காது ஏற்றுக் கொள்ளும் நிலை இருக்க வேண்டும். அதாவது, வணக்க வழிபாடுகளுடன் சம்பந்தப்பட்டதாக அம்மஸ்லஹா இருக்கக் கூடாது. ஏனெனில், வணக்கங்களைப் பொறுத்தவரையில் அடிப்படை, உள்ளதை உள்ளவாறு ஏற்றுக் கொள்ளலாகும்.

2- மொத்தமாக நோக்குகையில் ஷரீஆவின் நோக்கங்களுடன் இணங்கிச் செல்லக்கூடியதாக அக்குறிப்பிட்ட மஸ்லஹா அமைய வேண்டும். ஷரீஆவின் எந்த மூலாதாரத்துடனும் அது முரண்படக் கூடாது. அவ்வாறே திட்டவட்டமான ஆதாரமொன்றுடன் அது முரண்படக்கூடாது. மாற்றமாக ஷரீஆ ஏற்படுத்த விரும்புகின்ற நலன்களுடன் இணங்கிச் செல்லக்கூடியதாக, அவற்றின் பாற்பட்டதாக, அல்லது அவற்றுக்கு நெருங்கியதாக அது இருக்க வேண்டும். அவற்றை விட்டு அந்நியமானதாக அது இருக்கக் கூடாது. அது சம்பந்தமாக குறிப்பான ஆதாரம் இல்லாமை ஒரு பிரச்சினையல்ல.

3- அத்தியாவசியமான ஓர் அம்சத்தின் பாதுகாப்புடன் சம்பந்தப் பட்டதாக அல்லது மார்க்கத்தில் தொடர்ந்து நிலவும் ஒரு கஷ்டத்தை நீக்குவதுடன் சம்பந்தப்பட்டதாக அது இருக்க வேண்டும்.

அத்தியவசியமான ஓர் அம்சத்தின் பாதுகாப்புடன் சம்பந்தப் படுதல் என்பதை நோக்குகையில், அக்குறிப்பிட்ட நலனானது

''கடமையைப் பரிபூரணப்படுத்த அவசியமான அனைத்தும் கடமை'' எனும் பிரிவில் அடங்குகிறது. எனவே, அது நோக்கத்தை அடைவதற்கான வழிமுறைகளில் அடங்கக் கூடியதே. நோக்கங்களில் அடங்கக் கூடியதல்ல.

தொடர்ந்து நிலவும் ஒரு கஷ்டத்தை நீக்குதலுடன் சம்பந்தப் படுதல் என்பதன் பொருளை நோக்குகையில், அக்குறிப்பிட்ட நலனானது அத்தியாவசிய நலன்களுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும் அல்லது தேவை சார்ந்த நலன்களுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும். அவ்வாறாயின் அது கஷ்டத்தைத் தணித்தலை, இலகு படுத்தலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மேல் நோக்கியவற்றில் இருந்த மஸ்லஹாவை ஏற்க அது கட்டாயம் அத்தியாவசிய நலன்களுடன் சம்பந்தப்பட்டதாக அமைய வேண்டும் என்ற இமாம் கஸ்ஸாலியின் நிபந்தனை ஏற்கத்தக்க தல்ல. மஸ்லஹாவானது தேவைசார் நலன்களுடன் சம்பந்தப்பட்ட தாக இருந்தாலும் அதனை ஏற்கலாம். மனிதர்களுக்கு இலகுபடுத்திக் கொடுக்கவும், அவர்களை விட்டும் கஷ்டங்களை அகற்றவும் இடையூறுகளை நீக்கவும் இவ்வகை மஸ்லஹாவை கருத்திற் கொள்வது உதவியாக அமையும்.

அவ்வாறே மஸ்லஹாவைக் கருத்திற் கொள்ள, அது அனைவருக்குமே பொதுவானதாக நன்மை பயக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்ற நிபந்தனையும் ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில், தனி மனிதர்களின் நலன்களைக் கருத்திற் கொள்ளலும், வித்தியாசமான குழுக்க்ளின் நலன்களைக் கருத்தில் கொள்ளலும் ஷரீஆவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களே.

அத்தோடு மஸ்லஹா திட்டவட்டமானதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் ஏற்கத்தக்கதல்ல. கிளையம்சங்களுக்கான சட்டங்களைப் பொறுத்தவரையில், ஷரீஆவானது அநேகமான இடங்களில் பலமான எண்ணத்தின் அடிப்படையில் தொழிற்பட இடமளித்துள்ளது.

கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விடயம் உண்டு. மஸ்லஹா நிஜமானதாக இருக்க வேண்டும். ஊகமாக, பிரமையாக அது இருக்கக் கூடாது என்பதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். சில மனிதர்களுக்கு அவர்களிடமுள்ள விருப்ப மும், மனோஇச்சையும் அல்லது ஊகமும், பிழையான சிந்தனையும் அல்லது பழக்கமும் வழக்காறும் குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்வது நன்மை பயக்கக் கூடியது என உணர்த்தலாம். ஆனால், உண்மையில் அச்செயல் தீமையானதாக இருக்கும். அல்லது அதனால் வரும் நன்மையை விட தீங்கு அதிகமானதாக இருக்கும். மனிதர்கள் அநேகமாக தமது சுயநலன்களுக்காக பொது நலன் களைப் புறக்கணித்து விடுகின்றனர். அல்லது, உடனடியாக கிட்டுகின்ற நலனை அடைவதற்காக பின்னால் வரவிருக்கும் தீங்குகளைப் பற்றி அலட்டிக்கொள்ளாது இருந்து விடுகின்றனர். அல்லது சடவாத நலன்களுக்காக மானசீக ரீதியான நஷ்டங்களை யிட்டு பொடுபோக்காக இருந்து விடுகின்றனர். அல்லது, சிறிய ஒரு நலனுக்காக பெருந்தீமைகளையிட்டு கவனயீனமாக இருந்து விடுகின்றனர். மனித சிந்தனையில் தனிப்பட்ட பெறுமானங்கள், காலத்துடன், இடத்துடன் சம்பந்தப்பட்ட பெறுமானங்கள், சட ரீதியான பெறுமானங்கள் என்பன அழுத்தத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. எனவே, மஸ்லஹாக்களைப் பற்றி ஆராயும் போது அவற்றை சரியாக, நீதியான முறையில் மதிப்பிடுகின்ற போது முன்னெச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருப்பது அவசியமாகும்.(5)

இமாம் இப்னு தகீக் அல்ஈத், ''மஸ்லஹா எனும் மூலாதாரத்தை ஏற்றுக் கொண்டவர்களை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அதனைத் தொடர்ந்து கையாள்வதற்கும், அதனை மிகவும் சரியாக பயன்படுத்துவதற்கும் சரியான சிந்தனை அவசியமானதாகும்'' என குறிப்பிடுகின்றார்.

முக்கியமான ஓர் உண்மையை இங்கு கோடிட்டுக் காட்டுவது அவசியமாகும். குறிப்பிட்ட ஒரு நலனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டம் அந்நலன் இருக்கும் வரையே

செல்லுபடியானதாகும். ஏனெனில், அந்த சட்டத்துக்கு அடிப்படை யாக அமைந்திருப்பது, காரணியாக அமைந்திருப்பது அக்குறிப் பிட்ட நலன் தான். எனவே, அந்நலன் காணப்படாதபோது அதற்கேற்ப சட்டமும் மாறுபடுவது அத்தியாவசியமானதாகும். சட்டம் எப்போதும் காரணத்துடன் தொடர்புபட்டிருக்கும். அது இருந்தால் சட்டம் இருக்கும். அது இல்லாவிடில் சட்டமும் இருக்காது என்பதே அவ்வுண்மையாகும்.

---

5- சட்ட, மார்க்கத் தீர்ப்புக்களை வழங்குபவர்களும் சட்டங்களை வரையறுப்பவர்களும் ஏற்று நடக்கும் வகையில் மஸ்லஹாவுக்கான ஷரீஆ ரீதியான வரையறைகளை இட இமாம் கஸ்ஸாலி தனது, முஸ்தஸ்பாஎனும் நூலில் முனைந்துள்ளார்.

மஸ்லஹா என்பது அடிப்படையில் நன்மைக்கு காரணமாக அமைவதைக் குறிக்கின்ற அல்லது தீங்கைத் தடுப்பதைக் குறிக்கின்ற ஒரு பதமாகும். இங்கு நாம் மஸ்லஹா என்பதன் மூலம் அக்கருத்தை நாடவில்லை. மாற்றமாக மஸ்லஹா என்பதன் மூலம் நாம் இங்கு நாடுவது ஷரீஆவின் நோக்கத்தைப் பேணுதல் என்பதனைத்தான். மனிதர்களைப் பொறுத்தவரையில் ஷரீஆவின் நோக்கங்கள் ஐந்து. அவையாவன: அவர்களது மார்க்கத்தைப் பாதுகாத்தல், உயிரைப் பாதுகாத்தல், அறிவைப் பாதுகாத்தல், சந்ததியைப் பாதுகாத்தல், செல்வத்தைப் பாதுகாத்தல். இவ்வைந்து அடிப்படை அம்சங்களினதும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கின்ற அனைத்துமே மஸ்லஹாதான். இவற்றின் பாதுகாப்பை இல்லாதொழிக்கும் எதுவாக இருந்தாலும் அது தீமையே அதனைத் தவிர்ப்பது மஸ்லஹாவாகும். இவ்வைந்தையும் பாதுகாத்தல் அத்தியவசியமான நலன்களின் தரத்தில் அடங்கும். மஸ்லஹாக்களில் (நலன்களில்) மிக உயர்ந்த தரத்தில் இருப்பவை அத்தியாவசியமான இந்நலன்கள்தான்.

இவ்வரையறை மஸ்லஹாவை அத்தியாவசியமான நலன்களோடு சுருக்கியுள்ளது. தேவைகளுடன் சம்பந்தப்பட்ட மஸ்லஹா பற்றியோ, மேலதிக அழகுபடுத்தல்களுடன் தொடர்புடைய மஸ்லஹா பற்றியோ பேசாது அவற்றை இது புறக்கணித்துள்ளது என்றொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அத்தியாவசியமான நலன்களை மட்டுமன்றி தேவைகள் சார் நலன்களையும் மேலதிக தேவைகளுடன் தொடர்பான நலன்களையும் ஷரீஆ அடையவே விரும்புகின்றது. மனிதர்களுக்கு இலகுவையே அது நாடுகின்றது. கஷ்டங்களை அகற்ற முனைகிறது. ஒழுங்குகளிலும் பண்பாடுகளிலும் முறைமைகளிலும் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளிலும் மிகச் சிறந்த வழிமுறை களின் பால் அவர்களுக்கு வழிகாட்டவே அது விரும்புகிறது. இவையனைத்துமே அத்தி யாவசிய நலன்களை மட்டுமன்றி தேவைசார் நலன்களையும் மேலதிக தேவைகளுடன் சம்பந்தமான நலன்களையும் கூட ஷரீஆ கருத்தில் கொள்கிறது என்பதற்குரிய ஆதாரங்களாகும்.

எனவே, மஸ்லஹா என்றால் ஷரீஆவின் நோக்கத்தைப் பாதுகாத்தல் என வரைவிலக் கணப்படுத்துதல் சரியானதே. ஆனால், அதனை அத்தியாவசிய நலன்களைப் பாது காத்தலுடன் மாத்திரம் சுருக்கிவிடுவது ஏற்கத்தக்கதல்ல.

இவ்வாறான சட்டங்களுக்கு உதாரணமாக தஃஸீர் தண்டனைகள், தற்காலிக நிர்வாகத் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நான்கு கலீபாக்களிடமிருந்தும், இதர ஸஹாபாக்களிடமிருந்தும் இத்தகைய சட்டங்கள் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளன. நபி (ஸல்) அவர்களிடமிருந்தும் இத்தகைய சில சட்டங்கள் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் நபி (ஸல்) அவர்கள் ஹதீஸ்களை எழுதுவதைத் தடுத்தார்கள். அல்குர்ஆனுடன் ஹதீஸ் கலந்துவிடும் என்ற அச்சமே அதற்குக் காரணமாக அமைந்தது.

உமர் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களது ஹதீஸ்களை அறி விப்பதைக் குறைத்துக் கொள்ளுமாறு ஸஹாபாக்களைக் கட்டாயப் படுத்தினார்கள். அல்குர்ஆனை விட்டுவிட்டு ஹதீஸில் மூழ்கிவிடு வதை கட்டுப்படுத்தவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஹஜ் காலத்தில் இப்ராத் முறைப்படி மனிதர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றுவது பொருத்தம் என்பது உமர் (றழி) அவர்களது தெரிவாகக் காணப்பட்டது. ஏனைய மாதங்களில் உம்ராவை அவர்கள் நிறைவேற்றுவதன் மூலம் எல்லாக் காலங்களிலும் கஃபாவை நோக்கி மக்கள் வருகை தர வழிசெய்ய வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது.

இமாம் இப்னுல் கையிம் அவர்கள் குறிப்பிடுவதனைப் போல இவையும், இவ்வாறான ஏனைய சட்டங்களும் நலன்களைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, கிளையம்சங்களுடன் தொடர்புடைய நிர்வாக நடவடிக்கைகளாகும். இவை கால மாற்றங்களுக்கு ஏற்ப வேறுபடும். சிலர் இவற்றை மறுமைநாள் வரை முழு சமூகமும் கட்டாயம் பின்பற்ற வேண்டிய சட்டங்கள் என எண்ணுகின்றனர். ஒவ்வொருவருக்கும் அதற்குரிய நியாயம் உண்டு கூலியும் உண்டு. அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவதற்காக இஜ்திஹாத் பணியில் ஈடுபடுபவர் ஒரு கூலிக்கும் இரண்டு கூலிகளுக்கும் இடையில் தான் சுழன்று கொண்டிருக்கிறார்.

காலத்துடன் தொடர்புடைய நலன்கள், சூழலுடன் தொடர் புடைய நலன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டங்கள் காலம், இடம், சூழல் மாறுபடுவதற் கேற்ப மார்க்கத் தீர்ப்புக்கள் மாறுபட காரணமாக அமைகின்றன. இதுபற்றிய விளக்கம் பின்னர் இடம்பெறவுள்ளது.

## 4 - உர்ப்:

வெறுமையான இப்பகுதியில் வழக்காறு அதிகமாக பயன்படுத்து வதற்கு சாத்தியப்பாடு காணப்படுகின்றது. உர்ப் (வழக்காறு) என்பதன் மூலம் வாழ்க்கை விவகாரங்களில் மனிதர்களுக்கு மத்தி யில் வழக்கத்திலுள்ள, அவர்கள் அங்கீகரிக்கின்ற ஒரு விடயத்தையே நாடுகிறோம். அவ்விடயம் அவர்களுக்கு நன்கு பரிச்சயமானதாக, அறியப்பட்டதாக இருக்கும். அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டும் இருப்பார்கள். இவ்வாறான வழக்காறு, வார்த்தைகளுடன் சம்பந்தப் பட்டதாக இருக்கலாம் அல்லது செயல்களுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். பொதுவானதாக இருக்கலாம் அல்லது குறிப்பானதாக இருக்கலாம்.

பொதுவாக, மனிதர்கள் மீனுக்கு இறைச்சி என்ற சொல்லைப் பாவிப்பதில்லை. அவ்வாறே, அறபுமொழியில் 'வலத்' என்ற சொல் ஆண் பிள்ளையையும் குறிக்கும் பெண் பிள்ளையையும் குறிக்கும். இருப்பினும், ஆண் பிள்ளையைக் குறிக்க இச்சொல்லைப் பாவிப் பதே வழக்காறாக காணப்படுகிறது. இவை, வார்த்தைகளுடன் தொடர்புடைய வழக்காறுகளுக்கான சில உதாரணங்களாகும்.

செயலுடன் தொடர்புடைய வழக்காறுகளுக்கு பின்வரும் உதாரணத்தைக் கூறலாம். 'ஈஜாப் - கபூல்' வார்த்தைகளைப் பிரயோ கிக்காமலே வியாபாரம் இடம்பெறுகிறது. வியாபாரிக்கும் கொள்வனவு செய்பவனுக்கும் இடையில் இடம்பெறும் பரிமாற்றல் நடவடிக்கையை வியாபாரம் இடம்பெற்று விட்டதற்கான அடையாளமாகவே வழக்காறு கருதுகிறது.

பொதுவான வழக்காறு என்பதன் மூலம் எல்லா நாடுகளிலும், அனைத்துப் பிரதேசங்களிலும், சமூகத்தின் அனைத்து மட்டங்

களிலும். மனிதர்கள் அனைவரிடத்திலும் காணப்படும் வழக்கமே நாடப்படுகிறது.

குறிப்பான வழக்காறு என்பதன் மூலம் சில பிரதேசங்களில், சில நாடுகளில் அல்லது சில பிரிவினர்களிடத்தில் காணப்படும் வழக்காறு நாடப்படுகிறது. வியாபாரிகளிடத்தில் காணப்படும் துறைசார்ந்த வழக்காறு, விவசாயிகளிடத்தில் காணப்படும் துறை சார்ந்த வழக்காறு போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இஸ்லாத்தின் வருகையின்போது அரபு சமூகத்தில் பல்வேறு பட்ட வழக்காறுகள் காணப்பட்டன. அவற்றுள் பொருத்தமான வற்றை தனது இலக்குகளோடு கொள்கைகளோடு ஒத்துச் செல்லக்கூடியவற்றை இஸ்லாம் அங்கீகரித்தது. ஏனையவற்றை அது நிராகரித்தது. சில வழக்காறுகளில் தனது போக்குக்கும் இலக்கு களுக்கும் ஏற்ப இணைந்து செல்லக்கூடிய வகையில் திருத்தங் களையும் மாற்றங்களையும் செய்தது.

அநேகமான விடயங்கள் உள்ளன. அவற்றை ஷரீஆ திட்டவட்ட மாக வரையறுக்கவில்லை. தேக்க நிலைக்கு உட்படுத்தவில்லை. மாற்றமாக அவற்றிலே தீர்ப்புச் சொல்கின்ற உரிமையை, அவற்றுக்கு உரிய வரம்புகளை வரையறுத்து விரிவாக அவை பற்றி விளக்கும் உரிமையை வழக்காறுக்கு அது வழங்கியுள்ளது. உதாரணமாக கீழ்வரும் அல்குர்ஆன் வசனங்களை நோக்குங்கள்.

''அத்தாய்மார்களுக்கு நல்ல முறையில் உணவளிப்பதும் உடை கொடுப்பதும் குழந்தைகளின் தந்தையர்க்குரிய பொறுப்பாகும்.'' *(2:233)*

''இவ்வாறே 'தலாக்' சொல்லப்பட்ட பெண்களுக்குப் பொருத்த மாக ஏதேனும் வழங்கி அவர்களை அனுப்பிட வேண்டும்.'' *(2:241)*

பெண்ணுக்குரிய செலவை வரையறுப்பதில் வழக்காறு தான் செல்வாக்குச் செலுத்துகிறது. அவ்வாறே தலாக் சொல்லப்பட்ட பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டியதைத் தீர்மானிப்பதும் வழக்காறு தான்.

- **ஹதீஸ்களிலும் இதற்கான உதாரணங்கள் உள்ளன.**

- வியாபாரிகள் இருவரும் பிரியாத வரை அவர்களுக்குத் தெரிவுச் சுதந்திரம் உண்டு (புகாரி, முஸ்லிம்) இந்த ஹதீஸில் காணப்படும் 'பிரிதல்' என்பதன் கருத்தை வழக்காறே தீர்மானிக்க வேண்டும்.
- ''யார் ஒரு தரிசு நிலத்தை உயிர்ப்பிக்கின்றாரோ அது அவருக்குச் சொந்தமானதாகும்.'' (அபூதாவூத், திர்மிதி)

இந்த ஹதீஸில் காணப்படும் உயிர்ப்பித்தல் எனும் பதத்தின் பொருளையும் வழக்காறுதான் தீர்மானிக்க வேண்டும்.

- அவ்வாறே, களவுக்கு தண்டனை வழங்குகையில் பொருள் உரிய விதத்தில் பாதுகாக்கப்பட்டிருந்தது என்பதனைத் தீர்மானிக்க வழக்காறின் உதவியே பெறப்படும்.
- வியாபாரத்தில், நன்கொடையில் 'கையேற்றல்' என்பதன் கருத்து வழக்காறின் மூலமே தீர்மானிக்கப்படுகிறது.

மேலுள்ள உதாரணங்களில் ஷரீஆ சட்டங்களைச் சொல்லி உள்ளது. ஆனால், அவற்றை அது விளக்கவில்லை. எனவே, அவற்றை விளக்கும் பொறுப்பு வழக்காறுக்கு விடப்பட்டுள்ளது என்பதற்கு இது ஆதாரமாக அமைகிறது. இக்கருத்தையே இமாம் இப்னு குதாமா அவர்களும் ஏனைய ஹன்பலீ மத்ஹப் சட்ட அறிஞர்களும் கொண்டுள்ளனர்.

பொதுவாக, சட்ட அறிஞர்கள் வழக்காறைப் பற்றி சிலாகித்துப் பேசியுள்ளனர். அதன் அடிப்படையில் அநேக சட்டங்களை உரு வாக்கி உள்ளனர். தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக ''முஸ்லிம்கள் எதனை சிறந்தது எனக் கருதுகின்றார்களோ அது அல்லாஹ் விடத்திலும் சிறந்ததாகும்'' (அஹ்மத்)[6] என்ற இப்னு மஸ்ஊத், (றழி) அவர்களது அறிவிப்பை முன்வைக்கின்றனர்.

---

6- இமாம் அஹ்மத் ஸுன்னா என்ற தமது நூலிலேயே இவ்வறிவிப்பைப் பதிவு செய்துள்ளார். சிலர் 'முஸ்னத்' என்ற நூலில் இது இடம் பெற்றுள்ளதாக ஊகிக்கின்றனர். அந்நூலில் இவ்வறிவிப்பு இடம்பெறவில்லை. பஸ்ஸார், தயாலஸீ, தபரானீ, அபூ நுஐம், பைஹகீ (இஃதிகாத்) போன்ற இமாம்களும் இந்த அறிவிப்பைப் பதிவு செய்துள்ளனர். இவர்கள் அனைவருமே இப்னு மஸ்ஊத் (றழி) அவர்களது கருத்தாகவே இதனைப் பதிவுசெய்துள்ளனர். இவ்வறிவிப்பு நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் வாயிலாகவும் வந்துள்ளது. ஆனால், அவ்வறிவிப்பின் அறிவிப்பாளர் வரிசை மிகவுமே பலவீனமானதாகும். (பார்க்க: கஷ்புல் கபாஇ வ முஸீலுல் இல்பாஸ், ஹதீஸ் இலக்கம் 2214)

அவர்களில் சிலர் இதனை நபி (ஸல்) அவர்களது கூற்று என எண்ணுகின்றனர். உண்மையில் இது இப்னு மஸ்ஊத் (றழி) அவர்களது கருத்தாகும்.

வழக்காறுடன் தொடர்பான பிரபல்யமான ஒரு சட்ட விதி காணப்படுகிறது.

- வழக்காறு சட்டமாக்கப்படும் இவ்விதியிலிருந்து இன்னும் சில விதிகள் பெறப்படுகின்றன.
- வழக்காறின் மூலம் ஏற்கப்பட்டவை நிபந்தனை மூலம் ஏற்கப்பட்டவைக்கு சமமானவையே''
- வழக்காறின் மூலம் நிச்சயிக்கப்படுபவை வசனத்தின் மூலம் நிச்சயிக்கப்படுபவற்றிற்கு சமமானவையே''
- வழக்காறில் தவிர்க்கப்படுபவை யதார்த்தத்தில் தவிர்க்கப்படு பவற்றிற்கு சமமானவையே''

பிக்ஹ் சம்பந்தமாக கவிதை எழுதிய ஒரு கவிஞர், ஷரீஆவில் வழக்காறுக்கு ஒரு பெறுமானம் உண்டு. இதனாலேயே சிலவேளை அதனடிப்படையில் சட்டம் பெறப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

மனித வழக்காறை இத்தகைய இடங்களில் கருத்தில் கொள்வது மனித நலனைக் கருத்திற் கொள்வதாகவும் அமைகின்றது.

ஏனெனில், மனிதர்களுக்கு பரிச்சயமானவற்றை அவர்களது வழக்கத்தில் உள்ளவற்றை அங்கீகரிப்பதே அவர்களுக்கு நலன் பயப்பதாக இருக்கும். காலாகாலமாக, பரம்பரை பரம்பரையாக அதேநிலையில் அவர்கள் தொடர்ந்து இருந்திருப்பார்கள். எனவே, அவர்களது வழக்காறுகளில் அவர்கள் தொடர்ந்து தங்கியிருப்ப தானது அவர்களது சமூகத் தேவைகளில் ஒன்றாக மாறியிருக்கும். அவற்றை விட்டுவிடுவது அவர்களுக்குச் சிரமமானதாக இருக்கும். அவற்றை விட்டுவிடுவதானது அவர்களை சங்கடங்களுக்கு உள்ளாக்குவதாக அமையும்.

இஸ்லாம் இலகுபடுத்தும் மார்க்கம். சமூகத்தை விட்டு சிரமங்களை சங்கடங்களைக் களைகின்ற மார்க்கம். ''அல்லாஹ் உங்களுக்கு இலகுவை விரும்புகிறான். அவன் உங்களுக்கு கஷ்டத்தைத் தர விரும்பவில்லை.'' *(2:185)*

''அவன் உங்களைத் தேர்ந்தெடுத்துள்ளான். மேலும் அவன் மார்க்கத்தில் உங்களுக்கு எதுவித சிரமத்தையும் வைத்திடவில்லை.'' *(22:78)*

நபி (ஸல்) அவர்கள் ''நீங்கள் இலகுபடுத்துபவர்களாகவே அனுப் பப்பட்டுள்ளீர்கள் கஷ்டப்படுத்துபவர்களாக நீங்கள் அனுப்பப்பட வில்லை.'' *(அறிவிப்பாளர்: அபூஹுரைரா (றழி), ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)* எனக் குறிப்பிட்டார்கள்.

வழக்காறு திட்டவட்டமான குர்ஆன் வசனத்துடன், ஹதீஸுடன் முரண்படாதபோது அல்லது உறுதியான இஜ்மாஃவுடன் முரண் படாதபோதுதான் ஏற்கப்படும். அவ்வாறே அதனால் முழுமையாக தீங்குதான் நேரும் அல்லது பெரும்பாலும் தீங்கு நேரும் என்ற நிலை காணப்படாத போதே அது ஏற்கப்படும். தடுக்கப்பட்டதை ஆகுமாக்குகின்ற அல்லது கடமைகளை செயலிழக்கச் செய்கின்ற, அல்லது பித்அத்துக்களை அங்கீகரிக்கின்ற, அல்லது உலகில் தீமையையும் சீர்கேட்டையும் பரப்புகின்ற அல்குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் முரணான வகையில் அமைகின்ற வழக்காறுகளுக்கு எதுவித பெறுமானமும் கிடையாது. மார்க்கத் தீர்ப்பு, நீதிமன்றத் தீர்ப்பு, சட்டமாக்கல் போன்ற பணிகளின்போது இத்தகைய வழக்காறுகள் கருத்திற் கொள்ளப்படக் கூடாது.

வழக்காறின் அடிப்படையில் உருவாகிய சட்டங்கள் கால, இட, வேறுபாடுகளுக்கு அமைய மாறுபட்டு அமையலாம். இடம் வேறுபடுவதற்கு ஏற்ப சட்டம் வேறுபடுவதற்கு, இமாம் ஷாதிபீ தலையைத் திறப்பதனை உதாரணமாகக் குறிப்பிடுகிறார். ''உண்மையில் இதுபற்றிய சட்டம் இடங்களைப் பொறுத்து வேறுபட்டு அமையும். சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவர்கள் தலையைத் திறப்பதனை பண்பாடான ஒரு செயலாக கீழைத்தேய

நாடுகள் காண்பதில்லை. மேற்கு நாடுகள் அதனை பண்பாடற்ற ஒரு செயலாகக் கருதுவதில்லை. எனவே, வழக்காறு மாறுபடுவதற்கு ஏற்ப இங்கு சட்டமும் மாறுபடுகிறது. தலையைத் திறப்பது கீழைத் தேய மக்களிடம் நம்பகத்தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு செயலாகக் கருதப்படுகிறது. ஆனால், மேற்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதனை அவ்வாறு கருதவில்லை'' என அவர் குறிப்பிடுகிறார்.

கால மாற்றங்களுக்கு ஏற்ப சட்டம் மாறுபடுவதற்கு இமாம் மாலிக் வாயிலாக இமாம் கராபீ தமது 'இஹ்காம்' எனும் நூலில் குறிப்பிடுகின்ற பின்வரும் உதாரணத்தைக் கூறலாம். உறவு கொண்டதன் பின்னர் மஹர் சம்பந்தமாக தம்பதியர் முரண்பட்டுக் கொண்டால் கணவனின் கருத்தே ஏற்கப்படும். மஹர் கையேற்கப் படவில்லை என்பது தான் அடிப்படையானதாக இருந்தாலும் அதனைத்தான் நிறுவ வேண்டியிருந்தாலும் கொடுத்ததாக கணவன் கூறும் கூற்றே இங்கு ஏற்கப்படுகிறது.

மாலிக் மத்ஹபைச் சார்ந்த காழீ இஸ்மாஈல் மேலுள்ள உதாரணத்தை விளக்கியுள்ளார். கணவன் மஹரை முழுமையாக செலுத்தாத வரையில் மனைவியுடன் உறவு கொள்ளாதிருப்பது அன்று மதீனாவில் அவர்களிடம் காணப்பட்ட வழக்காறாகும். தற்போது அவர்களது வழக்காறு அதற்கு மாற்றமாகவுள்ளது. எனவே, தற்போது வழக்காறு வேறுபட்டிருப்பதன் காரணமாக சத்தியத்துடன் மனைவியின் கூற்றையே ஏற்க வேண்டியுள்ளது என அவர் குறிப்பிடுகிறார்.

குறிப்பான வழக்காறைக் கருத்திற் கொண்டு, அதன் அடிப்படையில் பேரறிஞர் இப்னு நஜீம் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''கெய்ரோ நகரில் சில சந்தைகளில் கடைகளைக் கூலிக்குப் பெற ஒரு தொகையைச் செலுத்தும் வழக்கம் உள்ளது. இது கட்டாயமானது என தீர்ப்பு வழங்கப்பட வேண்டும். செலுத்தப்பட்ட அப்பணம் கடையில் அவருக்கு ஓர் உரிமையைப் பெற்றுக் கொடுக்கிறது. எனவே, கடை உரிமையாளர் அவரை வெளியேற்ற முடியாது. வேறு யாருக்கும் அதனை வாடகைக்கு விடவும் முடியாது. இவ்வாறு பெறப்பட்ட கடை வக்ப் சொத்தாக இருப்பினும் சரியே''

இக்கருத்தை அதற்கு விளக்கம் அளிக்கும் ஓர் அறிஞர் ஆட்சேபிக்கின்றார். ஷரீஆவின் அடிப்படை விதிகளுக்கு முரணான இவ் வழக்காறின் அடிப்படையில் எவ்வாறு மார்க்கத் தீர்ப்பு வழங்க முடியும்?!'' என அவர் கேள்வி எழுப்புகின்றார்.

## இரண்டாம் காரணி

# அடிப்படையான சட்டங்களில் கவனம் செலுத்தும் சட்ட வசனங்கள்

பெரும்பாலான சட்ட வசனங்கள் பொதுவிதிகளாகவே, பொது வான சட்டங்களாகவே வந்துள்ளன. அவை கிளையம்சங்கள் பற்றி, விரிவான விளக்கங்கள் பற்றி, முறைமைகள் பற்றி பேசவில்லை. ஆனால், கால, இட மாற்றங்களுக்கு ஏற்ப வேறுபடாது என்றும் நிலையான சட்டங்களைப் பற்றி அவை விரிவாகப் பேசியுள்ளன. இபாதாத் எனப்படும் வணக்க வழிபாடுகள், திருமணம், விவா கரத்து, வாரிசுச் சொத்து போன்ற குடும்ப விவகாரங்கள் என்பன உதாரணமாக குறிப்பிடத்தக்கவை. இவைபற்றி பொருத்தமான அளவு விரிவாக ஷரீஆ பேசியுள்ளது. வணக்க வழிபாடுகளில் பித்அத்துக்களை நுழைத்து விடக்கூடாது என்பதற்காகவும், அவற்றின் உண்மையான நிலையிலிருந்து அவை உருக்குலைக்கப் படக் கூடாது என்பதற்காவும் அவை பற்றி விரிவாகப் பேசப் பட்டுள்ளது. குடும்ப விவகாரங்களில் பிரச்சினைகள், சச்சரவுகள் நிகழ்வதைத் தடுக்க வேண்டும் என்பதற்காக அவற்றைப் பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளது. வணக்க வழிபாடுகளும் குடும்ப விவகாரங்களும் வாழ்வின் மிக முக்கியமான இரு துறைகள். அவ்விரு துறைகளிலும் ஸ்திரத்தன்மை நிலவுவதற்கு தேவையான அடிப்படைகள் இடப்பட வேண்டும் என்பதும் அவற்றைப் பற்றி விரிவாக அலசப்பட்டிருப்பதற்கான இன்னொரு காரணமாகும்.

இவை தவிர்ந்த காலத்துக்கேற்ப, இடத்துக்கேற்ப, வழக்காறு களுக்கு ஏற்ப மாறுபடக்கூடிய விடயங்களைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் அவை பற்றி வந்துள்ள சட்ட வசனங்கள் பொது வானவையாகவும், பாரியளவுக்கு நெகிழ்ந்து கொடுக்கக் கூடியவை யாகவும் காணப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு மாத்திரம் பொருத்தமானதை, அல்லது குறிப்பிட்ட பிரதேசத்துக்கு மாத்திரம் பொருந்தக் கூடியதை, அல்லது குறிப்பிட்ட ஒரு சூழலுக்கு மாத்திரம் பொருந்தக் கூடியதை எல்லா மனிதர்கள் மீதும் திணித்து அவர்களை நெருக்கடிகளுக்கு உள்ளாக்கக் கூடாது என்பதனாலேயே ஷரீஆ சட்ட வசனங்களை இவ்வாறு பொதுவானதாக, நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதாக ஆக்கியுள்ளது.

■ **அல்குர்ஆனிலிருந்தும் ஸுன்னாவிலிருந்தும் சில சட்ட வசனங்களை உதாரணத்துக்காக இங்கு எடுத்து நோக்குவோம்.**

அல்குர்ஆன் தொழுகையைப் போன்று கலந்தாலோசித்தலையும் முஸ்லிம் சமூகத்தின் ஓர் அடிப்படையான பண்பாகக் குறிப் பிட்டுள்ளது. ''மேலும், அவர்கள் தங்கள் இறைவனின் கட்ட ளையை ஏற்றுக் கொள்கின்றார்கள். தொழுகையை நிலைநாட்டு கின்றார்கள். மேலும், தங்களின் காரியங்களைப் பரஸ்பரம் ஆலோசனை செய்து நடாத்துகின்றார்கள். மேலும், நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவு செய்கிறார்கள்'' *(42:38)* சமூகத்துக்கு தேவையான அடிப்படைகளை இட்ட மக்கீ அத்தி யாயங்களுள் ஒன்றிலேயே இவ்வசனம் இடம் பெறுகின்றது.

*மதீனாவில் வைத்து அல்லாஹ் பின்வருமாறு நபி (ஸல்) அவர்களைப் பணித்தான். மேலும், பணிகளில் இவர்களையும் கலந்தாலோசிப்பீராக!'' (3:159)* அடிப்படையில் ஒரு கட்டளை யானது அது கடமையானது என்பதைக் காட்டும். இறைவனிடத்தி லிருந்து வஹி வழங்கி பலப்படுத்தப்பட்ட நபி (ஸல்) அவர்கள் மீதே கலந்தாலோசிப்பது கடமையாக ஆக்கப்பட்டிருப்பின் ஏனை யோர் மீது அது முக்கியமான ஒரு கடமையாக இருக்கும் என்பது மிகத் தெளிவானது. எனினும், கலந்தாலோசனைக்குரிய அமைப்பு முறை யாது? எவ்வாறு அதனை நடைமுறைப்படுத்தலாம்?

குறிப்பாக ஆட்சியாளர்களுக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலான உறவின்போது அதனை அமுல்படுத்துவது எப்படி?

மேலுள்ள வினாக்களுக்கு சட்ட வசனங்கள் விளக்கமளிக்காது விட்டு வைத்துள்ளன. ஏனெனில், ஒவ்வொரு காலப் பகுதிக்கும் ஏற்ற ஒரு போக்கு இருக்கும். ஒவ்வொரு நிகழ்வுக்கும் அதற்கேயுரிய சூழ்நிலைகள் இருக்கும். ஒவ்வொரு சூழலுக்கும் அதற்கே உரிய சட்டம் இருக்கும். நாட்டுப் புறத்தைச் சேர்ந்தவனை நாகரிக மானவனுடன் ஒப்பிட முடியாது. கற்றவர்களின் சூழல் படிப்பறிவற்றவர்களின் சூழலை விட வித்தியாசமானதாக இருக்கும். சமாதான சூழல் யுத்த சூழலை விட வேறுபட்டதாக இருக்கும். எனவே, எல்லாக் காலங்களிலும் கலந்தாலோசனையானது குறிப்பிட்ட, இறுக்கமான ஓர் அமைப்பிலேயே கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறுவதானது மக்களைக் கஷ்டப்படுத்துவதாக அவர்களைத் தொல்லைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாக்குவதாக அமையும். அல்லாஹ் அடியார்களுக்கு இலகுவையே விரும்புகிறான். அவர்களைக் கஷ்டத்துக்கு உள்ளாக்க அவன் விரும்புவதில்லை.

முக்கியம் யாதெனில், மக்களிடம் ஆலோசிக்காது அவர்களது விருப்பத்தைப் பெறாது ஓர் ஆட்சியாளரை அவர்கள் மீது திணிக்கக் கூடாது. தலைவர் ஏனையோரைப் புறக்கணித்து விட்டு எதேச்சாதிகாரியாக தொழிற்படக் கூடாது. விரும்புவதை செய்ய முடியுமான, விரும்பும் விதத்தில் அதிகாரம் செலுத்த முடியுமான, தான் ஆற்றுகின்ற எதனைப் பற்றியும் கேள்விக்கு உள்ளாகாத கடவுளாக தன்னைக் கருதக்கூடாது!!

நபி (ஸல்) அவர்களது சரிதையிலும், கலீபாக்களது சரிதைகளிலும் அவர்களது காலப் பகுதிகளுக்கு ஏற்ப கலந்தாலோசித்தல் வித்தியாசமான அமைப்புக்களில் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. இது கலந்தாலோசித்தல் எனும் உன்னத கோட்பாட்டை அமுல்படுத்துவதற்கு மிகச் சிறந்த வழிமுறையைத் தெரிவு செய்வதற்கான அவகாசத்தை எமக்கு வழங்குகின்றது. இக்கோட்பாட்டை அமுல்படுத்துவதற்கு நேரடிக் கருத்துக் கணிப்பீட்டை

மேற்கொள்ளலாம். அல்லது இரு கட்டங்களாக இதனை அமுல் படுத்தலாம். அல்லது மனித அனுபவங்களினூடாக பெறப்பட்ட வேறு ஏதேனும் ஒரு வழிமுறையைக் கையாளலாம்.

ஆனால், இங்கு ஷரீஆ வலியுறுத்துகின்ற, உறுதிப்படுத்தி நிற்கின்ற முக்கியமான விடயம் யாதெனில், ஆட்சிக்கு வருவதற்காக அல்லது பொறுப்புக்களை ஏற்பதற்காக முன்வருகின்ற வேட்பாளரது பண்புகள் அல்குர்ஆனும், ஸுன்னாவும் குறித்துக் காட்டியுள்ள வகையில் வரையறுக்கப்பட வேண்டும் என்பதாகும். பலமும் நம்பகத்தன்மையும்(7) இருக்க வேண்டும் என அவை கூறுகின்றன. அல்லது பாதுகாக்கும் பண்பும், அறிவும்(8) இருக்க வேண்டும் என்கின்றன. அல்லது இவை தவிர்ந்த சட்ட அறிஞர்கள் விரிவாக விளக்கியுள்ள பண்புகள் வரையறுக்கப்பட வேண்டும்.

அவ்வாறே, வாக்களிக்கின்ற வாக்காளரது பண்புகளும் வரை யறுக்கப்படுவது அவசியமாகவுள்ளது. இறைவன் சாதாரண கொடுக் கல்-வாங்கல் நடவடிக்கைகளைப் பற்றி கூறுகையில், 'மற்றும் உங்களில் இரு ஆண்களை சாட்சிகளாக ஆக்கிக் கொள்ளுங்கள். இரு ஆண்கள் இல்லையென்றால், ஓர் ஆணையும் இரு பெண்களையும் சாட்சிகளாக்கிக் கொள்ளுங்கள். இந்த சாட்சிகள் உங்களால் ஏற்றுக் கொள்ளத்தக்கவர்களாய் இருக்க வேண்டும்' (2:285) எனக் கூறியுள்ளான். வியாபார நடவடிக்கையில் அமர்த்தப்படுகின்ற சாட்சி களே ஏற்றுக் கொள்ளத்தக்கவர்களாய் இருக்க வேண்டும் என அல்குர்ஆன் கூறுவதாயின், சமூக விவகாரங்களில், சமூகத்தின் முடிவைத் தீர்மானிப்பதில் சாட்சியம் சொல்பவர்கள் எத்தகையவர் களாய் இருக்க வேண்டும் என்பது புலனாகிறதல்லவா?!

---

7- எவர் வலிமைமிக்கவராயும் நம்பிக்கைக்குரியவராகவம் இருக்கின்றாரோ அப்படிப்பட்ட வர்தான் நீங்கள் பணியில் அமர்த்துவதற்கு மிகவும் சிறந்தவராவார் (28:26) என்ற வசனமே இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

8- நாட்டின் கருவூலங்களுக்கு என்னைப் பொறுப்பாளராக்குங்கள்! நான் நன்கு பாதுகாப்ப வனாகவும் அறிவுள்ளவனாகவும் இருக்கின்றேன் என்று கூறினார். (12:55) யூஸுப் (அலை) கூறியதாக அல்குர்ஆன் கூறும் கருத்தே இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

விவாகரத்து செய்யப்பட்ட பெண்ணை திரும்ப சேர்த்துக் கொள்வது சம்பந்தமாக அல்குர்ஆன் பின்வருமாறு இயம்புகிறது. மேலும் உங்களில் நேர்மைமிக்க இருவரைச் சாட்சிகளாக்கிக் கொள்ளுங்கள். ''மேலும் (சாட்சி சொல்பவர்களே!) அல்லாஹ்வுக்காக சரியான முறையில் சாட்சியம் வழங்குங்கள்'' (65:2) சிறிய ஒரு சமூக அலகான குடும்ப விவகாரத்திலேயே நேர்மையானவனின் சாட்சியம்தான் ஒப்புக் கொள்ளப்படுவதாயின் அக்குடும்ப அலகுகளின் சேர்க்கையான பெரும் சமூகத்தின் விவகாரத்தில் நேர்மையற்றவனின் சாட்சியத்தை எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்?

அல்குர்ஆனில், சுன்னாவில் வந்துள்ள சட்ட வசனங்கள் தீர்ப்புக் கூறும்போது நீதியாக நடந்து கொள்ளுமாறு ஏவுகின்றன.[9] அல்லாஹ் இறக்கியவற்றை வைத்து தீர்வு சொல்லுமாறு பணிக்கின்றன.[10] ஆனால், தீர்வு சொல்கின்ற அல்லது நீதி செலுத்துகின்ற அப்பணியை மேற்கொள்வது எவ்வாறு? எல்லா வகைப் பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடிய பொதுவான நீதிமன்றங்களை அமைப்பதா? அல்லது துறைவாரியான நீதிமன்றங்களை அமைப்பதா? நீதிமன்றங்கள் அனைத்தும் ஒரே தரத்தில் இருக்குமா? அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட படித்தரங்களைக் கொண்டவையாக அவை காணப்படுமா? நீதிபதி ஒருவரா? அல்லது முக்கியமான பிரச்சினைகளில் இன்னும் சிலர் அவரோடு இணைந்து கொள்ள முடியுமா? இவை பற்றி சட்ட வசனங்கள் விளக்கம் தரவில்லை. அவைபற்றி கால வளர்ச்சிக்கேற்ப பொருத்தமான முடிவுகளை மேற்கொள்ளும் பொறுப்பு இஜ்திஹாதுக்கு விடப்பட்டுள்ளது.

நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் கடமை என சட்ட வசனங்கள் கூறுகின்றன. ''நன்மையின் பக்கம் அழைக்கக்கூடிய ஒரு குழுவினர் உங்களிடையே கண்டிப்பாக இருந்திட வேண்டும்.

---

9- ''நீங்கள் மனிதர்களிடையே தீர்ப்பு வழங்கினால் நீதத்துடன் தீர்ப்பு வழங்குங்கள்'' (4:58) போன்ற வசனங்களே நாடப்படுகின்றன.

10- ஸூறா மாஇதாவின் 44,45,47,49 ஆம் வசனங்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

அவர்களோ நல்லவை புரியும்படி ஏவ வேண்டும். தீயவற்றிலிருந்து தடுத்த வண்ணம் இருக்க வேண்டும். இத்தகையவர்களே வெற்றியாளர்கள் ஆவர்.'' *(3:104)*

''இறைநம்பிக்கை கொண்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் நன்மை புரியுமாறு ஏவுகிறார்கள். தீமையிலிருந்து தடுக்கிறார்கள். மேலும், தொழுகையை நிலைநாட்டுகிறார்கள். ஸகாத்தும் கொடுக் கிறார்கள்.'' *(9:71)* இவை தவிர்ந்த இன்னும் பல அல்குர்ஆன் வசனங்களும், ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் பலவும் இக்கருத்தை முன்வைக்கின்றன.

இவ்வசனங்கள் ஏவலுக்கும், விலக்கலுக்கும், பிரச்சாரத்துக்கும் வரையறுக்கப்பட்ட ஒரு வழியைக் குறிப்பிடவில்லை. அவற்றுக் கான குறிப்பிட்ட ஒரு முறைமையினை முன்வைக்கவும் இல்லை. மனித சிந்தனைக்கு, மனச்சாட்சிக்கு அப்பொறுப்பு விடப்பட்டுள் ளது. மக்கள் தமக்கு மிகவும் பொருத்தமான வழியைத் தீர்மானிக்க இடமளிக்கப்பட்டுள்ளது. நன்மையை ஏவுகின்ற, தீமையைத் தடுக்கின்ற பணியில் ஒரு பகுதி தனிநபர்களிடம் விடப்படலாம். சமூகத்தின் உதவியோ, அரச அதிகாரமோ அவசியப்படாத இடங்களில் அவர்கள் இப்பணியை மேற்கொள்வர்.

இப்பணியின் ஒரு பகுதி அமைப்புக்கள், இயக்கங்கள் போன்ற ஒழுங்கான சமூக நிறுவனங்களிடம் விடப்படலாம்.

தனிநபர்களிடமும், அமைப்புக்களிடமும் விடப்படாத ஏனைய பகுதிகளை நிறைவேற்றும் பணி அரசிடமும், நீதித்துறையிடமும் விடப்படலாம். அல்லது அரசினதும் நீதித்துறையினதும் அதிகாரங் கள் சிலவற்றைக்கொண்டுள்ள 'ஹிஸ்பா' எனும் பிரிவிடம் இப்பணி விடப்படலாம். இப்பிரிவு முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சியின் போது உருவான ஒரு பிரிவாகும். இதுபற்றி பேசுகின்ற பிரபல்யமான நூல்கள் உள்ளன.

ஞானம்மிக்க இறைவன் தனது வசனங்கள் விரிவான சட்டக் கோவைகளாக அமைய வேண்டும் என விரும்பவில்லை.

இஸ்லாமியப் பாதையில் பயணிக்க விரும்புபவர்களுக்கான களங் கரை விளக்கங்களாகவே அவை அமைய வேண்டும் என அவன் விரும்பினான். இதனால் தனது வசனங்களினூடாக விதிகளை, இலக்குகளை முன்வைப்பதற்கு அவன் முக்கியத்துவம் வழங்கி யுள்ளான். பொதுவாக, வழிமுறைகள், போக்குகள் என்பன பற்றி விளக்கமளிப்பதற்கு அவன் முக்கியத்துவம் வழங்கவில்லை. சில முக்கியமான காரணங்களுக்காக, நோக்கங்களுக்காக சில இடங்களில் வழிமுறைகள், போக்குகள் பற்றி விளக்கமளித்துள் ளான். மனித அறிவுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். பொருத்த மான வழிமுறையைத் தெரிவு செய்வதற்கும், நிலைமைக்கும், காலத்துக்கும், சூழலுக்கும் ஏற்ற அமைப்பு முறையினை எதுவித சங்கடமும், தொந்தரவும் இன்றி தெரிவு செய்வதற்கான வாய்ப்பை இஜ்திஹாதுக்கு வழங்க வேண்டும் என்பதற்காகவுமே அவன் இவ்வாறு நடந்து கொண்டுள்ளான். முஸ்லிம்களின் வரலாற்றில் நீதி முறைமை, ஆட்சி முறைமை, ஹிஸ்பாவுக்கான முறைமை என்பவற்றில் நாம் காணுகின்ற வளர்ச்சி இதன் விளைவேயாகும்.

நபி (ஸல்) அவர்களது காலப்பகுதியில் வாழ்க்கை எளிமையான தாக, இலகுவானதாக, சிக்கல்களும் முரண்பாடுகளும் அற்றதாகக் காணப்பட்டது. மக்களது உள்ளங்கள் மிகவும் தூய நிலையில் காணப்பட்டன. அவர்களது நடத்தைகள் கள்ளங்கபடமற்றவை யாகவே காணப்பட்டன. சண்டை, சச்சரவுகள் வாழ்க்கைப் பொழுதுகளை வீணாக்கிவிடக் கூடியவை என்பதை அறிந்திருந்த அவர்கள் அவற்றிற்கு இடமளிக்கவில்லை. எனவே, நபி (ஸல்) அவர்கள் நீதிபதியாக யாரையும் நியமிக்கவில்லை. தமது மஸ்ஜிதில் அல்லது வாய்ப்பளிக்கும் இடங்களில் அவர்கள் பிரச்சினைகளை விசாரித்து தீர்வுகளை வழங்கி வந்தார்கள்.

மாகாணங்களுக்கு நபி (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த அலி (றழி), முஆத் பின் ஜபல் (றழி), அபூ மூஸா அல் அஷ்அரி (றழி) போன்ற கவர்னர்கள் ஆட்சிப் பொறுப்போடு சேர்த்து நீதித்துறையையும் பொறுப்பேற்றிருந்தனர். தமது பணிகளுள் ஒன்றாக அதனை அவர்கள் நிறைவேற்றி வந்தனர்.

அபூ பக்ர் (றழி) அவர்களது காலத்தில் உமர் (றழி) அவர்கள் நீதிபதியாக பதவியேற்றார்கள். ஆனால், நீண்டகாலமாக அவர் களிடம் எதுவித பிரச்சினைகளுமே தீர்வுக்காக முன்வைக்கப்பட வில்லை. ஈமானும் அல்குர்ஆனும் பிரச்சினையின்றி வாழ மனிதர்களை நெறிப்படுத்தியிருந்தமை இதற்கான காரணமாகும்.

உமர் (றழி) அவர்களது காலத்தில் நீதிபதிகளாக சிலர் நியமிக்கப் பட்டிருந்தனர். அபூ மூஸா அல் அஷ்அரி (றழி), ஷுரைஹ் (றஹ்), கஃப் பின் ஸிஹார் (றஹ்) போன்றோரை உதாரணமாகக் குறிப் பிடலாம். அவர்களது காலத்திலிருந்தே நீதித்துறை தனியான துறையாக தொழிற்பட ஆரம்பித்தது. இந்நீதிபதிகளுள் ஒருவருக்கு உமர் (றழி) அவர்கள் எழுதிய ஒரு கடிதம் பிரபல்யமானது. அத்துறையில் இருப்பவர்களுக்கான ஒரு யாப்பு போன்றதாக அது அமைந்துள்ளது.

அப்பாஸியர்களது ஆட்சிக் காலத்தில் பிரதம நீதிபதி'' பதவி அறிமுகப்படுத்தப்பட்டது. இமாம் அபூஹனீபா (றஹ்) அவர்களது மாணவரான இமாம் அபூயூஸுப் அவர்களே முதன்முதலாக இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்.

கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் தனது ஆட்சிக் காலத்தில் அநீதிகள் சம்பந்தமான முறைப்பாடுகளை விசாரித்து தீர்ப்பு வழங்கும் பணியை மேற்கொண்டார். கவர்னர்கள், தளபதிகள், நீதிபதிகள் போன்ற அரச அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடு களை அவர் விசாரித்தார். அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரத் தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர் என்ற வகையில் அவற்றுக்கு உரிய தீர்வுகளையும் வழங்கினார்.

அநீதிகள் பற்றிய முறைப்பாடுகளை ஆராய்ந்து தீர்வு வழங்கும் பணி உமர் பின் அப்துல் அஸீஸ் (றஹ்) அவர்களது ஆட்சிக் காலத்தில்.மேலும் உறுதியடைந்தது. குறுகிய கால அவர்களது ஆட்சியின் பின்னால் அநீதிகள் பற்றி விசாரித்து நீதியை நிலைநாட்டல் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அம்சமாக மாறியிருந்தது. ஒரு சாதாரண நீதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த

அதிகாரங்களையும், பிரத்தியேக உரிமைகளையும் விட அதிகமான அதிகாரங்களும் பிரத்தியேக உரிமைகளும் வழங்கப்பட்டவராக இதற்கென நியமிக்கப்பட்ட நீதிபதி திகழ்ந்தார்.

இமாம் மாவர்தீ கூறுவது போல, அவரது பணி அரசின் அதிகாரம் செலுத்தும் பணியையும் நீதிபதியின் நீதி வழங்கும் பணியையும் ஒன்றிணைத்ததாக காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும். பெரும்பாலும் பிரதம நீதிபதியே அநீதிகள் தொடர்பான முறைப் பாடுகளை விசாரித்து தீர்ப்புக்களை வழங்குபவராக இருந்தார். அநீதிகளை விசாரித்து நீதி வழங்கும் பணியைச் செய்த அந்நீதிபதி யின் பணியை உயர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பணிக்கு அல்லது நிர்வாகம் சார் நீதிமன்றத்தின் பணிக்கு ஒப்பிடலாம். அல்லது சில நாடுகளில் பாராளுமன்றம் ஆற்றும் பணிக்கு ஒப்பிட லாம். எனவேதான், சில ஆய்வாளர்கள் அநீதிகளை விசாரித்து நீதி வழங்கும் இம்முறைமையினை நீதிமன்றங்களின் படித்தரங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அநீதிகளை விசாரித்து நீதி வழங்கும் இப்பணியை சில கட்டங் களில் பலர் இணைந்து மேற்கொண்டிருப்பதாக புலப்படுகிறது. எனவே, சில நூல்களில் அதற்கு 'மஜ்லிஸூல் மழாலிம்' (அநீதிகளை விசாரிப்பதற்கான அவை) என்ற பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவையனைத்தும் இஸ்லாமிய ஆட்சி வித்தியாசமான கால கட்டங்களில் நீதிமன்ற அமைப்புக்கு கையாண்ட பல்வேறுபட்ட அமைப்பு முறைகளாகும். இவை அனுபவங்களின் விளைவாகத் தோன்றியவை. வரலாற்று ரீதியான முன்னேற்றத்தினூடாகத் தோன்றியவை. இவற்றுள் எந்த முறையைப் பற்றியும் அல் குர்ஆனோ, ஸுன்னாவோ குறிப்பிடவில்லை.

இவ்வாறான ஒழுங்குகளைப் புதிதாக உருவாக்குவதனை முஸ்லிம்கள் எக்காலத்திலும் பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகக் கருதவில்லை. அதனை ஒரு நூதனமாகவோ, மார்க்கத்தில் புதிதாக ஒன்றை உருவாக்குவதாகவோ அவர்கள் எண்ணவில்லை. ஏனெ னில், பித்அத் (நூதனம்) என்பது ஷரீஆவிலிருந்து மாத்திரமே

பெறப்பட வேண்டிய வணக்க வழிபாடுகள் போன்ற அம்சங்க ளுடன் மாத்திரம் தொடர்புபட்டதாகும்.

நவீன உலகில் காணப்படுகின்ற, நீதியை நிலைநாட்டுகின்ற, சர்ச்சைகளில் ஈடுபட்டுள்ளவர்களது நம்பிக்கையையும் மனத் திருப்தியையும் பெற்ற நீதி வழங்கலுக்கான எம் முறைமையையும் ஏற்றுக் கொள்வதில் ஷரீஆவுக்கு எத்தகைய சங்கடமும் கிடையாது என உறுதியாக நாம் கூறுகிறோம்.

சில சமயங்களில் பல நீதிபதிகள் ஒன்றிணைந்து தீர்ப்பு வழங்குதல், பிரத்தியேகமான நீதிமன்றங்கள் காணப்படல் (சிவில், குற்றவியல்), நீதிமன்றங்கள் (ஆரம்ப, மேன்முறையீட்டு, உயர் போன்ற) பல படித்தரங்களை கொண்டிருத்தல் போன்ற எதுவுமே ஷரீஆவுக்கு பிரச்சினையானவை அல்ல. நீதி வழங்கப்படல் தான் முக்கியமே தவிர இவற்றுள் ஏதாவது ஒரு குறிப்பிட்ட முறைமை யைப் பின்பற்றியே ஆக வேண்டும் என அல்லாஹ் எம்மைக் கட்டாயப்படுத்தவில்லை.

விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு நவீன முறைமை கள் காணப்படுகின்றன. விரல் அடையாளங்கள், சப்தங்களைப் பிரித்தறிதல், கைரேகைகள்... போன்ற வழிமுறைகள் குற்றங்களை நிறுவுவதற்கான ஆதாரங்களாக பொருத்தமான அடையாளங்களாக கருதப்படுகின்றன. இத்துறைகள் தனியான சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணர்களைக் கொண்ட அறிவுத்துறைகளால் தற்போது மாற்றம் பெற்றுள்ளன.

நீதியை நிலைநாட்டும் பணியைச் செய்வதற்காக இத்துறைகளி லிருந்து பயன்பெறுவதை ஷரீஆ வரவேற்கின்றது. இவ்விடத்தில் இமாம் இப்னுல் கையிம் அவர்கள் குறிப்பிடும் கருத்து அதிசயிக்கத் தக்கது. ''மனிதர்கள் நீதியாக நடக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் தூதர்களை அனுப்பினான், வேதங்களை இறக்கினான், இந்நீதியை அடியாகக் கொண்டே வானங்களும் பூமியும் அமைந் துள்ளன. சத்தியத்தின் அடையாளங்கள், நீதியின் ஆதாரங்கள்

தெளிவாக புலப்பட்டால் எந்த வழியிலாவது நீதி நிலைநாட்டப் பட்டால் அங்கு அல்லாஹ்வுடைய ஷரீஆ இருக்கும். அவனது மார்க்கம் இருக்கும். அவனது திருப்தி இருக்கும், அவனது கட்டளை நிறைவேற்றப்பட்டிருக்கும்.

அல்லாஹ் நீதிக்கான வழிமுறைகளையும் ஆதாரங்களையும் அடையாளங்களையும் குறிப்பிட்ட ஒருவகையில் மாத்திரம் சுருக்கிவிட்டு, அதனை விட பலமான, தெளிவான, உறுதியான ஏனைய வழிமுறைகளை இரத்துச் செய்துவிடவில்லை. மாற்றமாக, தான் உருவாக்கிய வழிமுறையின் மூலம் தனது நோக்கம் சத்தியத்தையும் நீதியையும் நிலைநாட்டுதலும், மக்கள் நீதியாக நடத்தலுமே என்பதனைத் தெளிவுபடுத்தியுள்ளான்.

எவ்வழிமுறையைக் கையாண்டு உண்மை வெளிச்சத்துக்கு கொண்டுவரப்படுகின்றதோ, நீதி அறியப்படுகின்றதோ அவ்வழி முறையின் அடிப்படையில் தீர்வு சொல்வது கடமையாகும்.

அடிப்படையில் வழிமுறைகள் ஒன்றை அடைவதற்கான காரணங்களாகும் இடைச் சாதனங்களாகும். அவ்வழிமுறைகளின் ஊடாக அடையப்படவிருக்கும் இலக்குகளே முக்கியமானவை, அடிப்படையானவை. எனினும், அல்லாஹ் அனுமதித்திருக்கின்ற வழிகள் மூலமாக அவற்றிற்கு நிகரானவற்றை, அவை போன்ற வற்றை உணர்த்தியிருக்கிறான். சத்தியத்தை விளக்குகின்ற எந்த வழிமுறையாக இருந்தாலும் அது அங்கீகரிக்கப்பட்டதே. சத்தியத்தை அறிவிக்கும் ஒரு வழிமுறையே அது.

'நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல்' எனும் கொள்கையை அமுல்படுத்த முஸ்லிம்கள் உருவாக்கிய 'ஹிஸ்பா' எனும் ஒழுங்குமுறையை நோக்குங்கள். அது எளிமையான வடிவிலேயே தோற்றம் பெற்றது. பின்னர், படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இறுதியில் பிரத்தியேக அதிகாரங்களை, சிறப்பியல்புகளைக் கொண்ட ஒரு துறையாக மாற்றம் பெற்றது. இன்று சில அமைச்சுக்கள், திணைக்களங்கள் மேற்கொள்ளும் பணிகளை அது மேற்கொள்கின்றது. உதாரணமாக, பொதுவான சுகாதாரப் பணிகள்,

சமூகப் பணிகள், உணவு வழங்கல், நகர சபைகளின் பணிகள், வீதி ஒழுங்குகளை மேற்பார்வை செய்யும் பொலிஸின் பணிகள் போன்ற அரசின் குறிப்பிட்ட ஒரு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வராத பணிகளையெல்லாம் அது மேற்கொள்கின்றது. அப்பணிகளுக்கு உதாரணமாகக் கடமைகளை நிலைநிறுத்தலையும், ஜீவ காருண் யத்தையும் குறிப்பிடலாம். 'ஹிஸ்பா' பற்றி தனியான நூல்கள் வெளிவந்துள்ளன. அவ்வாறே, அரசியல் பற்றி பேசும் நூல்களும், வேறு துறைகள் பற்றி பேசும் நூல்களும் கூட இதனைப் பற்றி விளக்கியிருக்கின்றன.

அவ்வாறே, ஆட்சி அமைப்பில் பல்வேறு புதிய வடிவங்களை முஸ்லிம்கள் உருவாக்கினர். சூழ்நிலை மாற்றங்கள், வளர்ச்சிகள் அவற்றை கட்டாயமாக்கின. அமைச்சர்கள் அறிமுகப்படுத்தப் பட்டதை உதாரணமாக இங்கு குறிப்பிடலாம். ஆரம்ப காலங்களில் அமைச்சர்கள் இருக்கவில்லை. அப்பாஸிய ஆட்சிக் காலத்திலேயே இவ்வொழுங்கு முறை அமுலுக்கு வந்தது. சட்ட அறிஞர்கள் அதனை அங்கீகரித்தனர். தமது சட்ட நூல்களில் முஸ்லிம்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் ஒழுங்குமுறை என்ற ரீதியில் அதனைப் பற்றி எழுதியும் உள்ளனர்.

கலீபா அல்லது நாட்டின் தலைவர் எனும் பதவியோடு இன்னும் இரண்டு வகையான அமைச்சுக்களை முஸ்லிம்கள் அறிந்து வைத்திருந்தனர்.

விஸாரதுத் தப்வீழ்: பாராளுமன்ற ஒழுங்கு காணப்படும் நாடுகளில் உள்ள அரசாங்கத்துக்கு இதனை ஒப்பிடலாம்.

விஸாரதுத் தன்பீத்: பிரதமர் அல்லது ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் காணப்படும் அரசாங்கத்துக்கு இதனை ஒப்பிடலாம்.

இமாம் மாவர்தீ, இமாம் அபூ யஃலா அல் ஹன்பலீ போன்ற அறிஞர்கள் எழுதியுள்ள 'அரசியல் துறை சார்ந்த சட்டங்கள்' எனும் நூல்களைப் படிக்கும் ஒருவருக்கு இவ்விரு அமைச்சுக்களினதும் அதிகாரங்கள், பண்புகள் பற்றி விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### மூன்றாம் காரணி

## பல்வேறு விளக்கங்களுக்கு இடமளிக்கும் சட்ட வசனங்கள்

இஸ்லாமிய ஷரீஆவில் காணப்படும் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மைக்கு முக்கியமான ஒரு காரணியாக சட்ட வசனங்கள் அமைந்து காணப்படுகின்றன. அதாவது, கிளைச் சட்டங்களைப் பற்றி, விரிவான சட்டங்களைப் பற்றி பேசுகின்ற வசனங்களை பல கருத்துக்களுக்கு இடம்பாடுடையவையாக இறைவன் ஆக்கி வைத்திருக்கிறான். இவ்வசனங்கள் பல விளக்கங்களுக்கு ஏற்புடையவையாக காணப்படுகின்றன. பல வியாக்கியானங்களுக்கு இடமளிக்கின்றன. ஏலவே குறிப்பிடப்பட்டுள்ள இரு காரணிகளோடு இதுவும் இஸ்லாமிய சட்டத்தில் வித்தியாசமான சிந்தனைப் பாங்குகள், பல்வேறுபட்ட சிந்தனைப் பிரிவுகள் காணப்படுவதற்கு உறுதுணையாக அமைகின்றது.

இஸ்லாமிய சட்டத்தில் இவ்வாறான தன்மை காணப்படுவதனால், அச்சட்டம் இப்னு உமர் (றழி) அவர்களைப் போன்ற கடின போக்கைக் கொண்டவர்களையும், இப்னு அப்பாஸ் (றழி) அவர்களைப் போன்ற இலகுபடுத்துபவர்களையும், இமாம் அபூஹனீபாவைப் போன்ற கியாஸைப் பயன்படுத்துபவர்களையும், இமாம் அஹ்மதைப் போன்ற அறிவிப்புக்களில் தங்கியிருப்பவர்களையும், இமாம் தாவூதைப் போன்ற வெளிப்படையான கருத்தை

மாத்திரம் நோக்குபவர்களையும் பெருமனதுடன் ஏற்றுக் கொள்வது அதிசயிக்கத்தக்க ஒரு விடயமல்ல!! எனவே தான் இஸ்லாமிய சட்டத்தில் பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற சிந்தனைப் பிரிவைக் (மத்ரஸதுர் ரஃயி) காண்கிறோம். அவ்வாறே, ஹதீஸ்களுக்கும் அறிவிப்புக்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் சிந்தனைப் பிரிவையும் காண்கிறோம். சொற்களின் வெளிப்படையான கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்குபவர்களைக் காண்கிறோம். கருத்துக்களுக்கும் இலக்குகளுக்கும் முன்னுரிமை வழங்குபவர்களையும் காண்கிறோம். இவ்விரு பிரிவுகளுக்கும் இடையே மத்தியஸ்தமான, நடுநிலையான ஒரு போக்கைக் கையாள்பவர்களையும் காணவே செய்கின்றோம்.

அல்குர்ஆனினதும் ஸுன்னாவினதும் வசனங்கள் பல விளக்கங்களுக்கு, கருத்துக்களுக்கு ஏற்புடையவையாகக் காணப்படுகின்றன என்ற கருத்தை புரிந்து கொள்வதற்காக அவற்றிலிருந்து இரண்டே இரண்டு உதாரணங்களை மாத்திரம் தருகிறேன்.

## 'அல் ஈலாஉ' பற்றிய வசனங்கள்

அல்குர்ஆனிலிருந்து முதலாவது உதாரணத்தை நோக்குவோம். ''தங்கள் மனைவியரை நெருங்குவதில்லையென்று சபதம் செய்து விலகி இருப்பவர்களுக்கு நான்கு மாதத் தவணையுண்டு. எனவே, அதற்குள் (தங்கள் மனைவியரிடம்) அவர்கள் திரும்பி விட்டால், நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனும், கருணையுடையோனுமாய் இருக்கின்றான். ஆனால், அவர்கள் தலாக் சொல்வதென்று தீர்மானித்து விட்டால் - அல்லாஹ் எல்லாவற்றையும் செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றான்'' *(2:226-227)*.

இவ்வசனங்களில் வந்துள்ள 'யுஃலூன' எனும் பதத்தின் பொருள் 'சத்தியம் செய்கின்றனர்' என்பதாகும். அதாவது ஒருவர் தனது மனைவியோடு உறவு கொள்வதில்லை என சத்தியம் செய்தலையே இப்பதம் குறித்து நிற்கின்றது. இப்னு அப்பாஸ் (றழி) கூறுகிறார்கள்: ஜாஹிலிய்யாக் காலத்தில் கணவன் தனது மனைவியிடம் எதையாவது கேட்டு, அவள் அதைக் கொடுக்க மறுத்தால், அக்கணவன்

தனது மனைவியோடு ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங் களுக்கு அல்லது மூன்று வருடங்களுக்கு உறவு கொல்வதில்லை என சத்தியம் செய்வான். அவளை விட்டு அவன் விலகியிருப்பான். அவள் கணவனை இழந்தவளுமல்ல, கணவன் உள்ளவளுமல்ல என்ற இரண்டும் கெட்ட நிலையில் இருப்பாள். இஸ்லாம் முஸ்லிம்களுக்கு இதற்கான காலத்தை நான்கு மாதங்களாக மாத்திரம் வரையறுத்தது. இவ்வசனம் இறக்கி வைக்கப்பட்டது.

ஸஈத் பின் முஸய்யப் கூறுகிறார்: 'ஈலாஉ' ஜாஹிலிய்யாக் காலத்தில் இழைக்கப்பட்ட தீங்காகும். கணவன் தனது மனைவியை விரும்பாவிடில், வேறு எவரும் அவளைத் திருமணம் முடிப்பதை யும் விரும்பாவிடில் தான் ஒருபோதும் தன் மனைவியோடு உறவு கொள்வதில்லை என சத்தியம் செய்வான். அவளை கணவன் உள்ள வரும் அல்ல, கணவன் இல்லாதவரும் அல்ல என்ற இரண்டும் கெட்ட நிலையில் விட்டு விடுவான். இஸ்லாத்தின் வருகையின் போது மனிதர்கள் இந்நிலையிலேயே காணப்பட்டனர். அல்லாஹ் கணவனிடத்தில் மனைவிக்கு உள்ள இடம் யாது? என்பதனைத் தெரிந்து கொள்வதற்கான தவணையாக நான்கு மாதங்களை வரையறுத்தான். இவ்வசனத்தை இறக்கி வைத்தான்.[11]

பொதுவாக, இவ்விரு வசனங்களும் கணவர்கள் தமது மனைவியர்களுக்கு தீங்கிழைப்பதைத் தடுப்பதை இலக்காகக் கொண்டுள்ளன. தாம்பத்திய உறவில் மனைவிக்கு உள்ள இயல்பான உரிமையை அவை ஏற்று அங்கீகரிக்கின்றன. அவ்வாறே, பெண்ணின் இயல்பு ஏற்றுக் கொள்ளாத அளவுக்கு நீண்ட காலத்துக்கு அவ்வியல்பான உரிமையை அவளுக்கு வழங்காது, அவளுக்கு தீங்கிழைக்கின்ற எந்த ஓர் ஆணினதும் அதிகாரத்தி லிருந்து விடுதலை அடைவதற்கான சந்தர்ப்பத்தை அவை அவளுக்கு வழங்குகின்றன.

---

11- (தப்ஸீருல் காஸின், பாகம் 1, பக்கம் : 155).

இவ்விரு வசனங்களின் பொதுவான கருத்து இதுவாக இருப்பினும், இவ்விரு வசனங்களிலிருந்து பெறப்படுகின்ற விரிவான சட்டங்கள் சம்பந்தமாக சட்ட அறிஞர்களிடையே பாரிய கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஸஹாபாக்கள், தாபிஊன்கள் முதல் இக்கருத்து முரண்பாடு தொடர்ந்து நிலவி வருகின்றது. இங்கு ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது கருத்துக்களுக்கு ஆதாரமாக சட்ட வசனங்களையே முன்வைக்கின்றமை நோக்கத்தக்கது.

1. இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் ஒரு திம்மீ அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து மனைவியுடன் உறவு கொள்வதில்லை எனக் கூறினால் அச்சத்தியம் செல்லுபடியாக மாட்டாது. ஆனால், அவர் விவாகரத்து செய்வதாக அல்லது அடிமையை விடுதலை செய்வதாக சத்தியம் செய்தால் அச்ச்த்தியம் செல்லுபடியாகும் என சட்ட அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர். ஆனால், ஏனையோர் இக்கருத்தை ஏற்பதில்லை. ஏனெனில், இமாம் ராஸி கூறுவதைப் போல ''தங்கள் மனைவியரை நெருங்குவதில்லையென்று சபதம் செய்து விலகி இருப்பவர்கள்'' என்ற வசனம் முஸ்லிமுக்கும் முஸ்லிம் அல்லாதவனுக்கும் பொருந்தக் கூடிய பொதுவான வசனமாகக் காணப்படுகிறது.[12]

இவ்விரண்டாவது கருத்துப்படி, 'ஈலாஉ' விடயத்தில் முஸ்லிம் அல்லாதவர்கள் எம்மிடம் தீர்ப்புக் கேட்டு வந்தால் முஸ்லிமுக்கு உரிய சட்டமே அவர்களுக்கும் அமுல்படுத்தப்படும்.

2. இமாம் மாலிகும் அவரது மத்ஹபை சார்ந்தோரும், இமாம் அபூஹனீபாவும் அவரது மத்ஹபைச் சார்ந்தோரும், இமாம்களான அவ்ஸாஈ, நகஈ போன்றோரும் ஏனையோரும் உறவு கொள்வதில்லை என சத்தியம் செய்யும் விடயத்தில் உறவு கொள்ளப்பட்ட மனைவியும், இன்னுமே உறவு கொள்ளப்படாத மனைவியும் சமனே'' எனும் கருத்தை முன்வைக்கின்றனர்.

12- (தப்ஸீருல் கபீர், பாகம்: 6, பக்கம் : 87)

இமாம்களான ஸுஹ்ரி, அதாஉ, ஸவ்ரீ போன்றோர் உறவு கொள்ளப்பட்ட மனைவியின் விடயத்திலேயே 'ஈலாஉ' செல்லுபடியாகும் என்கின்றனர். பருவம் அடையாத சிறு பெண் விடயத்தில் 'ஈலாஉ' இடம்பெற முடியாது. பருவமடைய முன்னரே 'ஈலாஉ' நிகழ்ந்திருப்பின் பருவமடைந்த தினத்திலிருந்தே 'ஈலாவு' க்கான'' கால வரையறை ஆரம்பமாகிறது என இமாம் மாலிக் குறிப்பிடுகிறார்.(13)

3. கோபத்தின் போது சத்தியம் (ஈலாஉ) செய்யப்பட்டாலும், திருப்தியான நிலையில் செய்யப்பட்டாலும் அது செல்லுபடியாகும் என்பதே பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்தாகும். ஏனையோர் கோபத்தின்போது செய்யப்பட்ட சத்தியமே (ஈலாஉ) செல்லுபடியாகும் என்கின்றனர். மனைவியோடு முரண்பட்டுக் கொண்டு, அவளுக்கு தீங்கிழைக்கும் நோக்கிலேயே இத்தகைய ஒரு சத்தியம் இடம்பெற்றிருக்கும் என்பதே இவர்களது வாதமாகும். இதுவே அலி (றழி), இப்னு அப்பாஸ் (றழி) போன்றவர்களது கருத்துமாகும். ஸஈத் பின் ஜுபைர் கூறுகிறார்: ஒரு மனிதர் அலி (றழி) அவர்களிடத்தில் வந்தார். நான் எனது மனைவியோடு இரண்டு வருடங்களுக்கு உறவு கொள்வதில்லை என சத்தியம் செய்து விட்டேன் என்றார். நீர் 'ஈலாஉ' எனும் சத்தியத்தை செய்திருப்பதாகவே நான் கருதுகிறேன் என அலி (றழி) கூறினார். அதற்கு அம்மனிதர், அவள் என் பிள்ளைக்கு பாலூட்டிக் கொண்டிருப்பதனாலேயே நான் அவ்வாறு சத்தியம் செய்தேன் என்றார். அப்படியாயின், அது 'ஈலாஉ' எனும் சத்தியமல்ல என்றார் அலி (றழி). இது போன்ற பல ரிவாயத்துக்கள் அலி (றழி) அவர்களிடமிருந்து அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இமாம்களான ஹஸனுல் பஸரீ, இப்றாஹிம் நகஈ போன்றவர்களிடமிருந்தும் இதுபோன்ற அறிவிப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குழந்தையின் மீது கொண்ட அன்பின் காரணமாக ஒருவர்

13- (தப்ஸீருல் குர்துபீ, பாகம்: 3, பக்கம்: 107)

அக்கக்குழந்தை பாலருந்தும் காலப்பகுதியில் தனது மனைவியோடு உறவு கொள்வதில்லை என சத்தியம் செய்தால் அவரது நிலைமை என்ன? என இமாம் ஹம்மாத் இமாம் இப்றாஹீம் நகஈயிடம் வினவினார். அப்போது இப்றாஹீம் 'ஈலாஉ' எனும் சத்தியம் கோபமுற்றிருக்கையில் இடம்பெறக்கூடிய ஒரு விடயம் என்றே நான் அறிவேன் எனக் கூறினார். அல்லாஹ், ஈலாஉ பற்றி வசனங்களில், 'அவர்கள் திரும்பி விட்டால்' (பஇன் பாஉ) எனக் குறிப்பிட்டுள்ளான். 'பைஉ' என்ற சொல் கோபத்திலிருந்து மீளலையே குறிக்கிறது என துர்ருல் மன்ஸூர் எனும் நூல் குறிப்பிடுகிறது. இவ்வசனத்தில் வரும் 'பைஉ' எனும் சொல்லை பொதுவாக மீளல் எனும் கருத்திலேயே அறிஞர்கள் விளக்கியுள்ளனர். அவர்கள் இங்கு கோபத்தில் ஈலாஉ இடம் பெற்றதா? இல்லையா? என நோக்கவில்லை. மாற்றமாக, செய்த சத்தியத்திலிருந்து மீளலையே நாடியுள்ளனர். உறவு கொள்வதில்லை என்ற சத்தியம் கோபத்தோடு செய்யப்பட்டிருந்தாலும் சரியே. திருப்தியான நிலையில் செய்யப்பட்டிருந்தாலும் சரியே. அது ஈலாஉ தான் என இமாம் இப்னு ஸீரீன் கூறுகின்றார். இதுவே இப்னு மஸ்ஊத் (றழி), இமாம் ஸவ்ரீ, இமாம் மாலிக், ஈராக் நாட்டு சட்ட அறிஞர்கள், இமாம் ஷாபிஈ, ஷாபிஈ மத்ஹப் அறிஞர்கள், இமாம் அஹ்மத் போன்றோரது கருத்துமாகும். இமாம் மாலிக் மேலுள்ள கருத்தில் இருந்தாலும் பிள்ளையின் நலனைக் கருத்திற் கொண்டு சத்தியம் செய்யப்படாதிருப்பின் என்ற நிபந்தனையை இடுகின்றார். இமாம் இப்னுல் முன்திர் இக்கருத்தே (கோபம், கோபமின்மை எந்நிலைமையில் செய்யப்பட்ட சத்தியமும் ஈலாஉ தான்) மிகவும் சரியானது. ஏனெனில், லிஹாரோ, தலாகோ வேறு சத்தியங்களோ அவை கோபத்தினால் இடம்பெற்றிருப்பினும், கோபமின்றி இடம்பெற்றிருப்பினும் அவை சமமானவையே எனும் ஏகோபித்த கருத்து அவர்களிடம் காணப்படுகையில், 'ஈலாஉ' எனும் சத்தியத்தை மாத்திரம் எவ்வாறு பிரித்து நோக்குவது?! அதுவும் ஏனையவற்றைப் போன்றதே'' என அவர் குறிப்பிடுகிறார்.

இமாம் குர்துபீ: ''எந்நிலைமையிலும் 'ஈலாஉ' செல்லுபடியாகும் என்ற கருத்தையே அல்குர்ஆன் காட்டி நிற்கிறது. கோபமான நிலையில் இடம்பெற்ற ஈலாஉ தான் செல்லுபடியாகும் என்று பிரத்தியேகமாக வரையறுத்துச் சொல்ல ஆதாரம் அவசியமாகும். அவ்வாறு பின்பற்றுவதற்கு கட்டாயமான வழியொன்றின் மூலம் இக்கருத்து பெறப்படவில்லை'' (தப்ஸீருல் குர்துபீ) எனக் கூறுகின்றார்.

4. 'ஈலாஉ' எனும் சத்தியத்தின்படி மனைவியை விட்டும் விலகி இருக்க முடியுமான காலப்பகுதி சம்பந்தமாக நான்கு வகையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக இமாம் பக்ருத்தீன் அர்ராஸீ குறிப்பிடுகின்றார்.

(அ) 'ஒருபோதும் மனைவியைத் தொடுவதில்லை' என சத்தியம் செய்யாத வரை ஈலாஉ எனும் சத்தியம் செய்தவராக கருதப்பட மாட்டார் என இப்னு அப்பாஸ் (றழி) கூறுகிறார்.

(ஆ) எக்கால அளவைக் குறிப்பிட்டு சத்தியம் செய்தாலும் - அது ஒரு நாளாக இருப்பினும் சரியே அவர் 'ஈலாஉ' எனும் சத்தியம் செய்தவராகக் கருதப்படுவார் என ஹஸன், இஸ்ஹாக் ஆகியோர் கூறுகின்றனர்.

(இ) 'ஈலாஉ' க்குரிய காலமாக நான்கு மாதமும் அதற்கு மேற்பட்ட காலப்பகுதியுமே கருதப்படும் என இமாம் அபூஹனீபா, இமாம் ஸவ்ரீ ஆகியோர் கருதுகின்றனர்.

(ஈ) நான்கு மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியாக அமையாத போது அச்சத்தியம் 'ஈலாஉ' என கருதப்பட மாட்டாது என இமாம் மாலிக், இமாம் ஷாபிஈ, இமாம் அஹ்மத் ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய கருத்து முரண்பாடு உருவாகக் காரணம் 'ஈலாஉ'''பற்றி பேசுகின்ற அல்குர்ஆன் வசனங்களே!. அவை சத்தியத்தின் பின்னர் ஒருவர் எவ்வளவு காலத்துக்கு மனைவியை நெருங்காதிருக்கலாம் என்பதைப் பற்றியே பேசுகின்றன. எவ்வளவு காலத்துக்கு மனைவியை நெருங்குவதில்லை என சத்தியம் செய்யலாம்? என்பதைப் பற்றி அவை பேசவில்லை.

5. இமாம் இப்னுல் முன்திர்: ''குறிப்பிட்ட வசனங்களில் வருகின்ற 'மீளுதல்' எனும் பதத்தின் பொருள் உடலுறவு கொள்ளலாகும். நோய், சிறை செய்யப்பட்டிருத்தல் போன்ற நியாயமான காரணங்கள் உள்ளவர்கள் சத்தியத்தை வாபஸ் பெற்று விட்டால் (மீண்டு விட்டால்) அது சரியானதே! அதன் பின்னர், அப்பெண் அவரது மனைவியாக கருதப்படுவாள். பிரயாணியாக இருந்தவர் பிரயாணத்தை முடித்துவிட்டால், நோயாளி குணமடைந்து விட்டால், சிறை செய்யப்பட்டவர் விடுதலை பெற்று விட்டால் - இவ்வாறு அவர்களுக்கு உறவு கொள்ளாமல் இருப்பதற்கு காணப்பட்ட நியாயங்கள் இல்லாது போய் விட்டால் - உறவு கொள்ள வேண்டும். தொடர்ந்தும் உறவு கொள்ள மறுத்தால், நான்கு மாதங்கள் கடந்தும் இருந்தால் அவ்விருவரும் பிரித்து வைக்கப்பட வேண்டும் என அறிஞர்கள் குறிப்பிடுவதாக கூறியுள்ளார்.

ஒருவர் உறவு கொள்ள முடியாமல் இருப்பதற்கான நியாயமான காரணங்கள் இருக்கும் நிலையில், அவர் தனது மனைவியின் பால் மீண்டுவிட்டார் என்பதற்கான வேறு ஏதேனும் ஆதாரங்கள் இருந்தால் அது ஏற்கப்படும். அவர் மனைவியை சேர்த்துக் கொண்டவராக கருதப்படுவார் என சிலர் கூறுகின்றனர். இமாம்களான ஹஸன், இக்ரிமா, நகஈ, அவ்ஸாஈ ஆகியோர் இக்கருத்தையே கொண்டுள்ளனர்.

ஒருவரது கூற்றின் மூலமும், சாட்சிகளை அமர்த்துவதன் மூலமும் மாத்திரமே மனைவியின் பால் திரும்ப மீளலாம். அப்போதே 'ஈலாஉ' எனும் சத்தியத்திலிருந்து மீண்டவராக, அதற்குரிய சட்ட திட்டங்களுக்கு உள்ளாகாதவராக அவர் கருதப்படுவார்'' எனவும் இமாம் நகஈ குறிப்பிட்டுள்ளார்.

ஒருவருக்கு உடலுறவு கொள்வதில் ஏதும் சங்கடங்கள் இருந்தால், தனது உள்ளத்தின் மூலமாக அவர் மனைவியின் பால் மீள்வார் என இமாம் அஹ்மத், இமாம் அபூ கிலாபா ஆகியோர் கூறுகின்றனர்.

ஒருவருக்கு உடலுறவு கொள்ள முடியாவிட்டால், 'நான் அவளின் பால் மீண்டு விட்டேன்' என அவர் கூற வேண்டும் என இமாம் அபூஹனீபா கூறுகின்றார்.

நியாயமான காரணங்கள் இருப்பினும் சரியே, இல்லாவிடினும் சரியே மீளுதல் என்பது உடலுறவு கொள்ளல் மூலமே இடம்பெற வேண்டும் என ஒரு சாரார் கூறுகின்றனர். இக்கருத்தையே இமாம் ஸஈத் பின் ஜுபைர் அவர்களும் கொண்டுள்ளார். அவ்வாறே, பிரயாணத்தில் இருப்பினும் சரியே, அல்லது சிறையில் இருப்பினும் சரியே, மீளுதல் உடலுறவின் மூலமே இடம்பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.(14)

6. வரையறுக்கப்பட்ட தவணை கழிவதற்கு முன்னர் கணவன் மனைவியின் பால் மீண்டுவிட்டால் மனைவி விவாகரத்து பெற்றவளாகக் கருதப்பட மாட்டாள். எனினும், கணவன் தான் செய்த சத்தியம் காரணமாக குற்றப் பரிகாரம் கொடுப்பது அவர் மீது கடமையாகுமா? இல்லையா? என்பதைப் பொறுத்தவரையில் இரு கருத்துக்கள் காணப்படுகின்றன.

i) குற்றப்பரிகாரம் வழங்கப்பட வேண்டும். ஏனெனில், அவர் ஒரு சத்தியத்தையே முறித்துள்ளார். எனவே, பொதுவாக சத்தியத்தை முறித்தால் வழங்கப்படுகின்ற குற்றப்பரிகாரம் வழங்கப்பட வேண்டும். 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக உன்னோடு பேச மாட்டேன்' என்று சத்தியம் செய்துவிட்டு பின்னர் பேசி அதை முறிப்பதற்கும், 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக உன்னோடு உறவு கொள்ள மாட்டேன்' என்று சத்தியம் செய்து விட்டு பின்னர் உறவு கொண்டு அச்சத்தியத்தை முறிப்பதற்கும் இடையில் எதுவித வேறுபாடும் கிடையாது. அவ்வாறே, சத்தியத்தை முறித்தால் கப்பாரா எனும் குற்றப் பரிகாரம் வழங்கப்படுவதை கடமையாக்கு கின்ற ஆதாரங்கள் எல்லாவகையான சத்தியங்களுக்கும் பொருந்தக் கூடியவையாகவே உள்ளன.(15)

---

14- (குர்துபீ, பாகம் :3, பக்கம் : 109)

15- (தப்ஸீர் அர்ராஸீ, பாகம் :6, பக்கம் : 88)

ii) குற்றப் பரிகாரம் வழங்குவது கடமையல்ல. ஏனெனில், அல்குர்ஆன் ''எனவே, அதற்குள் (தங்கள் மனைவியரிடம்) அவர்கள் திரும்பிவிட்டால், நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனும், கருணையுடையோனுமாய் இருக்கிறான்'' என்றே குறிப்பிட்டுள்ளது. இங்கு குற்றப் பரிகாரம் சம்பந்தமாக அல்குர்ஆன் எதுவும் குறிப் பிடவில்லை. மாற்றமாக, ''அல்லாஹ் மன்னிப்போனும் கருணை யுடையோனுமாய் இருக்கிறான்'' என்று கூறுவதனூடாக குற்றப் பரிகாரம் வழங்கப்படத் தேவையில்லை என உணர்த்தியுள்ளது.[16]

7. உரிய தவணை முடிவடைந்து விட்டால் தலாக் இயல் பாகவே இடம்பெற்று விடும் என்ற கருத்து இமாம் இப்னு கஸீர் கூறுவது போல ஆதாரபூர்வமான அறிவிப்பாளர் வரிசைகள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. உமர் (றழி), உஸ்மான் (றழி), அலி (றழி), இப்னு மஸ்ஊத் (றழி), இப்னு அப்பாஸ் (றழி), இப்னு உமர் (றழி), ஸைத் பின் ஸாபித் (றழி) ஆகியோரிடமிருந்து இவ்வறிவிப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இக்கருத்தையே மிக அதிகமான

---

16- ஒருவர் ஏதேனும் ஒரு நற்செயலை, நன்மையை அல்லது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நல்ல அம்சத்தை செய்வதில்லை என சத்தியம் செய்தால், அவர் அச்செயலைச் செய்து சத்தியத்தை முறிக்கலாம். அவர் குற்றப்பரிகாரம் வழங்க வேண்டிய அவசியம் கிடையாது என்ற கருத்தை ஒரு தாபிஈ கொண்டுள்ளார். 'அவர்கள் திரும்பி விட்டால், அல்லாஹ் மன்னிப்போனும் கருணையுடையோனுமாய் இருக்கிறான்' என்ற வசனத்தில் குற்றப் பரிகாரம் பற்றி குறிப்பிடப்படாமையை தன் கருத்துக்கு ஆதாரமாக அவர் முன்வைக்கி றார். இக்கருத்து உருவாவதற்கு இன்னோர் அடிப்படையும் உண்டு. ஒரு பாவத்தைச் செய்வதாக செய்யப்படுகின்ற சத்தியம் முறிந்தால் கப்பாராவை வேண்டி நிற்காத வீணான சத்தியமாகவே கருதப்படும். அந்த வகையில், மனைவியோடு உறவு கொள்ளலை விட்டுவிடல் ஒரு பாவமாகும். இப்பாவத்தைச் செய்வதாகவே இங்கு சத்தியம் செய்யப்பட்டுள்ளது. எனவே, அது முறிக்கப்பட வேண்டிய, கப்பாராவை வேண்டி நிற்காத வீணான சத்தியமாகும். இக்கருத்துக்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸும் அமைந்துள்ளது. யார் ஒரு விடயம் சம்பந்தமாக சத்தியம் செய்துவிட்டு, பின்னர் அதனை விட ஒரு விடயத்தைக் காண்கிறாரோ அவர் ஏற்கனவே செய்த சத்தியத்தை விட்டு விடட்டும். அவ்வாறு விட்டு விடுவதே அதற்குரிய குற்றப் பரிகாரமாகும். ( )

ஆனால், 'அவர்கள் தலாக் சொல்வதென்று தீர்மானித்து விட்டால்' என்ற வசனங்கள் விடயத்திலும் கருத்துவேறுபாடு காணப்படுகின்றது. குறிப்பிட்ட தவணை முடிந்தவுடன் தலாக் இயல்பாக இடம்பெறுமா? அல்லது நீதிமன்றத்திற்கு விடயம் கொண்டு செல்லப்பட வேண்டுமா? பெண் தனது விவகாரத்தை நீதிபதியிடம் முறையிட்டால், அவர் கணவனுக்கு, மீள்வதற்கான அல்லது தலாக் சொல்வதற்கான உரிமையை வழங்கலாமா?

தாபிஊன்கள் கொண்டுள்ளனர். இமாம் அபூஹனீபாவும் அவரது மத்ஹபை சார்ந்த அறிஞர்களும் இமாம் ஸவ்ரீயும் இன்னும் பலரும் இதே கருத்தையே கொண்டுள்ளனர்.

தவணை முடிவடைந்துவிட்டால் இடம்பெறும் தலாக் தலாகுர் ரஜ்ஈ என கருதப்படுமா? அல்லது தலாக் பாஇன் என அது கருதப்படுமா? என்பதிலும் கருத்துவேறுபாடு நிலவுகிறது.

மூன்று இமாம்களும், சட்ட அறிஞர்களில் ஒரு பிரிவினரும் பல ஸஹாபாக்களிடமிருந்து (10க்கு மேற்பட்ட) இக்கருத்து அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. ''கணவன் தனது சுயவிருப்பின் பேரில் தவணை முடிவடைவதற்குள் மனைவியின் பால் மீளாவிட்டால் தலாக் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட வேண்டும். அவன் தலாக் சொல்லாவிடில் நீதிபதி தலாக் சொல்வார். அது தலாக் ரஜ்ஈயாகவே இருக்கும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். மாலிகீ மத்ஹபைச் சார்ந்த இமாம் இப்னுல் அரபீ, 'தங்கள் மனைவியரை நெருங்கு வதில்லையென்று சபதம் செய்து விலகி இருப்பவர்களுக்கு நான்கு மாதத் தவணையுண்டு. எனவே, அவர்கள் திரும்பிவிட்டால்' எனும் வசனத்திற்கு தவணை முடிவடைந்த பின்னர் அவர்கள் திரும்பி விட்டால் நிச்சயமாக அல்லாஹ் மன்னிக்கக் கூடியவனாகவும் கருணையுள்ளவனாகவும் இருக்கிறான். தவணை முடிவடைந்ததன் பின்னர் தலாக் சொல்ல அவர்கள் தீர்மானித்து விட்டால் அல்லாஹ் யாவற்றையும் செவியுறுவோனாகவும் யாவற்றையும் அறிந்தவனாக வும் இருக்கிறான் என்றே நாம் கருத்துச் சொல்கிறோம். ஆனால் அவர்கள் - ஹனபீ மத்ஹபைச் சார்ந்தோர் - இவ்வசனத்துக்கு, மனைவியை நெருங்குவதில்லை என சத்தியம் செய்பவர்களுக்கு நான்கு மாத கால அவகாசம் உண்டு. அதற்குள் அவர்கள் திரும்பி விட்டால் நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்போனும், கருணை யுடையோனுமாய் இருக்கிறான். இந்நான்கு மாத கால அவகாசத்துக் குள் மனைவியின் பால் மீள்வதை விட்டுவிடுவதன் மூலம் தலாக் சொல்லத் தீர்மானித்துவிட்டால், நிச்சயமாக அல்லாஹ் அனைத்தை யும் செவியுறுபவனாகவும் யாவற்றையும் அறிந்தவனாகவும் இருக்கி றான் என்றே கருத்துக்கொள்கின்றனர்'' எனக் குறிப்பிடுகிறார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கும் அவர், இங்கு குறிப்பிடப் படும் இரு கருத்துக்களும் சமமான சாத்தியப்பாடுகளைக் கொண்ட வையே. இவ்விரு கருத்துக்களுமே சமதரத்தில் இருப்பதனால் ஸஹாபாக்கள் இது விடயத்தில் கருத்துத் தெரிவிக்காதிருந்தனர் என குறிப்பிடுகின்றார். இக்கருத்தை விளக்கும் இமாம் குர்துபீ இரு கருத்துக்களுமே சமதரத்தில் இருந்தாலும் கூபாவாசிகளது (அபூ ஹனீபாவினதும் அவரது கருத்தை ஆதரிப்போரினதும்) கருத்தே இவ்விடத்தில் பலம் கூடியதாக காணப்படுகிறது. மாதத்தை அல்லது மாதவிடாயை அடிப்படையாகக் கொண்டு இத்தா இருக்கும் பெண்ணுடன் ஒப்பிட்டே இக்கருத்து பலமானது எனப்படுகிறது. இத்தா காலம் (3 மாதங்கள் / 3 குர்உகள்) முடிவடைந்து விட்டால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப் பட்டு விடுகின்றது. இந்நிலையில் மனைவி கணவனை விட்டு பிரிந்து விட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை கிடையாது. இவ்வாறு பிரிந்து விட்ட அவளின் மீது அவளின் அனுமதியின்றி கணவன் எதுவித அதிகாரத்தையும் செலுத்த முடியாது. இவ்வாறே, மனைவியை நெருங்குவதில்லை என சத்தியம் செய்தவரது மனைவி நான்கு மாதம் கழிந்து விட்டால், அவரை விட்டு பிரிந்தவராகவே கருதப்படுவாள். அவர் மறதியின் காரணமாகத்தான் உரிய காலத்துக் குள் மீளாது இருந்திருந்தாலும் தலாக் நிகழ்ந்து விட்டதாகவே கருதப்படும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

8. கணவன் நோய், பாலுட்டல் போன்ற எதுவித நியாயமான காரணங்களும் இன்றி மனைவிக்குத் தீங்கிழைக்கும் நோக்கில் உறவு கொள்ளாது விலகியிருந்தால் -அவர் உறவு கொள்வதில்லை என சத்தியம் செய்திருக்காவிட்டாலும்- ஈலாஉக்குரிய சட்டமே அவர் விவகாரத்தில் பின்பற்றப்படும். மனைவி தான் விரும்பினால் விட யத்தை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லலாம். முறைப்பாடு செய் யப்பட்ட நாளிலிருந்து அவருக்குரிய தவணை தீர்மானிக்கப்படும். ஈலாஉ என்பதன் மூலம் இழைக்கப்படும் தீங்கு இங்கும் இழைக் கப்படுவதனாலேயே இத்தீர்ப்பு வழங்கப்படுகிறது. ஏனெனில், ஈலாஉக்குரிய சட்டம் சத்தியம் செய்ததற்காக வந்த சட்டமல்ல.

மாற்றமாக, அச்சத்தியத்தின் நோக்கம் தீங்கிழைப்பதாக, உறவு கொள்ளாதிருப்பதாக அமைந்திருப்பதனால் வந்த சட்டமாகும் என எமது அறிஞர்கள் கூறுகின்றனர் என இப்னுல் அரபீ குறிப்பிடுகின்றார். அலி (றழி), இப்னு அப்பாஸ் (றழி) ஆகியோர், மனைவி பாலூட்டிக் கொண்டிருப்பதனால் அவளைத் தொடுவதில்லை என சத்தியம் செய்தால் அது ஈலாஉ ஆக கருதப்பட மாட்டாது. ஏனெனில், இங்கு நோக்கம் சரியானதாக உள்ளது. தீங்கிழைக்கும் எண்ணம் இங்கு கிடையாது என குறிப்பிடுகின்றனர்.[17]

யார் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மனைவியோடு உறவு கொள்ளாது இருந்து விட்டாரோ அவர் மனைவியை விட்டும் பிரித்து வைக்கப்பட மாட்டார். மாற்றமாக, தீங்கிழைக்கும் நோக்கில் மனைவியைத் தொடர்ந்து தன்னுடன் வைத்துக் கொள்ளாதிருக்குமாறு அவர் உபதேசிக்கப்படுவார். இறைவனை அஞ்சி நடக்குமாறு ஏவப்படுவார்[18] என்றொரு கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

ஒருவர் தனது மனைவியோடு பேசுவதில்லை என்றோ அல்லது அவளுக்கு பராமரிப்புச் செலவு வழங்குவதில்லை என்றோ சத்தியம் செய்தால், அல்லது மனைவிக்குத் தீங்கிழைக்கக் கூடிய வகையில் ஏதேனும் ஒரு சத்தியத்தைச் செய்தால் அச்சத்தியம் ஈலாஉ எனக் கருதப்படுமா? என்ற வினாவுக்கு விடையளிக்கும் இப்னுல் அரபீ, இது விடயத்தில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை காணப்படுகிறது. அச்சத்தியம் ஈலாஉ என்றே கருதப்பட வேண்டும் எனும் கருத்தே சரியானதாகும். ஏனெனில், ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல தீங்கிழைக்கும் நோக்கம் இங்கு காணப்படுகிறது. இறைவன், ''அவர்களோடு நல்ல முறையில் பழகுங்கள்'' *(4:19)* என கட்டளையிட்டும் இருக்கிறான் எனக் குறிப்பிடுகிறார்.

'ஈலாஉ' பற்றி வந்துள்ள சுருக்கமான குர்ஆன் வசனங்களின் நிழலில், அவற்றிலிருந்து பெறப்பட்ட வளம் மிக்க சட்டங்கள் பலவற்றை இங்கு நாம் நோக்கினோம். இச்சட்டங்கள் மேலதிக

---

17- (அஹ்காமுல் குர்ஆன், பாகம்: 3, பக்கம் : 111)

18- (குர்துபீ, பாகம்: 3, பக்கம்: 106)

விளக்கங்களில் வித்தியாசப்பட்டாலும் அச்சட்ட வசனங்களோடு பிணைந்து காணப்படுகின்றன. அவற்றின் அடிப்படை நோக்கத் தோடு தொடர்புபடுகின்றன. பெண்களுக்கு தீங்கிழைப்பதை விட்டும் ஆண்களைத் தடுக்க வேண்டும் என்ற அடிப்படையான நோக்கத்தில் அவை ஒன்றுபடுகின்றன.

## விலை நிர்ணயம் பற்றிய ஹதீஸ்

ஸுன்னாவிலிருந்து, குறிப்பாக கொடுக்கல்வாங்கல் சம்பந்தமான ஹதீஸ்களில் இருந்து இன்னோர் உதாரணத்தைத் தெரிவு செய்வோம். இந்த ஹதீஸ் பல்வேறுபட்ட விளக்கங்களுக்கு இஜ் திஹாதுகளுக்கு -அவற்றுள் சில பலமானவை, சில பலம் குறைந்தவை- எவ்வாறு இடமளிக்கிறது என்பதனை நோக்குவோம்.

இந்த ஹதீஸ் 'முன்தகா அல் அக்பார் மின் அஹாதீஸி ஸய்யிதில் அக்யார்''எனும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனஸ் பின் மாலிக் (றழி) அவர்களால் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. அனஸ் (றழி) கூறுகிறார்: நபி (ஸல்) அவர்களது காலத்தில் விலைவாசி உயர்ந்தது. அவ்வேளை, அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் விலையைக் கட்டுப்படுத்துவது சிறந்ததல்லவா? என கூறினர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், நிச்சயமாக அல்லாஹ்தான் சுருக்குபவன், விரிவாக்குப வன், உணவளிப்பவன், விலைகளைக் கட்டுப்படுத்துபவன். இரத்த விடயத்திலோ செல்வத்தின் விடயத்திலோ யாரும் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக கூறி என்னிடம் நீதியை வேண்டி நிற்காத நிலையில் நான் அல்லாஹ்வை சந்திக்க விரும்புகிறேன்'' எனக் குறிப்பிட்டார்கள். ஆதாரம்: அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ (ஆதார பூர்வமானது). இப்னு மாஜா, பஸ்ஸார், அபூயஃலா, இமாம் இப்னு ஹஜர் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை இமாம் முஸ்லிம் விதிக்கும் நிபந்தனைகளின் தரத்தில் காணப்படுகிறது என்கிறார். இமாம் இப்னு ஹிப்பான் இதனை ஓர் ஆதாரபூர்வமான ஹதீஸ் என்கிறார்.

இமாம் ஷவ்கானீ ''இவ்விடயம் சம்பந்தமாக அபூஹுரைரா (றழி) அவர்கள் அறிவிப்பதாக அஹ்மத், அபூதாவூத் ஆகியோர் பின்வரும்

ஹதீஸைப் பதிந்துள்ளனர். ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார். அல்லாஹ்வின் தூதரே! விலையைக் கட்டுப்படுத்துங்கள் என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் இல்லை, நான் அல்லாஹ் விடம் பிரார்த்திக்கிறேன் என்றார்கள். பின்னர், வேறொரு மனிதர் வந்தார். அல்லாஹ்வின் தூதரே! விலையைக் கட்டுப்படுத்துங்கள் என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள்: அல்லாஹ் விலையைக் குறைக்கிறான், கூட்டுகிறான் என பதிலளித் தார்கள். இமாம் இப்னு ஹஜர் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை 'ஹஸன்' எனும் தரத்தில் உள்ளது என்கிறார்.

அனஸ் (றழி) அவர்களால் அறிவிக்கப்படும் ஹதீஸ் போன்று பல ஸஹாபாக்களால் இது விடயத்தில் ஹதீஸ்கள் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளன. எனவே, எதுவித கருத்து வேறுபாடுகளுக்கும் இடம்பாடில்லாத வகையில் விலைக்கட்டுப்பாட்டைத் தடுத்து ஹதீஸ் வந்திருக்கின்றது என்பது உறுதியான விடயமாகும்.

விலைக்கட்டுப்பாடு என்பதன் கருத்து தெளிவானது. பொருட் களுக்கு ஒரு குறிப்பிட்ட விலையை அரசாங்கம் நிர்ணயிக்கும். அவ்வேளை அவ்விலையை விட விலையைக் கூட்டவோ, குறைக்கவோ வியாபாரிகளுக்கு உரிமை இருக்காது. இவ்விலையே கட்டுப்பாட்டு விலை எனப்படுகிறது.

மேலுள்ள ஹதீஸ் வியாபாரத் துறையில் சந்தை சுதந்திரமாக இயங்க விடப்பட வேண்டும். கேள்வி -நிரம்பல் காரணிகளே விலையைத் தீர்மானிக்க இடமளிக்கப்பட வேண்டும் என்பதையே இஸ்லாமிய ஷரீஆ விரும்புகிறது என்பதற்கு ஆதாரமாக அமை கிறது. அத்தியாவசியமான காரணம் எதுவும் இன்றி தனிமனிதர் களின் சுதந்திரத்தில் தலையிடுவது அநீதியானது. அத்தனிமனிதர்கள் உற்பத்தியாளர்களாக இருந்தாலும் சரியே. வியாபாரிகளாக இருந்தா லும் சரியே. நுகர்வோராக இருந்தாலும் சரியே. அத்தலையீடு அநீதியானது. அத்தகைய அநீதிகளிலிருந்து விடுபட்ட நிலையில், நிரபராதியான நிலையில் தாம் இறைவனைச் சந்திக்க விரும்புவதாக நபி (ஸல்) அவர்கள் இவ்வாறான ஹதீஸ்களின் மூலம் பிரகடனப் படுத்துகிறார்கள்.

இதனால்தான் அநேகமான சட்ட அறிஞர்கள் கட்டுப்பாட்டு விலை விதிப்பது கூடாது. அது அநீதியானது என்பதற்கு இத்தகைய ஹதீஸ்களை ஆதாரமாகக் கொண்டனர். இமாம் ஷவ்கானி பெரும் பாலான சட்ட அறிஞர்களின் முடிவு இது எனக் குறிப்பிடுகிறார்.

இமாம் ஷவ்கானீ அவர்களது கருத்துப்படி விலைக் கட்டுப்பாடு நிர்ணயிப்பது தடை செய்யப்பட்டதற்கான நியாயம் பின்வருமாறு விளக்கப்படலாம். ''மனிதர்கள் தத்தமது சொத்துக்கள் விடயத்தில் அதிகாரம் வழங்கப்பட்டவர்கள். கட்டுப்பாட்டு விலையை விதிப்பது அவர்களுக்கு இடப்படுகின்ற தடையாக அமையும். ஆட்சியாளர் மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளுமாறு பணிக்கப் பட்டிருக்கிறார். எனவே, அவர் பொருளை வாங்குபவனுக்கு குறைந்த விலையில் பொருள் கிடைக்க வேண்டுமென்பதில் எவ்வளவு கவனமாக இருக்கிறாரோ, அதேபோன்று வியாபாரி களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார். இங்கு கொள்வனவு செய்பவரின் நலனும் வியாபாரியின் நலனும் சமதரத்தில் வைத்து நோக்கப்படுவதால் இருவருக்குமே சுய முடிவுகளுக்கு வருவதற்கு இடமளிப்பது கட்டாயமானது. பொருளின் சொந்தக்காரர் திருப்தியுடன் ஏற்காத ஒரு விலையில் அதனை விற்குமாறு அவரைக் கட்டுப்படுத்துவது அல்லாஹ்வின் கூற்றுக்கு முரணானதாகும். 'உங்களுக்கிடையே பரஸ்பர விருப்பத் தின் அடிப்படையில் கொடுக்கல்-வாங்கல் இருக்க வேண்டும்' *(4:29)* என்றே அவன் கூறியுள்ளான்.[19] கட்டுப்பாட்டு விலை விதிப்பதனை முழுமையாகத் தடை செய்யும் இக்கருத்து தீவிரமானதாகும். இதேவேளை, இமாம் மாலிக் கட்டுப்பாட்டு விலை விதிப்பதனை ஆகுமாக்கியதாக இமாம் ஷவ்கானீ குறிப்பிடுகிறார். இங்கு இமாம் மாலிக் நுகர்வோருக்கு தீங்கு ஏற்படக்கூடாது, எண்ணிக்கையில் குறைந்த வியாபாரிகளின் நலனை விட நுகர்வோரான பொது மக்களின் நலனுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே இக்கருத்தை முன்வைத்திருக்கிறார்.

---

19- (நைலுல் அவ்தார், பாகம்: 05, பக்கம்: 232)

விலையேற்றம் நிகழும்போது கட்டுப்பாட்டு விலை விதிக்கலாம் என்றொரு கருத்து ஷாபிஈ மத்ஹபில் காணப்படுகிறது.

கட்டுப்பாட்டு விலை விதிக்கும் விவகாரத்தில் உணவுப் பண்டங்களையும் (மனிதர்களுக்கான உணவாக இருக்கலாம், கால்நடைகளுக்கான உணவாக இருக்கலாம்) ஏனைய பண்டங்களையும் பிரித்து நோக்குவோரும் உண்டு. இந்த வகையில் ஸைத் பிரிவைச் சேர்ந்த சில அறிஞர்கள் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உரிய உணவுப் பண்டங்களைத் தவிர ஏனைய பண்டங்களுக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கலாம் என்ற கருத்தைக் கொண்டுள்ளதாக 'கைஸ்' என்ற நூலின் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மனிதர்களதும் மிருகங்களதும் உணவுப் பண்டங்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கலாம். (மனித உணவுப் பண்டங்களுக்கு வழங்கும் அதே முக்கியத்துவத்தை, இடத்தை சட்ட அறிஞர்கள் மிருக உணவுகளுக்கும் வழங்கியிருப்பது அவதானிக்கத் தக்கது) இக்கருத்து அனைவரும் உடன்படும் கருத்தாக இருக்கலாம்'' என அப்பிரிவைச் சேர்ந்த ஒரு நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இமாம் ஷவ்கானீ இக்கருத்துக்கள் அனைத்தையும் நிராகரிக்கின்றார். விலைக் கட்டுப்பாடு சம்பந்தமாக வந்துள்ள ஹதீஸ்கள் பொதுவானவை. எல்லா வகையான விலைக் கட்டுப்பாடுகளையும் குறிக்கக் கூடியவை என்ற ஆதாரத்தின் அடிப்படையில் விலைக் கட்டுப்பாடு முழுமையாக தடைசெய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்தை அவர் பலப்படுத்துகிறார். குறிப்பிட்ட சில பொருட்களுக்கு, அல்லது குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் கட்டுப்பாட்டு விலை விதிக்கலாம் என கூறுவதற்கு ஆதாரம் தேவை. அத்தகைய எதுவித ஆதாரமும் கிடையாது (நைலுல் அவ்தார்) என அவர் குறிப்பிடுகிறார்.

எனினும், விலைக்கட்டுப்பாடு சம்பந்தமாக வந்துள்ள ஹதீஸ்களை ஆழமாக நோக்கும் ஒருவர் சந்தையில் கேள்வி-நிரம்பல் காரணிகளில் ஏற்படுகின்ற இயல்பான மாற்றங்களினால் விலையேற்றம் நிகழும்போது, கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படுவதையே அவை அநீதியாகக் கருதி, அதனைத் தடுக்கின்றன என்பதனைப் புரிந்து கொள்வார். பொருட்கள் பதுக்கப்படுவதனால் அல்லது

விலையில் திருவிளையாடல் செய்யப்படுவதனால் அல்லது வியா பாரிகளின் அத்துமீறலினால் அல்லது நுகர்வோரைச் சுரண்டும் நோக் கில் உற்பத்தியாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையே இடம்பெற்றிருக்கும் உடன்பாட்டினால் விலையில் அதிகரிப்பு ஏற்படுமாயின், இந்நிலையில் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படு வதனை அவை தடுக்கவில்லை என்பதனையும் புரிந்து கொள்வார்.

நபி (ஸல்) அவர்களிடம் விலைவாசி உயர்வு சம்பந்தமாக முறை யிட்ட ஸஹாபாக்கள் விலை உயர்ந்திருக்கிறது என்றே முறை யிட்டனர். சந்தையில் வியாபாரிகள் விலையை வைத்து விளை யாட்டுக் காட்டுகின்றனர். எனவே, அவர்களது பேராசையில் இருந்து எம்மைக் காத்து எமக்கு கருணை காட்டுங்கள் என அவர்கள் முறையிடவில்லை அல்லது இலாபம் சம்பாதிப்பதில் எல்லை மீறி நடக்கிறார்கள் என முறையிடவும் இல்லை. அல்லது நியாயமான விலையில் விற்பனை செய்கிறார்கள் இல்லை என்றோ, நியாயமான இலாபத்தைத் தரக்கூடிய வகையில் உரிய விலைக்கு விற்பனை செய்வதில்லை என்றோ அவர்கள் முறையிடவில்லை. எனவே, சந்தையில் கேள்வி-நிரம்பல் சக்திகளின் தாக்கத்தினால் இயல் பாகவே விலை கூடியிருந்தது என்பதனையும், இத்தகைய சந்தர்ப்பத்தில் கட்டுப்பாட்டு விலை விதிப்பது கூடாது. அது அநீதியாகும் என்பதையும் இந்த ஹதீஸ்கள் உணர்த்தி நிற்கின்றன.

நபி (ஸல்) அவர்கள் வழங்கிய பதிலும் இக்கருத்துக்கு ஆதாரமாக அமைகின்றது. இல்லை. அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன் / பிரார்த்தியுங்கள் என்றே அவர்கள் பதிலளித்தார்கள். வியாபாரிகளின் அத்துமீறலினால், அநியாயத்தினால் விலை உயர்ந்திருந்தால் அதனை நபி (ஸல்) தடை செய்திருப்பார்கள். நன்மையை ஏவுதலும் தீமையைத் தடுத்தலும் பொறுப்பை நிறைவேற்றலும் கடமை என்பதனால் அவர்கள் உரிய நடவடிக்கையை எடுத்திருப்பார்கள். ''நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புதாரர்கள். நீங்கள் ஒவ்வொரு வரும் அவரவருக்குரிய பொறுப்பைப் பற்றி வினவப்படுவீர்கள்'' என்ற வகையில் தமது பொறுப்பை அவர்கள் செய்திருப்பார்கள். இறைவனது ஏற்பாட்டின் காரணமாக விலை கூடியிருப்பதனால் நபி (ஸல்) அவர்களுக்கு பிரார்த்திப்பதனைத் தவிர, விலைவாசி

உயர்வதைத் தடுக்குமாறு, சோதனையை நீக்குமாறு இறைவனிடம் மன்றுடுவதனைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

அநீதியும் பதுக்கலும் பரவலாக இடம்பெறுகையில், பலசாலிகள் பலவீனர்களில் செல்வாக்குச் செலுத்துகையில், பேராசை பிடித்த சில தனிநபர்கள் சந்தையிலும் பொருட்களின் விலைகளிலும் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்கையில், இறைவனை அஞ்சாது மக்களுக்கு கருணை காட்டாது பொருட்களை இருமடங்கு விலையிலோ, பன்மடங்கு விலையிலோ விற்கையில் கட்டுப்பாட்டு விலை விதிப்பது ஆகுமானதே. பலசாலிகளிடமிருந்து பலவீனர்களைக் காப்பாற்றுவதற்காகவும், மக்களின் உணவுகளை விழுங்கி செல்வந்தர்களாக மாறுபவர்கள் மீது ஏற்பட்டிருக்கும் அதிருப்தியினால், பகைமையினால், பழிவாங்கல் உணர்வினால் சமுதாயம் சிதைவுறுவதையும் வீழ்ச்சியடைவதையும் தடுப்பதற்காகவும் இந்நிலையில் கட்டுப்பாட்டு விலையைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

ஹனபீ மத்ஹபைச் சார்ந்த ஹிதாயா, இக்தியார்'' போன்ற நூல்களில் பின்வரும் கருத்து இடம்பெறுகிறது. பண்டங்களின் சொந்தக்காரர்கள் செல்வாக்குச் செலுத்தும் போது, விலையில் மிக மோசமான அதிகரிப்பை மேற்கொண்டு வரம்பு மீறும்போது, அவர்கள் மீது கட்டுப்பாட்டு விலையை விதிப்பது ஆட்சியாளரின் கடமையாகும். இதனை அவர் அறிஞர்களது ஆலோசனையோடு மேற்கொள்வார். மக்களுக்கு தீங்கிழைக்கப்படுவதைத் தடுக்கவே இந்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.[20]

இமாம் இப்னு தைமிய்யா (றஹ்) அவர்களும் இக்கருத்தை விளக்கியிருக்கிறார்கள். தமது 'ஹிஸ்பா' எனும் நூலில் அவர் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

விலைக்கட்டுப்பாடு விதிக்கப்படல் அநீதியாக, தடுக்கப்பட்டதாக அமையும் சந்தர்ப்பங்களும் உண்டு. நீதியானதாக, ஆகுமானதாக அமையும் சந்தர்ப்பங்களும் உண்டு.

---

20- (ஹிதாயா, பாகம்: 08, பக்கம்: 127)

மக்களுக்கு அநீதி இழைப்பதாக, அவர்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு விலையில் பொருட்களை விற்குமாறு அவர்களை நிர்ப்பந்திப்ப தாக அல்லது அல்லாஹ் அவர்களுக்கு அனுமதித்த ஒரு விடயத்தைத் தடைசெய்வதாக அது அமைந்தால் அப்போது அது ஹராமானதாகும்.

கூடிய விலையில் பொருட்கள் விற்கப்படும் போது உரிய விலை யில் விற்குமாறு, கடமையைச் செய்யுமாறு மக்களை நிர்ப்பந்திக்க லாம். அவ்வாறே, உரிய விலையை விட கூடிய விலை நிர்ணயிப்பதி லிருந்து அவர்களைத் தடுப்பதனூடாக ஹராத்திலிருந்து அவர்களைத் தடுக்கலாம். இவ்வாறு மக்களுக்கு மத்தியில் நீதியை நிலைநாட்டும் நோக்கில் கொண்டுவரப்படுகின்ற விலைக்கட்டுப்பாடு அனுமதிக் கப்பட்டதாகும். அதனைக் கடமையானது என்று கூடக் கூறலாம்.

முதலாவது வகையான விலைக்கட்டுப்பாடு சம்பந்தமாகவே அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸும், அக்கருத்தில் வந்துள்ள ஹதீஸ்களும் பேசுகின்றன. மனிதர்கள் அநீதி இழைக் காது, நியாயமான முறையில் பண்டங்களை விற்பனை செய்யும் போது, விலையில் அதிகரிப்பு ஏற்படுமாயின் அதற்கு குறிப்பிட்ட பொருளுக்கு நிலவும் தட்டுப்பாடு அல்லது சனத்தொகையில் ஏற்பட் டுள்ள அதிகரிப்புத் தான் காரணமாக அமையும். இங்கு பொருளா தார அறிஞர்கள் குறிப்பிடுகின்ற கேள்வி நிரம்பல் விதிக்கமைய விலை கூடுவதே சுட்டிக் காட்டப்படுகின்றது. (கேள்வி அதிகரித்து, நிரம்பல் அதிகரிக்கவில்லையாயின் விலை அதிகரிக்கும்) இந் நிலைக்கு காரணம் இறைவனே! இத்தகைய சூழ்நிலையில் குறிப் பிட்ட இவ்விலையிலேயே பொருளை விற்பனை செய்ய வேண்டு மென மக்களை கட்டாயப்படுத்துவது அவர்கள் மீது அநியாயமாக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நிர்ப்பந்தமாகவே அமையும்!!

இரண்டாவது வகையான விலைக்கட்டுப்பாடு பின்வரும் சந்தர்ப்பத்திலேயே விதிக்கப்படுகிறது. மக்களுக்கு பண்டங்கள் அத்தியவசியமானதாக இருக்கும் நிலையில் அப்பண்டங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை விற்பனை செய்யாது விலகியிருக் கின்றனர். உரிய விலையைவிட கூடிய விலைக்கே அவர்கள் விற்பனை செய்ய தயாராக உள்ளனர். இந்நிலையில் உரிய விலைக்கு

பொருளை விற்பது அவர்கள் மீதுள்ள கடமை. உரிய விலைக்கு பொருளை விற்கும் அக்கடமையைச் செய்யுமாறு அவர்களைக் கட்டாயப்படுத்தலே ''விலைக்கட்டுப்பாடு விதித்தல்'' என்ற பெயரில் இங்கு இடம்பெறுகிறது. இங்கு விதிக்கப்படும் விலைக் கட்டுப்பாடானது, நீதியாக நடந்து கொள்ளுமாறு அல்லாஹ் அவாகள் மீது சுமத்தியுள்ள கடமையை செய்யுமாறு அவர்களை கட்டாயப்படுத்துகின்ற ஒரு தொழிற்பாடாகத் தான் அமைகின்றது. (ரிஸாலதுல் ஹிஸ்பா, இப்னு தைமிய்யா)

இக்கருத்துக்களை முன்வைக்கும் இமாம் இப்னு தைமிய்யா இவற்றினை அடியாகக் கொண்டு, விலையைக் கட்டுப்படுத்துதல் ஆகுமானது என்ற கருத்தை முன்வைக்கிறார்.

பண்டங்களுக்கு மாத்திரமன்றி சேவைகளுக்கும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படுவது கடமையாகும் என்பதே அவரது கருத்தாகும். உதாரணமாக, தொழில் அதிபர்கள் வேலைக்காரர் களுக்கு, தொழிலாளர்களுக்கு கூலியை குறைத்துக் கொடுக்க தமக்குள் உடன்பட்டுக் கொள்கின்றனர். உரிய கூலியை விட குறைந்த கூலியையே வழங்குகின்றனர் என்றிருந்தால், ஆட்சியாளர் தலையிட்டு நியாயமான அளவு கூலியை வரையறுப்பது கடமை யாகும். தொழிலதிபர்களின் மூலமாகவும், முதலாளிமார்களின் மூலமாகவும் தொழிலாளர்கள் அநீதிக்கு உள்ளாக்கப்படாதிருக்க இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவ்வாறே, உரிய கூலியை விட அதிகமான கூலி தராவிட்டால் வேலை செய்வதில்லை என்ற முடிவுக்கு தொழிலாளர்கள் வந்து விட்டால், இங்கும் தொழில் அதிபர்களைப் பாதுகாப்பதற்காக ஆட்சி யாளர் தலையிட வேண்டும். உற்பத்தியாளர்கள் வியாபாரிகளுக்கு எதிராக ஒன்றிணையும்போது, அல்லது நுகர்வோருக்கு எதிராக வியாபாரிகள் ஒன்றிணையும்போது தலையீடு செய்வது கடமை யாவது போலவே, இங்கும் தலையீடு செய்வது கடமையாகிறது.

மேற்குறிப்பிட்ட எல்லா நிலைமைகளிலும் தலையீடு செய்யப் படுவதற்கு காரணம், குறிப்பிட்ட ஒரு குழுவினருக்கு அல்லது

வர்க்கத்தினருக்கு சார்பாக எப்போதும் தொழிற்பட வேண்டும். அவர்கள் அநீதி இழைத்தாலும் அவர்களுடன் இருக்க வேண்டும். அநீதிக்கு உட்பட்டாலும் அவர்களுடன் இருக்க வேண்டும் என்பதல்ல. மாற்றமாக, நீதி எப்பிரிவினருடன் இருந்தாலும் அதற்கு சார்பாக இருக்க வேண்டும் என்பதாகும். பலசாலி அல்லது பலவீனன் யாராக இருந்தாலும் சரியே. பலசாலி, பலவீனன் மீது செல்வாக்குச் செலுத்துவதைத் தடுக்க வேண்டும் என்பதாகும். சிலவேளைகளில் பலவீனன் வியாபாரியாக இருக்க முடியும். சிலவேளை, நுகர்வோனாக இருக்க முடியும். சிலவேளை, தொழிலாளியாக இருக்கலாம். சிலவேளை, தொழிலதிபராகக் கூட இருக்க முடியும். யார் பலவீனத்துக்கு உட்பட்டாலும் அவரின் பக்கம் நின்று நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்பதே தலையீடு மேற் கொள்ளப்பட காரணமாக அமைகின்றது.

பொருளாதாரத் துறையில் அரசாங்கம் கட்டாயம் தலையிட்டு, சமூகத்துக்கு நன்மை பயக்கும் வகையில் அதனை நெறிப்படுத்த வேண்டும் என்ற கருத்தை பொருளியல் அறிஞர்கள் முன்வைக்கின்றனர். அவர்கள் இக்கருத்தை முன்வைப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இமாம் இப்னு தைமிய்யா தமது 'அல் ஹிஸ்பா' எனும் நூலில் இக்கருத்தை விளக்கியுள்ளார். அவரது மாணவரான இமாம் இப்னுல் கையிம் தனது 'அத்துருகுல் ஹிகமிய்யா' எனும் நூலில் தனது ஆசானின் கருத்தைக் குறிப்பிட்டுள்ளதோடு மாத்திரமன்றி அதனைப் பலப்படுத்தியிருக்கிறார், அதனை ஆதரித்திருக்கிறார்.

எப்போதும் சட்ட வசனங்கள் வழிகாட்டும் ஒளியாகவே தொழிற்படுகின்றன. அநியாயத்தையும் சீர்கேட்டையும் தவிர, வேறு எவற்றிற்கும் அவை தடையாக அமைவதில்லை என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஸுன்னாவிலிருந்து நாம் ஏற்கனவே நோக்கிய இவ்வுதாரணம் ஒன்றே போதியதாகும்.

நான்காம் காரணி

# நிர்ப்பந்தங்களையும் சங்கடங்களையும் விதிவிலக்கான சூழ்நிலைமைகளையும் கருத்தில் கொள்ளல்:

இஸ்லாமிய ஷரீஆவின் விரிந்து கொடுக்கும் தன்மைக்கும் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மைக்கும் அடிப்படையாக அமைகின்ற நான்காம் காரணி, அது நிர்ப்பந்தங்களையும் தேவைகளையும் கருத்திற் கொள்வதாகும். மனிதர்களுக்கு ஏற்படும் சங்கடங்களைக் கருத்திற் கொண்டு அவற்றுக்கு உரிய பெறுமானத்தை வழங்குவதாகும். அச்சங்கடங்களுக்கு பொருந்தக்கூடிய வகையில் விதிவிலக்கான சட்டங்களை ஏற்படுத்தி வைத்திருத்தலாகும். மக்களுக்கு இலகுபடுத்திக் கொடுத்தலையே ஷரீஆ தனது பொதுவான நோக்காகக் கொண்டுள்ளது. அந்தவகையில், கடந்தகால ஷரீஆக்கள் சிலவற்றில் காணப்பட்ட சுமைகளையும் விலங்குகளையும் அது நீக்கியது. அல்லாஹ் அத்தியாயம் பகராவை முடித்து வைக்கையில் பிரார்த்தனை வடிவில் ஷரீஆவின் இப்போக்கைப் பற்றி சொல்லி இருக்கிறான். ''எங்கள் இரட்சகனே! மேலும், எங்களுக்கு முன் சென்றோர் மீது நீ பாரத்தை சுமத்தியது போல எங்கள் மீதும் பாரத்தை சுமத்தி விடாதே!'' (2:28) இப்பிரார்த்தனைக்கு அல்லாஹ் பதிலளித்துவிட்டதாக ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் கூறுகின்றன.[21]

---

21- அபூஹுரைரா (றழி) அவர்கள் இப்பிரார்த்தனையின்போது அல்லாஹ் 'ஆம்' என கூறியதாக அறிவிப்புச் செய்துள்ளார்கள். (முஸ்லிம்). இப்னு அப்பாஸ் (றழி) அவர்களது அறிவிப்பில், ''நான் அவ்வாறே செய்து விட்டேன்'' என அல்லாஹ் கூறியதாக இடம் பெற்றுள்ளது. - இப்னு கஸீர், பாகம்: 1, பக்கம் : 338

அவ்வாறே, அல்லாஹ் முன்னைய வேதங்களில் (தவ்றாத், இன்ஜீல்) தனத இறுதித் தூதரைப் பற்றி பிரஸ்தாபிக்கையில், ''இவர் நன்மை செய்யுமாறு அவர்களை ஏவுகின்றார்; தீமைகளிலிருந்து அவர்களைத் தடுக்கின்றார்; மேலும், அவர்களுக்குத் தூய்மையான வற்றை அனுமதிக்கின்றார்; தூய்மையில்லாதவற்றைத் தடுக்கின் றார்; மேலும், அவர்கள் மீதுள்ள சுமையை இறக்குகின்றார்; அவர்களைப் பிணைத்திருக்கும் விலங்குகளையும் உடைத்தெறி கின்றார்'' *(7:157)* எனக் குறிப்பிட்டுள்ளான். நோன்பைப் பற்றி பேசும் வசனத்தின் இறுதியில், ''அல்லாஹ் உங்களுக்கு இலகுவை விரும்புகிறான். அவன் உங்களுக்கு கஷ்டத்தைத் தர விரும்ப வில்லை'' *(2:185)* எனக் குறிப்பிட்டுள்ளான். அவ்வாறே, திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதவர்கள் சம்பந்தமான வசனங்களைத் தொடர்ந்து, ''அல்லாஹ் உங்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்த விரும்புகின்றான். ஏனென்றால், மனிதன் பலவீனமாகப் படைக்கப் பட்டிருக்கிறான்'' *(4:28)* என குறிப்பிட்டுள்ளான். சுத்தம் சம்பந்தமாக (வுழூ, தயம்மும்) பேசும் வசனத்தின் இறுதியிலும் ''அல்லாஹ் உங்கள் மீது எந்தச் சிரமத்தையும் உண்டுபண்ண விரும்பவில்லை'' *(5:6)* எனக் குறிப்பிட்டுள்ளான். இஸ்லாமிய ஷரீஆ இலகுபடுத்தலை நோக்காகக் கொண்டுள்ளது என்பதற்கு இவை அனைத்தும் ஆதாரங்களாக அமைகின்றன.

## கஷ்டம் இலகுபடுத்தலை வேண்டி நிற்கும்

சட்ட விதிகள் பற்றி விளக்கும் அனைத்து நூல்களிலும், அவை யனைத்தும் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளும் மிக முக்கியமான, பெறுமதியான பின்வரும் சட்ட விதி இடம்பெறுகின்றது. கஷ்டம் இலகுபடுத்தலுக்கு வழிவகுக்கின்றது, காரணமாக அமைகின்றது என்பதே அவ்விதியாகும். இவ்விதியை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமியக் கடமைகளில் நோயாளிகளுக்கும், பயணிகளுக்கும், வித்தியாசமான சங்கடங்களுக்கு உள்ளாகியிருப்பவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. தளர்வுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ஹதீஸ், ''நிச்சயமாக அல்லாஹ் தனக்கு

மாறுசெய்யப்படுவதை வெறுப்பதைப் போல தான் வழங்கிய சலுகைகள் ஏற்று பின்பற்றப்படுவதை விரும்புகிறான்'' (அஹ்மத்) என குறிப்பிடுகின்றது.

சுத்தம், தொழுகை, நோன்பு, ஹஜ் ஆகிய அம்சங்களுடனும், ஏனைய விடயங்களுடனும் தொடர்புபட்ட பல்வேறு சலுகைகள். இலகுபடுத்தல்கள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் இங்கு விளக்கிக்கொண்டிருக்க முடியாது. எவ்வாறிருப்பினும், இச்சலுகைகள் உள்ளன என்ற விடயத்தில் கருத்துவேறுபாடு இல்லை.

## நிர்ப்பந்தம் தடுக்கப்பட்டதை ஆகுமாக்கும்

மக்களுக்கு ஏற்படுகின்ற நிர்ப்பந்தங்கள் அவர்களுக்கு பெரும் சுமையாக அமைந்து அவர்களை அழுத்துகின்றன. இந்நிலையில், ஷரீஆ தடுக்கப்பட்டவை விடயத்தில், அனுமதிக்கப்படாதவை விடயத்தில் சில விதிவிலக்குகளை அளிக்கும். இதனையே பிரபல்யமான பின்வரும் சட்டவிதி உறுதிப்படுத்துகின்றது. ''நிர்ப்பந்தங்கள் தடுக்கப்பட்டவற்றை ஆகுமாக்கும்'' என்பதே அச்சட்ட விதியாகும். இதிலிருந்து பெறப்பட்ட சில துணைவிதிகளும் உள்ளன. உதாரணமாக, நிர்ப்பந்தத்துக்கு அனுமதிக்கப்பட்டவை அதனது தரத்தைப் பொறுத்து வரையறுக்கப்படும், அத்தியாவசியமான தேவை நிர்ப்பந்தத்தின் தரத்தைப் பெறும். அத்தேவை பிரத்தியேகமானதாக இருந்தாலும் சரியே, பொதுவானதாக இருந்தாலும் சரியே! போன்ற விதிகளைக் குறிப்பிடலாம்.

இத்தகைய விதிகள் பெறப்படுவதற்கு, தடை செய்யப்பட்டுள்ள உணவுகள் சம்பந்தமாக வந்துள்ள அல்குர்ஆன் வசனங்களே அடிப்படையாக அமைகின்றன. அவ்வசனங்கள் நான்கு இடங்களில் வந்துள்ளன. அன்ஆம், நஹ்ல் ஆகிய மக்கி அத்தியாயங்களிலும், பகரா, மாஇதா ஆகிய மதீனா அத்தியாயங்களிலும் அவை இடம்பெற்றுள்ளன. இந்நான்கு இடங்களிலுமே நிர்ப்பந்தத்தின் போதும், கடும் பசியின்போதும் தடுக்கப்பட்டவற்றை சாப்பிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இங்கு நாங்கள் மதனீ அத்தியாயங்களில் இடம்பெற்றுள்ள இரு வசனங்களை மாத்திரம் உதாரணமாகத் தருகிறோம். இறுதியாக இறங்கியவை என்ற ரீதியிலேயே அவற்றோடு மாத்திரம் நாம் சுருக்கிக் கொண்டோம். முதலில், அத்தியாயம் பகராவில் வரும் வசனத்தை நோக்குவோம். ''இறை நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு மட்டுமே பணிந்து வாழ்பவர்களாய் இருப்பின் நாம் உங்களுக்கு அளித்திருக்கும் தூய்மையானவற்றைத் தாராளமாகப் புசியுங்கள், மேலும், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். செத்த பிராணியும், இரத்தமும், பன்றி இறைச்சியும், அல்லாஹ்வைத் தவிர மற்றவரின் பெயர் கூறி அறுக்கப்பட்டவையுமே உங்களுக்குத் தடுக்கப்பட்டவையாகும். எனினும், எவரேனும் ஒருவர் கட்டாயத் திற்குள்ளாகினால், இறை சட்டத்தைத் தகர்க்கும் நோக்கமில்லா மலும், வரம்புமீறாமலும் அதனைப் புசிப்பதில் அவர் மீது குற்ற மில்லை. நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பு வழங்குபவனாகவும் கருணை புரிபவனாகவும் இருக்கின்றான்.'' *(2: 172-173)*

இவ்வசனங்கள் அல்லாஹ் அளித்திருக்கும் தூய்மையானவற்றி லிருந்து சாப்பிட அனுமதிக்கின்றன. அதற்காக அவனுக்கு நன்றி செலுத்துமாறு பணிக்கின்றன. தொடர்ந்து, தடுக்கப்பட்டவற்றை செத்த பிராணி, இரத்தம், பன்றி இறைச்சி, அல்லாஹ்வைத்தவிர மற்றவரின் பெயர் கூறி அறுக்கப்பட்டவை ஆகிய நான்கு அம்சங் களுக்குள்ளும் வரையறுத்துக் கூறுகின்றன. தொடர்ந்து நிர்ப்பந்த மான சூழ்நிலையில் அவை தடுக்கப்படவில்லை என்ற விதி விலக்கை அளிக்கின்றன. நிர்ப்பந்தத்துக்கு உள்ளான ஒருவருக்கு அடுத்தவர்களுக்கு தடுக்கப்பட்டவற்றை புசிக்க அனுமதிக்கின்றன. இறை சட்டங்களை மீறும் விருப்பம் இருக்கக்கூடாது; வரம்பு மீறக் கூடாது என்ற நிபந்தனைகளோடு அவ்வனுமதியை வழங்குகின்றன.

இரண்டாவதாக, அத்தியாயம் மாஇதாவில் இடம்பெறும் வசனத்தை நோக்குவோம். செத்த பிராணியும், இரத்தமும், பன்றி இறைச்சியும், இறைவனல்லாத மற்றவர் பெயர் கூறி அறுக்கப்பட்ட பிராணியும், கழுத்து நெரிக்கப்பட்டும், அடிபட்டும், உயரத்தி லிருந்து வீழ்ந்தும், மோதப்பட்டும் இறந்த பிராணிகளும் உங்களுக்கு

தடுக்கப்பட்டவையாகும். மேலும், கொடிய விலங்குகளால் கடித்து குதறப்பட்ட பிராணிகளும் தடுக்கப்பட்டவையாகும் - எவற்றை உயிருடன் நீங்கள் அறுத்துவிட்டீர்களோ அவற்றைத் தவிர! இன்னும் பலிபீடங்கள் மீது அறுக்கப்பட்ட பிராணியும் உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. குறி பார்ப்பதன் மூலம் விதிகளை நிர்ண யிப்பதும் உங்களுக்குத் தடுக்கப்பட்டுள்ளது. இவை யாவும் பாவமான செயல்களாகும். இன்று உங்களுடைய மார்க்கம் குறித்து நிராகரிப்போர் முற்றிலும் நிராசை அடைந்து விட்டிருக்கின்றனர். எனவே, நீங்கள் அவர்களுக்கு அஞ்ச வேண்டாம். எனக்கே அஞ்சுங்கள்! இன்று உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்காக நான் முழுமையாக்கி விட்டேன். எனது அருட்கொடையையும் உங்கள் மீது நான் நிறைவு செய்துவிட்டேன். இன்னும், உங்களுக்காக இஸ் லாத்தை உங்களுடைய மார்க்கமாக ஏற்றுக் கொண்டு விட்டேன். (எனவே, உங்கள் மீது விதிக்கப்பட்ட ஹலால், ஹராமெனும் வரம்புகளைப் பேணி நடந்து வாருங்கள்) ஆயினும், கடும் பசியினால் நிர்ப்பந்திக்கப்பட்டு பாவம் செய்யும் நாட்டமின்றி ஒருவர் அவற்றில் ஏதாவதொன்றைப் புசித்து விட்டால் - நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், பெருங்கருணை உடையவனாகவும் இருக்கின்றான்.'' *(5:3)*

அத்தியாயம் பகராவில் வந்துள்ள வசனத்தை மேலும் உறுதிப் படுத்துவதாக, பலப்படுத்துவதாக இவ்வசனம் அமைந்துள்ளது. அவ்வசனத்தில் செத்த பிராணிகள் பற்றி விளக்கப்படவில்லை. இவ்வசனத்தில் செத்த பிராணிகளின் வகைகள் (மூச்சுத் திணறி இறந்தவை, அடிபட்டு இறந்தவை) விளக்கப்பட்டுள்ளன. இவ் வசனத்தில் இடம்பெற்றுள்ள 'பாவம் செய்யும் நாட்டமின்றி' என்ற பகுதி அவ்வசனத்திலுள்ள ''இறை சட்டத்தைத் தகர்க்கும் நோக்க மில்லாமலும் வரம்பு மீறாமலும்'' என்ற பகுதியை ஒத்திருக்கின்றது. அதாவது, நிர்ப்பந்தத்தின் அழுத்தத்தின் காரணமாக, அதனது கட்டாயப்படுத்தலின் விளைவாக அவர் இங்கு இவற்றைப் புசிக்கிறார். பாவம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் அவரிடம் கிடையாது. ஆசையைத் தீர்த்துக் கொள்ளும் எண்ணமும் இல்லை.

யாரின் மீதும் வரம்பு மீற வேண்டும் என்ற நோக்கமும் இல்லை. அவ்வாறே, நிர்ப்பந்தம் வேண்டி நிற்கும் அளவுக்கு அதிகமாக அவர் புசிக்கவும் மாட்டார்.

வசனத்தின் இப்பகுதியை அடிப்படையாகக் கொண்ட சட்ட அறிஞர்கள் நிர்ப்பந்த சூழ்நிலைகளில் அத்தியாவசியமான அளவு மாத்திரமே புசிக்கலாம், அதைவிட அதிகமாக புசிக்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டை விதிக்கின்றனர்.

## நிர்ப்பந்த நிலை

சாதாரண சூழ்நிலைகளில் அனுமதிக்கப்படாதவை அனுமதிக்கப் படுகின்ற இக்கட்டான சூழ்நிலைகளுக்கு ஓர் உதாரணமாக நிர்ப்பந்தத்துக்கு, பலவந்தத்துக்கு உள்ளாக்கப்படும் நிலை அமைந் துள்ளது. ஒருவர் ஒரு குறிப்பிட்ட செயலைச்செய்வதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற நிர்ப்பந்த நிலைக்கு உள்ளாகும்போது, அவர் அச்செயலைச்செய்தால் அது அவருக்கு பாவமாக அமைய மாட்டாது. அக்குறிப்பிட்ட செயல் குப்ரை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பினும் சரியே!.

இஸ்லாமிய நோக்கில் மிகப்பெரும் பாவமாக கருதப்படுகின்ற குப்ர் கூட நிர்ப்பந்த சூழலில் நிகழ்ந்தால் அது பாவமாக மாட்டாது என அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளதை அவதானிக்கலாம். ''அல்லாஹ் வின் வசனங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தாம் பொய்யைப் புனைந்துரைப்பார்கள். உண்மை யாதெனில், அவர்களே பொய்யர் களாவர்! எவரேனும் இறை நம்பிக்கை கொண்ட பிறகு கட்டாயத்திற்குள்ளாகி - அவருடைய உள்ளம் இறைவனை ஏற்றுக் கொள்வதில் நிம்மதியுடன் இருக்கும் நிலையில் நிராகரித்தாரானால் அவர் மீது குற்றமில்லை! ஆனால் எவர் மன நிறைவுடன் நிராகரிப்பை ஏற்றுக்கொள்கின்றாரோ, அவர் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாகும்.'' *(16:105-106)*

''நிச்சயமாக அல்லாஹ் எனது சமூகம் தவறுதலாக செய்தவற்றை யும், மறதியாக செய்தவற்றையும், நிர்ப்பந்தத்தினால் செய்தவற்றை யும் அதனை விட்டு அகற்றி விடுகிறான்'' (இப்னு மாஜா)

இத்தகைய சட்ட வசனங்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட அறிஞர்கள் நிர்ப்பந்தம் என்றால் என்ன? அதற்குரிய வரையறைகள், நிபந்தனைகள் யாவை? அதனது விளைவுகள் என்ன? என்பன பற்றி விளக்குவதில் கவனம் செலுத்தினர். சட்ட நூல்களில் இதற்கென தனியான ஒரு பகுதி அல்லது பிரிவு ஒதுக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.[22]

---

22- இக்தியார் எனும் ஹனபீ மத்ஹப் நூலை பார்க்க: மனிதன் இயல்பாக அல்லது ஷரீஆவின் காரணமாக விரும்பாத ஒரு விடயத்துக்கு அவனை நிர்ப்பந்தித்தலே நிர்ப்பந்தம் / பலவந்தம் எனப்படுகிறது. இந்நிலையில் அவன் விருப்பமின்றியே அவ்விடயத்தை நிறைவேற்ற முன்வருவான். அதனை நிறைவேற்றாதபோது அதனை விடப் பாரிய தீங்கு ஏற்படும் என்பதனால் அதனைத் தவிர்க்கவே இவ்விடயத்தை அவன் நிறைவேற்றுகிறான். ஒரு கட்டாயமான சூழலை நிர்ப்பந்தமாகக் கருத பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

நிர்ப்பந்திப்பவர் எதனைக் கொண்ட அச்சுறுத்துகின்றாரோ அதனை நிறைவேற்றக்கூடிய ஆற்றலைப் பெற்றிருத்தல்.

நிர்ப்பந்தத்திற்குள்ளானவர் குறிப்பிட்ட விடயத்தை உடனேயே செய்ய வேண்டியிருத்தல். இல்லாதபோது அவருக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை காணப்படல்.

அவர் அக்குறிப்பிட்ட விடயத்தைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட முன்னர் அச்செயலில் இருந்து தூரமானவராக இருந்திருத்தல்.

உயிருக்கோ அல்லது உடலுக்கோ ஆபத்தை ஏற்படுத்துவதாக அச்சுறுத்தல் விடப்பட்டிருக்க வேண்டும். அல்லது சிறை செய்யப்படல், அடித்தல் போன்ற விரும்பத்தகாத அம்சங்களைக்கொண்டு பயமுறுத்தப்பட்டிருத்தல்

நிர்ப்பந்தத்திற்குரிய சட்டம் இவற்றைப் பொருத்து வித்தியாசப்படும். நிர்ப்பந்திக்கப்பட்ட விடயத்தை நிறைவேற்றுவது சிலவேளை கடமையாகலாம். சிலவேளை அதனை ஆகுமானது என்றே கூற முடியுமாக இருக்கலாம். சிலவேளை அது ஒரு சலுகையாக கருதலாம். சிலவேளை அதனை நிறைவேற்றுவது தடை செய்யப்பட்டதாக இருக்கவும் முடியும்.

## பலவீனமும் இயலாமையும்

பொதுவான விதிகளிலிருந்து விலக்களிக்கப்படும் நிர்ப்பந்த நிலைகளுக்கு இன்னோர் உதாரணமாக, முஸ்லிம் தனி மனிதனைப் பீடிக்கின்ற அல்லது சமூகத்தைப் பீடிக்கின்ற பலவீனத்தையும் இயலாமையையும் குறிப்பிடலாம். இந்நிலையில், முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களை தமது நண்பர்களாகக் கொள்ள வேண்டி யிருக்கும். அவர்கள் மீது நேசத்தைக் காட்ட வேண்டியிருக்கும். அவர்களுக்கு ஒத்துழைப்பையும் விசுவாசத்தையும் காண்பிக்க வேண்டியிருக்கும். இவற்றையெல்லாம் செய்வதற்குக் காரணம் அவர்களது மார்க்கத்தின் பால் ஏற்பட்டுள்ள கவர்ச்சி அல்ல. தமது மர்க்கத்துக்கும் சமூகத்துக்கும் துரோகம் இழைக்க வேண்டும் என்ற நோக்கமும் அல்ல, அவர்களது ஆக்கிரமிப்பு சம்பந்தமான அச்சத்தின் காரணமாகவும், அவர்களது தீங்குகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவுமே இவ்வாறு நடக்க வேண்டி யிருக்கும். இதுபற்றி அல்குர்ஆன் பின்வருமாறு இயம்புகிறது: ''இறை நம்பிக்கையாளர்கள் தம்மைப் போன்ற இறை நம்பிக்கை யாளர்களை விடுத்து நிராகரிப்போரை நேசர்களாய் ஆக்கிக் கொள்ள வேண்டாம். அவர்களுடைய கொடுமைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்றி உங்களில் யாரும் அவ்வாறு நட்பு கொண்டால், அவர்களுக்கு அல்லாஹ்வுடன் எத்தகைய தொடர்பும் இல்லை'' *(3:28)*

நிராகரிப்பாளர்களை நேசத்துக்கு உரியவர்களாய் ஆக்கிக் கொள்வதையிட்டு பல வசனங்கள் கடுமையாக எச்சரித்துள்ளன.

''உங்களில் யாரும் அவ்வாறு நட்பு கொண்டால், அவர்களுக்கு அல்லாஹ்வுடன் எத்தகைய தொடர்பும் கிடையாது.'' *(3:28)*

''உங்களில் எவரேனும் அவர்களைத் தம் உற்ற நண்பர்களாய் ஆக்கிக் கொண்டால், அவரும் அவர்களைச் சார்ந்தவராகவே கணிக்கப்படுவார்.'' *(5:51)*

அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கும் மக்கள், அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும்

எதிர்ப்பவர்கள் மீது அன்பு செலுத்துவதை நீர் காண மாட்டீர். அத்தகையோர் அவர்களுடைய தந்தையராயினும் அல்லது அவர்களுடைய தனயர்களாயினும் அல்லது அவர்களுடைய சகோதரர்களாயினும் அல்லது அவர்களுடைய குடும்பத்தினராயினும் சரியே!'' (58:22)

இவைபோன்ற இன்னும் பல வசனங்கள் அவ்வெச்சரிக்கையை விடுத்துள்ளன. இருப்பினும், பலவீனமான நிலையில் ஒரு முஸ்லிம் நட்பை வெளிப்படுத்தி தனது எதிரிகளின் தீங்குகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வனுமதி விதிவிலக்கான சட்டமாக, பலவீனத்தைக் கருத்திற் கொண்ட ஆக்கப்பட்ட சட்டமாக காணப்படுகிறது.

## சமூகத்திற்கான நிர்ப்பந்தங்களும் சமூக அமைப்பின் பாதுகாப்பும்

தனிநபர்கள் எதிர்நோக்கும் நிர்ப்பந்த நிலைமைகளை இஸ்லாமிய ஷரீஆ கருத்திற் கொண்டுள்ளது. அவ்வாறான நிலைமைகளின் தரத்துக்கேற்ப தடுக்கப்பட்ட பல விடயங்களைக் கூட அவ்வேளைகளில் செய்ய அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. அவ்வாறே ஷரீஆ, சமூகம் எதிர்நோக்குகின்ற நிர்ப்பந்த நிலைமைகளையும் கவனத்தில் கொண்டுள்ளது. அவ்வாறான சூழ்நிலைமைகளில் சமூகத்தின் பாதுகாப்பையும், சமூக அமைப்பினதும் அதனது அதிகாரத்தினதும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உதாரணமாக, சமூகம் யுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகலாம். அத்தகைய ஒரு சூழ்நிலையில் சாதாரண நிலைமைகளில் அனுமதிக்கப்படாத பல விடயங்களுக்கு அனுமதி வழங்கப்படும். பனூ நளீர் என்ற யூதப் பிரிவினரை முற்றுகையிட்டபோது நபி (ஸல்) அவர்களும் ஸஹாபாக்களும் நடந்து கொண்ட முறை இதனைக் காட்டுகிறது. முடியுமான அளவு மிகக்குறைந்த நஷ்டங்களோடு சரணடைவதற்கு யூதர்களை கட்டாயத்திற்கு உள்ளாக்குவதற்காக பேரீத்த மரங்கள் வெட்டப்பட்டன. அவற்றுக்குத் தீ கூட

மூட்டப்பட்டது. இந்நிலைமையைப் பயன்படுத்தி, யூதர்கள் நபியவர்களைப் பற்றி கதை பரப்ப முற்பட்டனர். நபி முஹம்மத் குழப்பம் விளைவித்தலை எப்போதும் தடுப்பதாக, அவ்வாறு குழப்பம் விளைவிப்பவர்களைக் கண்டிப்பதாக கூறிக் கொண்டிருப்பவர். ஆனால், அவரே இப்போது குழப்பம் விளைவித்து திரிகிறார் எனக் கூறலாயினர். இத்தகைய ஒரு சூழலில் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களையும், முஸ்லிம்களையும் விளித்து பின்வரும் வசனத்தை இறக்கி வைத்தான்.

''நீங்கள் சில பேரீச்ச மரங்களை வெட்டியதும், அல்லது அவற்றின் வேர்களில் அவற்றை நிற்கும்படி விட்டுவிட்டதும் எல்லாமே அல்லாஹ்வின் அனுமதியுடன் தான் நடந்தன. அல்லாஹ் தீயவர்களை இழிவில் ஆழ்த்திவிடவே இந்த அனுமதியை அளித்தான்.'' *(59:5)*

சமூகம் எதிர்நோக்கும் நிர்ப்பந்தங்கள் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன என்பதற்கு சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்ற பின்வரும் கருத்தையும் உதாரணமாகக் கூறலாம். எதிரிகள் முஸ்லிம்களில் சிலரைக் கேடயங்களாக வைத்து போராடுகின்றனர். இம்முஸ்லிம்கள் அவர்களிடத்தில் கைதிகளாக இருப்பவர்கள். அல்லது அது போன்ற ஏதேனும் ஒரு வழிமுறையினால் அவர்களது பிடியில் சிக்கி இருப்பவர்கள். எதிரிகள் இம்முஸ்லிம்களைக் கேடயங்களாக பயன்படுத்தி தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். இந்நிலையில், இவ்வெதிரிகளோடு போராடாமல் இருப்பது முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். எனவே, போராளிகளான அவர்களை நோக்கி தாக்குதல் விடுக்க முஸ்லிம்களுக்கு அனுமதி உண்டு. இவ்வாறு முஸ்லிம்கள் தாக்குதல் நடாத்தினால் எதிரிகள் தம்மோடுள்ள முஸ்லிம்களைக்கொலை செய்வார்கள் என்ற நிலைமை இருப்பினும் கூட தாக்குதலை நடாத்த வேண்டும். உண்மையில் கொல்லப்படும் அம்முஸ்லிம்கள் எதுவித குற்றமுமற்றவர்கள், பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் எனினும் முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய கட்டாய நிலை அத்தனிநபர்களை பலிகொடுக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறது. இஸ்லாம்

ஒழிக்கப்படும், குப்ர் மேலோங்கும் என்ற அச்சமே இந்நிலை மையை ஏற்படுத்துகின்றது. அத்தனிநபர்கள் தமக்குரிய கூலியை அல்லாஹ்விடத்தில் பெற்றுக்கொள்வர்.[24]

மேற்குறிப்பிடப்பட்ட கருத்தை ஆட்சேபிப்போரும் உள்ளனர். அவர்களது கருத்துப்படி முஸ்லிமின் உயிரைப் பாதுகாப்பது கடமை. அவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் உயிரை, கொல்வதற்கு தடைசெய்யப்பட்ட ஓர் உயிரை கொலை செய்வதாக இந்நட வடிக்கை அமைந்துள்ளது. இக்கருத்தை இமாம் கஸ்ஸாலி ஆட் சேபிக்கின்றார். அம்முஸ்லிம் தனிநபர்கள் கொல்லப்படக்கூடாது என்பதற்காக போராடாதிருந்தால், எதிரிகளால் எண்ணிலடங்காத முஸ்லிம்களின் இரத்தம் சிந்தப்படும். ஷரீஆ கிளையம்சத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட அடிப்படை அம்சத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நாம் அறிவோம். காபிர்களுடனான மோதலின் காரணமாக முஸ்லிம்களை அழிந்துவிடாது பாதுகாப்பது ஷரீஆவின் பார்வையில் ஒரு முஸ்லிமின் உயிரைப் பாதுகாப்பதை விட முக்கியமானது. இது ஷரீஆவின் நோக்கங்களில் மிகவும் திட்டவட்டமான ஒன்றாகும்.[25]

அவ்வாறே, போராட்ட சூழலில், போராட்டத்திற்கு நிதி தேவைப்பட்டால், படைகளை தயார்படுத்தவும் அரண்களை அமைக்கவும், ஏனைய போராட்டத் தேவைகளை நிறைவு செய்யவும் செலவு செய்ய வேண்டியிருந்தால் வசதியும் ஆற்றலும் உள்ளவர்கள் மீது வரி விதிக்க அனுமதி உண்டு. ஷரீஆ இக்கருத்தை உறுதிப்படுத்துவதாக, இத்தகைய ஒரு சூழலில் வரி விதிப்பதை கடமையாக ஆக்குவதாக சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். சாதாரணமான சூழ்நிலைகளில் ஸகாத் தவிர வேறு கடமைகள் சொத்தின் மீது விதிக்கப்படக்கூடாது என்ற கருத்தையே அதிகமான

24- (இமாம் கஸ்ஸாலி, முஸ்தஸ்பா, பாகம்: 1, பக்கம் : 294-295)

25- (முஸ்தஸ்பா, பாகம்: 1, பக்கம்: 303)

சட்ட அறிஞர்கள் கொண்டுள்ளனர். யுத்த சூழலில் வரி விதிக்கப்படுவதற்கு பின்வரும் ஆதாரத்தை இமாம் கஸ்ஸாலி முன்வைக்கின்றார். இரண்டு தீமைகள் அல்லது தீங்குகள் வரும்போது அவற்றுள் பாரிய தீமையை அல்லது கொடிய தீங்கைத் தவிர்ப்பதை ஷரீஆ நோக்கமாகக் கொள்ளும் என்பதை நாம் அறிவோம். வரி செலுத்துவதனால் ஒருவருக்கும், செல்வத்துக்கும் வரும் தீங்கு நாட்டில் ஒழுங்கைப் பேண, தீமைகளைக் களைய ஒரு சக்தி இல்லாத போது உயிருக்கும், செல்வத்துக்கும் வரும் தீங்கை விட குறைவானதே என அவர் கூறுகிறார். (முஸ்தஸ்பா, பாகம்: 1, பக்கம்: 303-304)

அவ்வாறே, முஸ்லிம் கைதிகளை விடுவிப்பதற்காகவும் வரி விதிக்கலாம். நிராகரிப்பாளர்களிடம் கைதிகளாக இருக்கும் இழி நிலையிலிருந்து அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும். இதற்கு எவ்வளவு பெரும்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டியிருந்தாலும் சரியே. ''அனைத்து முஸ்லிம்களின் மீதும் தமது கைதிகளை விடுவிக்க நஷ்ட ஈடு கொடுப்பது கடமையாகும். அதற்காக அவர்கள் தமது முழுமையான சொத்துக்களையும் கொடுக்க வேண்டி வந்தாலும் கொடுக்க வேண்டும்'' (இப்னுல் அரப், அஹ்காமுல் குர்ஆன், பக்கம்: 59-60) என இமாம் மாலிக் குறிப்பிடுகிறார்.

கைதிகளின் கண்ணியம் முழு முஸ்லிம் சமூகத்தினதும் கண்ணியத்தோடு சம்பந்தப்பட்டதாகும். தனிநபர்களின் சொத்துரிமையை விட முழு சமூகத்தினதும் கண்ணியத்துக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பதனாலேயே இக்கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

### ஐந்தாம் காரணி

# காலம், இடம், சூழ்நிலை, வழக்காறுகள் மாறுபடுவதற்கேற்ப தீர்ப்புக்கள் மாறுபடல்

இஸ்லாமிய ஷரீஆவின் விரிந்த தன்மைக்கும், நெகிழ்ந்து கொடுக்கும் தன்மைக்கும் அடிப்படையாக அமைந்துள்ள ஐந்தாவது காரணியே இது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட காரணிகளைப் பூரணப் படுத்துவதாகவும், அவற்றை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இக்காரணி அமைந்துள்ளது. அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் பூரணமாக நோக்கும்போது இஸ்லாமிய சட்டங் கள் மனிதர்களின் நலன்களை நிறைவேற்றிக் கொடுப்பதனையும், அவர்களிடையே நீதியை நிலைநாட்டுவதையும், அவர்களை விட்டு அநீதிகளையும், சீர்கேடுகளையும் களைந்து விடுவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளன என்பது தெளிவாகிறது.

எனவே, சட்ட வசனங்களை விளங்கும் போதும், சட்டங்களை அமுல்படுத்தும் போதும் இந்நோக்கத்தைக் கருத்திற் கொள்வது அத்தியாவசியமானதாகும். ஒரு சட்ட அறிஞன் தீர்ப்பு வழங்குதல் அல்லது கற்பித்தல் அல்லது நூலாக்கத்தில் ஈடுபடல் அல்லது சட்டமாக்கல் போன்ற எந்த நடவடிக்கையில் ஈடுபட்டாலும் ஒரே நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கக் கூடாது. காலம், இடம், வழக்காறு, சூழ்நிலை என்பன மாறுபடுவதற்கேற்ப அவனது நிலைப் பாடும் மாற்றமுற வேண்டும். அத்தோடு கிளையம்சங்களுக்கு தீர்ப் புக்களை முன்வைக்கும்போது ஷரீஆவின் அடிப்படையான நோக் கங்களையும், பொதுவான இலக்குகளையும் கருத்திற் கொள்வதும் அத்தியாவசியமானதாகும்.

## தீர்ப்பு மாறுபடல் சம்பந்தமாக இமாம் இப்னு கையிம்

இமாம் இப்னுல் கையிமைப் போன்ற திறனாய்வாளர்கள் தீர்ப்பு காலம் மாறுபடுவதற்கேற்ப, இடம் மாறுபடுவதற்கேற்ப, வழக்காறு மாறுபடுவதற்கேற்ப, நோக்கம் மாறுபடுவதற்கேற்ப மாறுபடும், வித்தியாசப்படும் என்கின்றனர். இமாம் இப்னுல் கையிம் தனது 'அஃலாமும் முவக்கிஈன்' எனும் நூலில் இதனை விளக்குவதற்காக ஓர் அழகிய அத்தியாயத்தையே ஒதுக்கியிருக்கிறார். அவ்வத்தி யாயத்தின் ஆரம்பத்தில் பின்வரும் கருத்தை முன்வைக்கிறார். இக்கருத்து இன்றுவரை அனைவருக்கும் வழிகாட்டும் ஓர் களங்கரை விளக்காக அமைந்துள்ளது.

இவ்வத்தியாயம் மிகவும் பாரிய பயன்களைத் தரக்கூடியது. இதனைப் பற்றிய அறியாமையின் காரணமாக ஷரீஆவுக்கு பெரும் பிழை செய்யப்படுகிறது. இப்பிழையினால் பல சங்கடங்கள், கஷ்டங்கள் தோன்றுவது கட்டாயமாகி விட்டது. அத்தோடு ஷரீஅத் சுமத்தாத சுமைகளை மனிதர்கள் மீத சுமத்துவதாகவும் இப்பிழை அமைந்துள்ளது. நலன்களை அவற்றின் மிக உயர்ந்த படித்தரங்களில் பேணும் அழகிய ஷரீஆ இத்தகைய கஷ்டங்களையும் சங்கடங்களை யும் சுமைகளையும் கொண்டதாக இருக்க மாட்டாது என்பது தெளிவு. ஏனெனில், ஷரீஆவுக்கு அடிப்படையாக, அச்சாணியாக அமைவது ஆழிய நோக்கங்களாகும். மனிதர்களின் நலன்களாகும் - அவை இவ்வுலகத்துடன் தொடர்பான நலன்களாக இருக்கலாம். மறுமையுடன் தொடர்புறும் நலன்களாக இருக்கலாம் - ஷரீஆ முழுமையாகவே நீதியானதாகும். முழு ஷரீஆவுமே அருளாகும். முழு ஷரீஆவுமே நலன்களாகும். முழு ஷரீஆவுமே ஆழிய நோக்கங் களைப் பொதிந்ததாகும்.

இவ்வகையில் நோக்குகையில், நீதியற்ற, அநீதியைக் கொண்டி ருக்கும்; அருளாக அமையாமல் மருளாக அமையும்; நலனுக்கு வழிவகுக்காமல் சீர்கேட்டுக்கு வழிவகுக்கும்; உயரிய நோக்கத்தைக் கொண்டதாக இராமல் அர்த்தமற்றதாக இருக்கும் எவ்விடயமாக

இருந்தாலும் அது ஷரீஅத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்க முடியாது. அவ்விடயம் எத்தகைய நியாயங்களைக் கூறி ஷரீஆவில் நுழைக்கப்பட்டிருந்தாலும் சரியே!. (இஃலாமும் முவக்கிஈன், பாகம்: 3, பக்கம்: 14-15).

ஷரீஆ மனித சமூகத்தில் அல்லாஹ்வின் நீதியை நிலைநாட்டு கிறது, சிருஷ்டிகளுக்கிடையே உள்ள அருள் அது. பூமியில் அல்லாஹ் வழங்கியுள்ள நிழல் அது. அல்லாஹ்வின் ஆழ்ந்த அறிவை அது மிகச் சிறப்பாக காட்டி நிற்கிறது. முஹம்மத் (ஸல்) அவர்கள் உண்மையானவர் என்பதை மிகச் சிறப்பாக காட்டி நிற்கின்றது. சத்தியத்தைப் பார்ப்போர் அதனது ஒளியின் உதவி யோடு தான் பார்க்கின்றனர். நேர்வழி பெறுவோர் அதனது வழிகாட்டலின் கீழ் தான் நேர்வழி பெறுகின்றனர். அனைத்து நோயாளர்களுக்கும் நிவாரணமளிக்கும் மருந்து அதனிடத்திலேயே காணப்படுகிறது. அதனது பாதை நேரான பாதையாகும். யார் அப்பாதையில் நிலைகுலையாது உறுதியாக நிலைத்து நிற்பவர் நேரான வழியில் நிலைத்து நின்றவராகிறார்.

## நிலையான சட்டங்களும் மாறும் சட்டங்களும்

காலம், இடம், சூழல், வழக்காறு என்பன மாறுபடுவதற்கேற்ப சட்டத்தீர்ப்புக்கள் மாறுபடும் என்பதன் கருத்து ஷரீஆவின் அனைத்துப் பகுதிகளுமே தொடர்ந்து மாறிக்கொண்டு செல்லும் என்பதல்ல. ஷரீஆ சட்டங்களில் என்றுமே மாற்றமுறாத, நிலையான சட்டங்களும் உள்ளன. காலமும், சூழலும், நிலைமைகளும் எத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டாலும் இத்தகைய சட்டங்கள் மாற்றமுறுவதில்லை, வித்தியாசப்பட்டு அமைவதில்லை.

மாறாத அச்சட்டங்களைப் பற்றி இமாம் இப்னுல் கையிம் தனது 'இகாஸதுல் லஹ்பான்' எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

## சட்டங்கள் இருவகைப்படும்

i) காலத்துக்கேற்ப, இடத்துக்கேற்ப, இமாம்களின் இஜ்திஹாதுக் கேற்ப மாற்றமுறாது ஒரே நிலைமையிலேயே தொடர்ந்தும் இருக் கும் சட்டங்கள்:- அடிப்படையான கடமைகள், அடிப்படையான ஹராம்கள், ஷரீஆ வரையறுத்துக் கூறியுள்ள தண்டனைகள் என்பவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்வகைச் சட்டங்கள் எதுவித மாற்றத்துக்கும் உட்படுவதில்லை. திட்டவட்டமான இப்பகுதியில் இஜ்திஹாதைப் பாவிக்கவும் முடியாது.

ii) காலம், இடம், சூழ்நிலை என்பவை மாறுபடுவதற்கேற்ப, மனித நலனைக் கருத்திற்கொண்டு மாறுபடும் சட்டங்கள்: இவற்றுக்கு உதாரணமாக தஃஸீர் தண்டனைகளையும், அவற்றின் வகைகளையும் அவற்றின் பண்புகளையும் குறிப்பிடலாம். இப்பகுதியில் மனித நலனைக் கருத்திற் கொண்டு வித்தியாசமான சட்டங்களை ஷரீஆ இயற்றும். இதற்கு பல்வேறு ஆதாரங்களையும், உதாரணங்களையும் குறிப்பிடுகின்ற இமாம் இப்னுல் கையிம் தொடர்ந்து பின்வருமாறு கூறுகிறார். இது மிகவுமே விரிந்த ஒரு பகுதியாகும். அநேகமான மக்கள் இது விடயத்தில் தெளிவற்றவர் களாக உள்ளனர். என்றுமே மாறாத நிலையான சட்டங்களோடு நலன்களுக்கேற்ப இருக்கவும் இல்லாதிருக்கவும் முடியுமான சட்டங்களை இணைத்து அவர்கள் குழப்பிக் கொள்கின்றனர்.

இமாம் இப்னுல் கையிம் அவர்கள் மிக உறுதியாகவும் தெளி வாகவும் கூறியுள்ள இக்கருத்தை வேறு மத்ஹபுகளைச் சேர்ந்த அறிஞர்களும் வேறு விதங்களில் வலியுறுத்தி உள்ளனர். உதாரணமாக, மாலிகீ மத்ஹபைச் சார்ந்த இமாம் கராபீ தமது 'அல் இஹ்காம்' எனும் நூலிலும், ஹனபீ மத்ஹபைச் சார்ந்த இமாம் இப்னு ஆபிதீன் தனது 'நஷ்ருல் உர்பீ பீ பினாஇ பஃலில் அஹ்காம் அலல் உர்பீ' எனும் நூலிலும் இக்கருத்தை விளக்கியுள்ளனர். எமது -ஷரீஅதுல் இஸ்லாம்- எனும் நூலில் இதுபற்றி விளக்கியுள்ளோம்.

## தீர்ப்பு மாறுபடலாம் என்பதற்கு அல்குர்ஆனில் ஆதாரம் உண்டா?

காலம், இடம், நிலைமைகள், நோக்கங்கள், வழக்காறுகள் என்பன மாறுபடுவதற்கேற்ப தீர்ப்பும் மாறுபடும் என வலியுறுத்தும் இவ்வுயரிய சட்டவிதிக்கு அல்குர்ஆனிலிருந்தும், ஸுன்னாவி லிருந்தும் ஆதாரம் காட்டலாமா? இவ்விதி அடிப்படையில் அவை யிரண்டிலிருந்தும் பெறப்பட்டதா?

இமாம் இப்னு கையிம் ஸுன்னாவிலிருந்து இச்சட்ட விதிக்கு பல உதாரணங்களைக் காட்டியுள்ளார். ஸஹாபாக்களின் கருத்துக் களிலிருந்தும், செயல்களிலிருந்தும் உதாரணம் தந்துள்ளார். இதனை நாங்கள் பின்னர் விளக்குவோம்.

இச்சட்ட விதிக்கு அல்குர்ஆனிலிருந்து எந்த ஆதாரத்தையும் முன்வைக்க இமாம் இப்னு கையிம் அவர்கள் முனையவில்லை. ஏனைய அறிஞர்களும் அல்குர்ஆனிலிருந்து இச்சட்ட விதிக்கு ஆதாரம் காட்ட முற்பட்டிருப்பதனை நாம் காண முடியவில்லை.

அல்குர்ஆனை நுணுக்கமாக ஆராய்ந்தால், இம்முக்கியமான சட்ட விதிக்கு அடிப்படையாக அல்குர்ஆன் அமைந்திருப்பது புரியும் என்றே எனக்குத் தோன்றுகிறது. அநேகமான தப்ஸீர் ஆசிரியர்கள் நாஸிக் - மன்சூக் என்ற பிரிவில் அடக்குகின்ற பல வசனங்கள் இதற்கு உதாரணமாக கூறத்தக்கவை.

உண்மையில் அவ்வசனங்கள் நாஸிக் - மன்ஸூக் எனும் பிரிவில் அடங்குவதில்லை. அவற்றை தொடர்ந்தும் தொழிற்படுத்துவதற் கான துறைகள் இருக்கவே செய்கின்றன. அவ்வசனங்களுள் சில கடமையைப் பற்றிப் பேசுகின்றன. ஏனையவை சலுகைகளைப் பற்றிப் பேசுகின்றன. அல்லது அவற்றுள் சில கடமைகளைப் பற்றியும், ஏனையவை விரும்பத்தக்க அம்சத்தைப் பற்றியும் பேசுகின்றன. அல்லது அவற்றுள் சில சமூகத்தின் பலத்துடன் தொடர்புறுகின்றன. ஏனையவை பலவீனமான நிலையுடன் தொடர்புபடுகின்றன. இப்படியாக, நாம் அவ்வசனங்களைப் பற்றி விளக்கிக் கொண்டு செல்லலாம்.

அவ்வசனங்களுக்கு உதாரணமாக, அத்தியாயம் அன்பாளில் வருகின்ற பின்வரும் வசனங்களைக் குறிப்பிடலாம். ''நபியே! போர் புரிவதில் இறை நம்பிக்கையாளர்களுக்கு ஆர்வமூட்டுவீராக! உங்களில் நிலைகுலையாத இருபது பேர் இருப்பின் இருநூறு பேரை அவர்கள் வென்றுவிடுவார்கள். மேலும், இத்தகையோர் உங்களில் நூறுபேர் இருந்தால், இறைமறுப்பாளர்களில் ஓராயிரம் பேரை அவர்கள் வென்று விடுவார்கள். ஏனெனில். இவர்கள் புரிந்து கொள்ளாத மக்களாக இருக்கின்றார்கள்''(8:65) என குறிப்பிடும் அதேவேளை தொடர்ந்து வரும் வசனம் ''இப்பொழுது அல்லாஹ் உங்கள் சுமையைக் குறைத்து விட்டான். இப்பொழுதும் உங்களிடம் பலவீனம் இருப்பதை அவன் அறிவான். எனவே, உங்களில் நூறுபேர் உறுதி குலையாதவர்களாய் இருந்தால், இருநூறு பேரை அவர்கள் வென்று விடுவார்கள். அத்தகையோர் உங்களில் ஆயிரம் பேர் இருந்தால் அல்லாஹ்வின் அனுமதி கொண்டு இரண்டாயிரம் பேரை அவர்கள் வென்று விடுவார்கள். மேலும், அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்'' (8:66) எனக் கூறுகிறது.

தப்ஸீருல் மனாரின் ஆசிரியர் இவ்வசனங்களின் கருத்தைப் பின்வருமாறு விளக்குகிறார்: ''நிராகரிப்போருடனான போராட்டத் தின்போது, இறை நம்பிக்கையாளர்களில் நூறுபேர் அவர்களில் இருநூறு பேரை வெற்றி கொள்ளல், ஆயிரம் பேர் அவர்களில் இரண்டாயிரம் பேரை வெற்றி கொள்ளல் என்பது மிகக் குறைவாகவே இடம்பெற முடியுமான ஒரு நிகழ்வாகும். பலவீனமான நிலையின்போது மாத்திரம் பின்பற்றுவதற்குரிய சலுகையாகவே இது அமைந்துள்ளது. இவ்வசனங்கள் இறங்கிய சூழலில் முஸ்லிம்கள் இத்தகைய ஒரு பலவீன நிலையிலேயே காணப்பட்டனர். பத்ர் யுத்த வேளையிலேயே இவ்வசனங்கள் இறங்கின. அவ்வேளை அவர்களிடம் உண்பதற்கும் போதிய உணவு இருக்கவில்லை. அவர்களிடம் ஒரேயொரு குதிரையே இருந்தது. அல்லது இரண்டு குதிரைகளே அவர்களிடம் இருந்தன. அத்தோடு வியாபாரக் கூட்டத்தை எதிர்கொள்ளும் நோக்கிலேயே அவர்கள் மதீனாவிலிருந்து வந்திருந்தனர். போராட்டத்துக்கு தயாரான

நிலையில் அவர்கள் இருக்கவில்லை. இவையனைத்தோடும் சேர்த்து குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு விடயம் போதியளவு ஆயுதங்களுடனும், பூரண ஆயத்தத்துடனும் வந்திருந்த எதிர்ப் படையிலுள்ள நிராகரிப்பாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் போது இவர்களது எண்ணிக்கை அப்படையில் மூன்றிலொரு பங்கை விடக் குறைவாகவே காணப்பட்டது.

அல்லாஹ் கடமையாக்கிய பிரகாரம், அவன் ஏவிய பிரகாரம் முஸ்லிம்கள் பூரண வலிமை பெற்றவர்களாக மாறும்போது, தம்மை விட எண்ணிக்கையில் பத்து மடங்கு பெரிய அல்லது அதனை விடப் பெரிய படைகளோடு அவர்கள் போராடினர். வெற்றியும் பெற்றனர். உரோம, பாரசீக சாம்ராஜ்யங்களையும் ஏனையோரையும் அவர்கள் வெற்றி கொண்டது இம்முறையில் அல்லவா? இது விடயத்தில் ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களது காலத்திலும் அதன் பின்னரும் முதல்தரமான முன்மாதிரியாக இருந்தனர்.

இவ்விரு வசனங்களிலும் முதலாம் வசனம் கடமை பற்றி பேசுகின்றது. (அதாவது ஒரு முஸ்லிம் போராட்டத்தின்போது பத்து இறைநிராகரிப்பாளர்களுக்கு சமமானவன். எனவே, அவன் எண்ணிக்கைக் குறைவைக் காட்டி போராட்டத்திலிருந்து பின்வாங்க முடியாது) ஆனால், இரண்டாம் வசனம் சலுகையைப் பற்றிப் பேசுகின்றது. அவ்வசனத்தில் வருகின்ற ''இப்போது அல்லாஹ் உங்கள் சுமையைக் குறைத்து விட்டான்'' (8:66) எனும் பகுதி இதற்கு ஆதாரமாக அமைகின்றது. இங்கு முதலில் இடம்பெற்றுள்ள வசனம் (மன்ஸூக்), இரண்டாவது இடம்பெற்றுள்ள வசனம் (நாஸிக்) என சில அல்குர்ஆன் விளக்கவுரையாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனினும், இக்கருத்து ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில், கடமையொன் றின் பின்னால் சலுகையைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது, அக் கடமைக்கு எதிரானதாக, முரணானதாக அமைய மாட்டாது. குறிப்பாக, இங்கு சலுகை வழங்கப்படக் காரணம் பலவீன நிலை என்பது தெளிவாக குறித்துக் காட்டப்பட்டுள்ளது. ஒரு கடமையைச் செய்யுமாறு கட்டளையிட்டு விட்டு அதனைச் செய்வதற்குரிய அவகாசம் கிடைக்க முன்னரே அதனை இரத்துச் செய்வது என்பது

நடக்க முடியாததாகும். அல்லது நாஸிக், மன்சூக் (மாற்றும் வசனமும், மாற்றப்படும் வசனமும்) வசனங்கள் ஒரே நேரத்தில் இறங்க முடியாது. இங்கு தெளிவாக புலப்படக்கூடிய விடயம் யாதெனில், இவ்விரு வசனங்களும் ஒரே நேரத்தில் இறங்கின. எனவே, இவ்விரு வசனங்களில் ஒன்று நாஸிக், அடுத்தது மன்சூக் எனும் கருத்தை ஏற்க முடியாது.

இப்னு அப்பாஸ் (றழி) கூறுகிறார்: ''உங்களில் நிலைகுலையாத இருபது பேர் இருப்பின், இருநூறு பேரை அவர்கள் வென்று விடுவார்கள்'' (8:65) எனும் வசனம் இறக்கியருளப்பட்டபோது, அது முஸ்லிம்களுக்கு மிகவும் சிரமமானதாக இருந்தது. பத்துப் பேரை பின்வாங்காது, புறமுதுகு காட்டாது எதிர்த்து நிற்பது கடமை! என அவ்வசனம் கூறியது. இச்சுமைகளை தளர்த்தவே, ''இப்போது அல்லாஹ் உங்கள் சுமையைக் குறைத்து விட்டான். இப்பொழுது உங்களிடம் பலவீனம் இருப்பதை அவன் அறிவான். எனவே, உங்களில் நூறுபேர் உறுதி குலையாதவர்கள் இருந்தால், இருநூறு பேரை அவர்கள் வென்றுவிடுவார்கள் என அல்லாஹ் கூறினான். (புஹாரி)

சிலர் இவ்வறிவிப்பு அவ்விரு வசனங்களிலும் ஒன்று நாஸிக் அடுத்தது மன்சூக் என்பதற்கு ஆதாரமாக அமைவதாக எண்ணு கின்றனர். ஏற்கனவே உள்ள சட்டத்தை மாற்றும் வசனமே 'நாஸிக்' எனப்படுகிறது. மாற்றப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட சட்டத்தைக் கொண்ட வசனமே மன்சூக் எனப்படுகிறது - இக்கருத்துப்படி நோக்குகையில் மறுமைநாள் வரை 65 ஆம் வசனத்தை நடைமுறைப்படுத்த முடியாது. இவ்வசனங்களில் 'நஸ்க்' இடம்பெறவில்லை என்பதே உண்மையாகும். இங்குள்ள முதல் வசனம் (65) கடமையைப் பற்றிப் பேசுகின்றது அல்லது முஸ்லிம் கள் பலமானவர்களாக இருக்கும்போது நிறைவேற்ற வேண்டிய கடமையைக் குறிக்கிறது. இரண்டாம் வசனம் (66) முஸ்லிம்கள் பலவீனர்களாக காணப்படும்போது மாத்திரம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகையைக் குறிக்கின்றது என்பது தெளிவான அம்சமாகும்.

இவ்வசனங்கள் பற்றி மேலும் விளக்குவதாயின், இரண்டாவது வசனம் குறிப்பிட்ட ஒரு சூழ்நிலைக்கு பொருந்தக் கூடிய வகையில் இயற்றப்பட்டுள்ள சட்டமாகும். முதலாம் வசனம் வேறொரு சூழ்நிலைக்கு பொருந்தக்கூடிய வகையில் வந்துள்ள சட்டமாகும். எனவே, சூழ்நிலைகளுக்கு ஏற்ப தீர்ப்புக்கள் மாறுபடும் என்பதற் கான ஓர் ஆதாரமாக இவ்விரு வசனங்களையும் கொள்ள முடியும்.

இவ்வாறே பொறுமை, மன்னிப்பு, இறை நிராகரிப்பாளர்களின் தொல்லைகளைப் புறக்கணித்து விட்டுவிடுதல் போன்ற அம்சங்கள் சம்பந்தமாக வந்திருக்கின்ற அல்குர்ஆன் வசனங்களை ஒருவசனம் (ஆயதுஸ் ஸைப்) மாற்றிவிட்டதாக அதிகமான அல்குர்ஆன் விளக்கவுரையாளர்கள் கூறுகின்றனர். உண்மையில் இவ்வசனங்கள் அனைத்தும் உரிய நேரங்களில், உரிய இடங்களில் பின்பற்றப்பட வேண்டியவையாகும். 'ஆயதுஸ் ஸைப்' என அழைக்கப்படும் வசனமும் பின்பற்றப்பட வேண்டிய நேரம் உண்டு. அதற்குரிய இடமும் உண்டு. எனவேதான் இமாம் ஸுயூதி இவ்வசனங்களை 'மன்ஸூக்' எனக் குறிப்பிடவில்லை. மாற்றமாக, 'முன்ஸஃ' என குறிப்பிட்டார். அதாவது 'தவணையை எதிர்பார்த்திருப்பவை' என அவ்வசனங்களை குறிப்பிடலாம்.

இமாம் ஸுயூதி தனது 'அல்இத்கான்' எனும் நூலில், உலூமுல் குர்ஆனில் நாற்பத்தி இரண்டாவது வகையை விளக்கும்போது - இப்பகுதி நாஸிக் மன்ஸூக் பற்றி பேசும் பகுதி 'நஸ்கை' (மாற்றத்தை) பல்வேறு வகைப்படுத்தலாம் எனக் கூறுகிறார். பின்னர் முதலாம், இரண்டாம் வகைகளை விளக்கியுள்ளார். தொடர்ந்து, ''மூன்றாம் வகை: ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு இடப்பட்ட கட்டளை. பின்னர் அது நீக்கப்படுகிறது. உதாரணமாக போராளிகளான எதிரிகளை பொறுமையாக இருக்கு மாறு, மன்னித்து விடுமாறு வந்துள்ள கட்டளை முஸ்லிம்கள் பலவீனர்களாக, எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருக்கும் போது விடுக்கப்பட்டுள்ள கட்டளையாகும். பின்னர், போராட்டத் தினை கடமையாக்குவதனூடாக அக்கட்டளை மாற்றப்பட்டு விடுகின்றது'' என கூறுகின்றார்.

தொடர்ந்தும் விளக்கமளிக்கும் அவர், உண்மையில் இது நஸ்க்'' அல்ல. மாற்றமாக, இது 'முன்ஸஃ' எனும் பிரிவில் அடங்கும். அல்லாஹ் அல்லது நாம் பிற்படுத்துகின்ற எனக் குறிப்பிட்டுள்ளான். முஸ்லிம்கள் பலமடையும் வரை போராட்டம் கடமையாக்கப் படுவது பிற்படுத்தப்பட்டுள்ளது. பலவீனமான நிலையில் அவர்கள் இருக்கும்போது தீங்குகளை சகித்துக் கொண்டு பொறுமையாக இருப்பதே கடமையாகும் என கூறுகிறார்.

ஆயதுஸ் ஸைப் எனும் வசனத்தின் மூலமாக பொறுமை, மன்னிப்பு பற்றி வந்துள்ள வசனம் மாற்றப்பட்டுவிட்டது என அதிகமானோர் எழுப்புகின்ற குரலானது இதன் மூலம் பலவீன மடைகிறது. அவ்வாறு மாற்றப்படல் இடம்பெறவில்லை. மாற்றமாக, பிற்படுத்தப்படலே இடம் பெற்றிருக்கிறது. எனவே, இதனை 'முன்ஸஃ' எனும் பிரிவில்தான் சேர்க்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு கட்டளைக்கும், அக்கட்டளை இடப்பட்டதற் கான காரணம் இருக்கையில் அதற்கு கட்டுப்படுவது கட்டாய மானதாகும். அக்காரணம் இல்லாது போகும்போது, இருக்கின்ற வேறொரு காரணத்தை அடியாகக் கொண்டதாக சட்டம் (தீர்ப்பு) அமையும். இங்கு ஒரு சட்டத்திலிருந்து வேறொரு சட்டத்தை நோக்கிய நகர்வே இடம்பெற்றுள்ளது. நஸ்க் இடம் பெறவில்லை. 'நஸ்க்' என்பது, சட்டத்தைப் பின்பற்றுவதை அனுமதிக்காத வகையில் முழுமையாக அச்சட்டத்தை நீக்கி விடுவதையே குறிக்கும். (அல் இத்கான், பாகம்: 2, பக்கம்: 21)

## தீர்ப்புகள் மாறுபடலாம் என்பதற்கு ஸுன்னாவிலிருந்து ஆதாரம்

இச்சட்ட விதிக்கு அடிப்படையாக ஸுன்னா அமைந்திருப்ப தனை, அதற்கான பல்வேறு ஆதாரங்களை உள்ளடக்கியிருப்பதனை ஸுன்னாவை ஆராயும் ஒருவர் கண்டு கொள்வார். இமாம் இப்னு ஹஜர் 'தல்கீஸுல் கபீர்' எனும் நூலில் இதனைக் குறித்துக் காட்டியுள்ளார். அபூஹுரைரா (றழி) அவர்கள் கூறுகிறார்கள். ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடத்தில் நோன்பாளி மனைவியைக்

கட்டித் தழுவுவது சம்பந்தமாக விசாரித்தார். அவருக்கு அதற்கு அனுமதி வழங்கினார்கள். வேறொருவர் வந்து வினவியபோது நபி (ஸல்) அனுமதி வழங்கப்பட்டவர் ஒரு வயோதிபராகக் காணப்பட்டார். அனுமதி மறுக்கப்பட்டவர் ஓர் இளைஞராகக் காணப்பட்டார்'' (அபூதாவூத்) என்ற ஹதீஸைப் பற்றி கூறுகை யிலேயே இப்னு ஹஜர் இது பற்றி சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை பலவீனமானது. எனவே, இச்சட்ட விதியை நிறுவுவதற்கு இந்த ஹதீஸை ஆதாரமாகக் கொள்ள முடியாது. இருப்பினும், இந்த ஹதீஸைப் பலப்படுத்தக் கூடிய வகையில் இன்னொரு ஹதீஸ் இடம்பெறுகிறது.

அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல் ஆஸ் (றழி) கூறுகிறார்: ''நாம் நபி (ஸல்) அவர்களிடத்தில் இருந்தோம். அவ்வேளை, ஓர் இளைஞர் வந்தார். அல்லாஹ்வின் தூதரே! நான் நோன்பாளியாக இருக்கும்போது முத்தமிடலாமா? என வினவினார். நபி (ஸல்): இல்லை, முடியாது என்றார்கள். தொடர்ந்து ஒரு முதியவர் வந்தார். நான் நோன்பாளியாக இருக்கும்போது முத்தமிடலாமா? என வினவினார். நபி (ஸல்): ஆம் என பதிலளித்தார்கள். நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். அவ்வேளை நபி (ஸல்) அவர்கள், உங்களில் சிலர் ஒருவரையொருவர் பார்ப்பதை நான் அறிந்து கொண்டேன். நிச்சயமாக வயோதிபர் தன்னைக் கட்டுப் படுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளார் என்றார்கள். (அஹ்மத்)[26]

இச்சட்டவிதிக்கான ஆதாரமாக நாம் ஏற்கனவே குறிப்பிட்ட இரு ஹதீஸ்களும் மாத்திரமல்ல அவற்றில் மாத்திரம் தங்கியிருந்து இவ்விதி பெறப்படவில்லை. இச்சட்ட விதிக்கு ஆதாரமாகக் காட்ட முடியுமான ஆதாரபூர்வமான பல ஹதீஸ்கள் காணப்படுகின்றன. ஸலமா பின் அக்வஃ (றழி) அறிவிக்கும் ''உங்களில் யாராவது

26- அஹ்மத் ஷாகிர் (றஹ்) இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை ஸஹீஹானது என்கிறார். அவ்வறிவிப்பாளர் வரிசையில் இப்னு லுஹைஆ இடம்பெறுகின்றார். இவ்வாறான விடயங்களில் இப்னு லுஹைஆவை நம்பத்தகுந்தவராக கருதுவதனாலேயே அவ்வறி விப்பாளர் வரிசையை ஸஹீஹ் என கூறுகின்றார்.

உழ்ஹிய்யா கொடுத்தால், மூன்று நாட்கள் முடிவடைந்ததன் பின் அவரது வீட்டில், அதில் சிறிதளவு கூட எஞ்சியிருக்கக் கூடாது'' என்ற ஹதீஸ் புஹாரியிலும், வேறு கிரந்தங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் ஸஹாபாக்கள், ''அல்லாஹ்வின் தூதரே, நாங்கள் சென்ற வருடம் செய்தது போல இவ்வருடமும் செய்ய லாமா? என வினவினர். அதற்கு நபி (ஸல்), நீங்க்ள சாப்பிடுங்கள், உணவளியுங்கள், சேமியுங்கள்'' சென்ற வருடத்தில் மக்களுக்கு கஷ்டமாக இருந்தது. எனவே, நீங்கள் அவர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்பதையே நான் நாடினேன் எனக் குறிப்பிட்டார்கள். சில ஹதீஸ்களில், ''வந்திருந்த விருந்தாளிகளின் காரணமாகவே (சேமிப்பதை) நான் உங்களுக்கு தடுத்தேன்'' என இடம்பெற்றுள் ளது. அதாவது, மதீனாவுக்கு வெளியே இருந்து விருந்தாளிகள் மதீனாவுக்கு வந்திருந்ததன் காரணமாகவே உழ்ஹிய்யா இறைச்சி யைச் சேமிப்பதை நபி (ஸல்) அவர்கள் தடுத்திருந்தார்கள்.

இந்த ஹதீஸ்களிலிருந்து மூன்று நாட்களுக்குப் பிறகும் உழ்ஹிய்யா இறைச்சியை சேமிக்க வேண்டாமென குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில், திடீரென தோன்றிய ஒரு காரணியை அடிப்படை யாக வைத்தே நபி (ஸல்) அவர்கள் கட்டளை பிறப்பித்தார்கள் என்ற கருத்து தெளிவாகிறது. மதீனாவுக்கு வெளியிலிருந்து விருந்தாளிகள் வந்திருக்கும் அழகிய சந்தர்ப்பத்தில், விருந்தோம்பும் பண்பு வேண்டி நிற்கும் தாராளத்தன்மையோடு, சகோதரத்துவம் வேண்டி நிற்கின்ற பரந்த மனப்பாங்கோடு அவர்கள் கவனிக்கப்பட வேண்டும். உழ்ஹிய்யா இறைச்சி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எனவே தான் சேமிக்க தடை விதிக்கப்பட்டது. தடைக் கான காரணம் நீங்கி விட்டால் குறிப்பிட்ட சட்டம் பிறப்பிக்கப் பட்டமைக்கான காரணம் நீங்கி விடுகிறது. எனவே, அச்சட்டமும் நீங்கிவிடும். காரணம் இருப்பதையும் இல்லாதிருப்பதையும் பொறுத்தே சட்டம் இருப்பதும் இல்லாதிருப்பதும் தீர்மானிக்கப்படு கிறது. இதனால், நபி (ஸல்) அவர்கள் தமது தீர்ப்பை மாற்றினார்கள். ஏற்கனவே சேமிப்பதைத் தடுத்திருந்த அவர்கள் சேமிக்க அனுமதி

வழங்கினார்கள். சில ஹதீஸ்களில் சேமிக்க அனுமதி உண்டு என்ற கருத்தை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். ''உழ்ஹிய்யா இறைச்சியை சேமிப்பதை நான் உங்களுக்கு தடுத்திருந்தேன். நீங்கள் அதிலிருந்து சாப்பிடுங்கள்; உணவளியுங்கள்; சேமியுங்கள்'' என அவர்கள் குறிப்பிட்டதாக ஆதாரபூர்வமான ஹதீஸ் கூறுகிறது.

நிலைமைகளுக்கு ஏற்ப வழங்கப்படக்கூடிய தீர்ப்புக்கள் மாற்ற முறும் என்பதற்கு இது மிகத்தெளிவான உதாரணமாக அமைந் திருக்கிறது.

ஏற்கனவே சேமிப்புக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை முழுமை யாக நீக்குவதாக இவ்வனுமதி காணப்படுகிறது என அநேகமான சட்ட அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, நஸ்கிற்கு உதாரணமாக ''புதைகுழிகளைத் தரிசிப்பதை நான் உங்களுக்கு தடுத்திருந்தேன். நீங்கள் அவற்றைத் தரிசியுங்கள்'' என்ற ஹதீஸைக் குறிப்பிடுவது போல மேலுள்ள ஹதீஸையும் குறிப்பிடுகின்றனர்.

உண்மையில் இந்த ஹதீஸில் 'நஸ்க்' இடம்பெறவில்லை. மாற்றமாக, குறிப்பிட்ட சட்டத்துக்கான காரணம் காணப்படாததால் சட்டம் மாற்றப்பட்டிருக்கின்றது. இதனை இமாம் ஷாபிஈ தமது 'அர்ரிஸாலா' எனும் நூலில் 'ஹதீஸ்களில் காணப்படும் காரணங்கள்' எனும் பாகத்தில் குறிப்பிட்டுள்ளார். சேமிப்புக்கு தடை விதிக்கப் பட்டதற்கான காரணமாக விருந்தாளிகளின் வருகை அமைந்தி ருந்தனை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

இமாம் குர்துபீ உழ்ஹிய்யா இறைச்சியை சேமிப்பதைத் தடுத்து வந்துள்ள ஹதீஸ் மன்சூக்''ஆக இருக்க முடியாது என விளக்குகிறார்: உண்மையில் இங்கு குறிப்பிட்ட காரணம் இல்லாமையினால் சட்டமும் இல்லாது போயிருக்கின்றது. இங்கு இடம் பெற்றிருப்பது நஸ்க் அல்ல. ஒரு சட்டம் 'நஸ்க்' செய்யப்படுவதற்கும், சட்டத் துக்கான காரணம் இல்லாது போவதனால் அச்சட்டம் இல்லாது போவதற்கும் இடையில் வேறுபாடு காணப்படுகிறது. 'நஸ்க்' மூலம் அகற்றப்பட்டுவிட்ட சட்டம் திரும்ப ஒருபோதும் அமுல்படுத்தப் படப் போவதில்லை. ஆனால், காரணம் இல்லாது போனமை யினால் நீக்கப்பட்ட சட்டம், திரும்ப அக்காரணம் தோன்றும்போது

அமுலுக்கு வரும். உழ்ஹிய்யா வழங்கும் காலப்பகுதியில் ஒரு பிரதேசத்துக்கு வறிய மக்கள் வருகை தந்தால், அம்மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உழ்ஹிய்யாவை அவர்களுக்கு வழங்குவதைத் தவிர வேறு எதையும் செய்ய வசதியற்றவர்களாக அப்பிரதேச மக்கள் இருந்தால், உழ்ஹிய்யாவை மூன்று நாட்களுக்கு மேல் சேமிக்காதிருப்பது அப்பிரதேச மக்களின் கடமையாக மாறும். இச்சந்தர்ப்பத்தில் மதீனாவுக்கு விருந்தாளிகள் வந்தபோது நபி (ஸல்) அவர்கள் நடந்துகொண்ட முறையில் அப்பிரதேச மக்கள் நடந்து கொள்ள வேண்டும்.[27]

ஸஹாபாக்கள் இக்கருத்தை விளங்கியிருந்தனர். அலி (றழி) அவர்கள் கலீபாவாக இருக்கும்போது பெருநாள் தொழுகையை நடாத்தினார்கள். பின்னர் உரை நிகழ்த்திய அவர், மூன்று நாட்களுக்கு மேல் உழ்ஹிய்யா இறைச்சியைச் சேமிப்பதைத் தடுத்தார்கள். அதற்கு ஆதாரமாக நபி (ஸல்) அவர்கள் மூன்று நாட்களுக்கு மேல் உழ்ஹிய்யா இறைச்சியைச் சேமிப்பதனைத் தடுத்ததை ஞாபகப் படுத்தினார்கள். அலி (றழி) அவர்கள் மேற்கொண்ட இந்நட வடிக்கையானது உழ்ஹிய்யாவை சேமிப்பதைத் தடுக்கும் ஹதீஸ்கள் மன்சூக் என்ற கருத்தைக் கொண்டோரை குழப்பத்தில் ஆழ்த்து கின்றது. சிலர் அந்த ஹதீஸ்கள் நஸ்க் செய்யப்பட்ட செய்தி அவருக்கு கிடைக்காததனால் அவர் இவ்வாறு நடந்து கொண்டி ருக்கலாம் என்கின்றனர். ஆனால், இமாம் அஹ்மத் சேமிப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் அனுமதித்தமையும், சலுகை வழங்கியமையும் அலி (றழி) அவர்களுக்குத் தெரிந்திருந்தது என்பதைக் காட்டும் வகையில் அறிவிப்புக்களைப் பதிவு செய்துள்ளார்.

அப்படியாயின், சேமிக்க வேண்டாம் என்று அலி (றழி) தடை விதித்தமை மக்கள் கஷ்டப்படுகின்ற, தேவையோடு இருக்கின்ற ஒரு சந்தர்ப்பத்திலேயே இடம்பெற்றிருக்கும் என்ற கருத்தே பலமானதாக தோன்றுகிறது. இமாம் இப்னு ஹஸ்ம் இக்கருத்தையே வலியுறுத்துவதாக 'பத்ஹுல் பாரி' என்ற நூல் கூறுகின்றது.

27- (தப்ஸீர் அல் குர்துபீ, பாகம்: 12, பக்கம்: 47-48)

இமாம் இப்னு ஹஜர், ''மூன்று நாட்கள் என வரையறுத்தமை குறிப்பிட்ட ஒரு நிகழ்வுடன் சம்பந்தப்பட்டதாகும். மக்களின் தேவையை நிறைவு செய்வதற்கு ஒரே நாளில் உழ்ஹிய்யா இறைச்சி முழுவதையும் சேமிக்காது வழங்கி விடுவதைத் தவிர வேறு வழி காணப்படாவிட்டால், ஓரிரவு கூட சேமிக்க இடமளிக்காதிருப்பதே கடமையாகும். குறிப்பிட்ட நிகழ்வை வைத்து நோக்குகையில் இம்முடிவுக்கே வர வேண்டியிருக்கும்'' என குறிப்பிடுகிறார்.[28]

தீர்ப்பு, நிலைமைகள் மாறுபடுவதற்கு ஏற்ப மாறுபடும் என இமாம் இப்னுல் கையிம் (றஹ்) குறிப்பிட்ட சட்ட விதிக்கு ஆதார மாக இத்தகைய ஹதீஸ்கள் அமைந்துள்ளன. இவை ஒரு சூழலில் நபி (ஸல்) அவர்கள் உழ்ஹிய்யா இறைச்சி சேமிப்பதை தடுத்திருக்கி றார்கள். பிறகு, சூழல் மாறியபோது தமது தீர்ப்பையும் மாற்றிக் கொண்டார்கள். ஏற்கனவே தடுத்த அவர்கள், சூழ்நிலைகள் மாறியபோது அனுமதியை வழங்கினார்கள் என்பதை உணர்த்தி நிற்கின்றன.

ஒரே கேள்விக்கு வித்தியாசமான பதில்களை நபி (ஸல்) அவர்கள் வழங்கியமை இச்சட்ட விதிக்கான முக்கியமான ஆதாரமாக அமைகின்றது. கேள்விகளை முன்வைத்தோரின் நிலைமைகள் வித்தியாசப்பட்டிருந்ததனாலேயே பதில்களும் வேறுபட்டன. ஒவ்வொருவருக்கும் அவரவரது நிலைமைக்குப் பொருந்தக்கூடிய, அவரவரது குறையையும் பிழையையும் நிவர்த்தி செய்யக்கூடிய பதில்களே வழங்கப்பட்டுள்ளன.

கருத்துத் பொதிந்த ஓர் உபதேசத்தை வழங்குமாறு ஒருவர் வேண்டியபோது, 'கோபப்படாதீர்' என்று கூறியதையும், வேறொரு வர் வேண்டிய போது, அல்லாஹ்வை நம்புகிறேன் எனக் கூறுவீராக! பின்னர், அதிலே நிலைகுலையாது இருப்பீராக! என்று கூறியதையும் இன்னொருவர் வேண்டிய போது, உமது நாவை அடக்கிக்

28- (பத்ஹுல் பாரி, பாகம்: 12, பக்கம்: 120-125)

கொள்வீராக! எனக் கூறியமையையும் நாம் ஹதீஸ்களிலே காண முடிகிறது. இவ்வாறு, நபி (ஸல்) ஒவ்வொரு மனிதனுக்கும் அவனிடம் காணப்பட்ட பிணிக்கு ஏற்ற மருந்தையே வழங்கி யிருக்கிறார்கள். அவனுக்கு மிகவும் பொருந்தக்கூடியதையே முன்வைத்திருக்கிறார்கள்.

இதற்கு இன்னோர் உதாரணம் பின்வருமாறு: அபூஹுரைரா (றழி) அறிவிக்கிறார்: ''செயல்களில் மிகவும் சிறந்த செயல் எது? என நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கை கொள்ளுதல் என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். அதற்கு அடுத்த நிலையிலுள்ள சிறந்த செயல் எது? என வினவப்பட்டது. அல்லாஹ்வின் பாதையில் போராடுதல் என பதிலளித்தார்கள். அதற்கு அடுத்த சிறந்த செயல் யாது? என வினவப்பட்டபோது அங்கீகரிக்கப்பட்ட ஹஜ் என பதிலளித்தார்கள்.'' (புஹாரி) ஈமானுக்கு அடுத்த நிலையிலுள்ள சிறந்த செயலாக இறைவனின் பாதையில் போராடுவதை இந்த ஹதீஸ் குறித்துக் காட்டியுள்ளது.

இக்கருத்தில் பல்வேறு ஹதீஸ்கள் வந்துள்ளன. அவை வினா எழுப்பியவர்களுக்கு, இறைபாதையில் போராடுவதற்கு நிகரான வேறு எந்த ஒரு செயலும் இல்லை'' என்ற கருத்தை முன்வைத் துள்ளன. ஆனால், யாருக்காவது காலமெல்லாம் விடாது நோன்பு நோற்க முடியுமாக இருப்பின், இரவு முழுக்க தூங்காது நின்று வணங்க முடியுமாக இருப்பின் அவரது அச்செயல் இறைபாதையில் போராடுவதற்கு நிகரானதாக அமையும் என்ற கருத்தையும் ஹதீஸ்களில் காண முடிகின்றது.

பல ஹதீஸ்கள் இறைபாதையில் போராடுவதற்கு நிகரான வேறு செயல் கிடையாது என்ற கருத்தை முன்வைக்கும் அதேவேளை, அக்கருத்துக்கு மாற்றமான வகையில் பின்வரும் ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

ஆயிஷா (றழி); ''அல்லாஹ்வின் தூதரே! இறைபாதையில் போராடுவதையே நாங்கள் மிகச் சிறந்த செயலாகக் கருதுகிறோம்

எனக் கூறியபோது, நீங்கள் செய்யும் மிகச் சிறந்த போராட்டமாக அங்கீகரிக்கப்பட்ட ஹஜ் அமையும்'' என நபி (ஸல்) அவர்கள் பதில் வழங்கினார்கள். சில அறிவிப்புக்களில், ''எனினும் போராட்டத்தில் மிகச் சிறந்த போராட்டம் அங்கீகரிக்கப்பட்ட ஹஜ்'' என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு அறிவிப்புக்களில் எதனை ஏற்றாலும் அவை முன்வைக்க வரும் கருத்து ஒன்றே. அதாவது, ஆண்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மிகச் சிறந்த செயலாக இறைபாதையில் போராடுதல் அமைந்து காணப்படுகிறது. பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மேற்கொள்ளும் மிகச் சிறந்த போராட்டமாக அங்கீகரிக்கப் பட்ட ஹஜ் அமைந்துள்ளது.

பெண் கேள்வி கேட்டபோது நபி (ஸல்) அவர்களது தீர்ப்பும், பதிலும் மாறுபட்டுள்ளன. ஏனெனில், அடிப்படையில் ஆயுதமேந்தி போராடுபவர்களாக ஆண்களே திகழ்கின்றனர்.

இவையனைத்துமே - இவை தவிர்ந்த இன்னும் ஏராளமான ஹதீஸ்கள் உள்ளன. வினா எழுப்புபவர்களின் நிலைமைகளைப் பொறுத்து வழங்கப்படும் பதிலும் தீர்ப்பும் வித்தியாசப்படும் என்பதற்கு ஆதாரங்களாக அமைகின்றன. தனிநபர்களின் நிலை மைகள் வேறுபட்டமைவதற்கேற்ப தீர்ப்பு வேறுபட முடியமாக இருப்பின், காலமும் இடமும் மாறுபடும்போது எவ்வாறு தீர்ப்பை மாற்றாதிருக்க முடியும்?!

## தீர்ப்பை மாற்றுவதில் ஸஹாபாக்களின் வழிமுறை

''தீர்ப்புக்கான காரணங்கள் அல்லது நியாயங்கள் மாறுபடுவதற் கேற்ப தீர்ப்பும் மாறுபடும்'' எனும் சட்ட விதியை நன்கு விளங்கி, அதனைப் பிரயோகித்தவர்களாக ஸஹாபாக்கள் திகழ்கின்றனர் என்பதை ஸஹாபாக்களின் வாழ்வை, கலீபாக்களின் வழிமுறையை ஆராயும் ஒருவர் தெரிந்து கொள்வர். இதற்கு முன்வைக்க முடியு மான பல உதாரணங்கள் உரிய மூலாதாரங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு தருகிறோம்.

## மதுபானம் அருந்துதலுக்குரிய தண்டனை சம்பந்தமான தீர்ப்பு மாறியமை

காலம், நிலைமை என்பன மாறுபடுவதற்கு ஏற்ப ஸஹாபாக்கள் வழங்கிய தீர்ப்பும் மாறுபட்டதாக அமைந்திருந்தது என்பதற்கு உதாரணமாக, மதுபானம் அருந்துபவனுக்கு வழங்கப்படும் தண்டனையைக் குறிப்பிடலாம். நபி (ஸல்) அவர்களது காலத்தில் இக்குற்றச் செயலுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு தண்டனை காணப்படவில்லை. இக்குற்றச் செயலில் ஈடுபடுவோரைத் தடுக்கும் நோக்கில் சீர்திருத்த தண்டனையொன்றை (தஃஸீர்) வழங்கும் முறையே அமுலில் இருந்தது.

உத்பா பின் அல்ஹாரிஸ் (றழி) அறிவிக்கிறார்: ''நுஐமான் என்பவர் அல்லது அவரது புதல்வர் நபி (ஸல்) அவர்களிடத்தில் அழைத்து வரப்பட்டார். அந்நிலையில் அம்மனிதர் போதையோடு இருந்தார். அது நபி (ஸல்) அவர்களுக்கு சிரமமானதாக இருந்தது. அவரை ஈர்க்கினால், செருப்பினால் அடிக்குமாறு வீட்டிலிருந்தோரை நபி (ஸல்) ஏவினார்கள். அவருக்கு அடித்தவர்களுள் ஒருவனாக நானும் இருந்தேன் (புஹாரி).

அபூஹுரைரா (றழி) அவர்கள் மூலமாக அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளதாவது, ''மது அருந்திய ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடத்தில் அழைத்து வரப்பட்டார். அவரை அடியுங்கள்''என நபி (ஸல்) பணித்தார்கள். அபூஹுரைரா (றழி) கூறுகின்றார்: அப்போது எங்களில் சிலர் கைகளால் அடித்தார்கள். சிலர் செருப்பால் அடித்தார்கள். சிலர் ஆடையால் அடித்தார்கள். அம்மனிதர் திரும்பிச் செல்கையில் சிலர், 'அல்லாஹ் உன்னை இழிவுபடுத்துவானாக' என்றனர். அப்போது நபி (ஸல்) அவ்வாறு கூறாதீர்கள்'' அவருக்கு எதிராக ஷைத்தானுக்கு உதவி செய்யாதீர்கள்! என்று கூறினார்கள்.

முஅம்மர், இப்னு ஜுரைஜ் ஆகியோரிடமிருந்து இமாம் அப்துர் ரஸ்ஸாக் தமது முஸன்னபில் பதிவு செய்கிறார். இப்னு ஷிஹாப் ''அவர்களிடம் நபி (ஸல்) அவர்க்ள் மதுபானம் அருந்தியதற்காக

எத்தனை கசையடிகள் வழங்கினார்கள்? என வினவப்பட்டது. அதற்கு அவர், அது விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் வரையறுத்த ஒரு தண்டனையை கட்டாயப்படுத்தவில்லை. அவ்வேளை தம்மோடிருந்தவர்களை நோக்கி, கைகளாலும் செருப்பாலும் அடிக்குமாறு பணிப்பவராக அவர்கள் காணப்பட்டார்கள். அவ்வாறு அடித்துக் கொண்டிருக்கையில் நிறுத்துங்கள்''என அவர்கள் கட்டளையிடுவார்கள்.

பெரிய தாபிஊன்களுள் ஒருவரான உபைத் பின் உமைர் என்பவரிடமிருந்தும் இவ்வாறான ஓர் அறிவிப்பு பதியப்பட்டுள் ளது. பின்னால் அது இடம்பெறவுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் நபி (ஸல்) அவர்கள் மது அருந்தியவருக்கு எதுவித தண்டனையையும் வழங்கவில்லை என்ற கருத்துக் கூட சில அறிவிப்புக்களில் காணப்படுகிறது. இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''நபி (ஸல்) அவர்கள் மதுபானம் அருந்துதலுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு தண்டனையை விதிக்க வில்லை. இப்னு அப்பாஸ் (றழி) கூறுகிறார்கள்: ஒரு மனிதன் மதுஅருந்தி போதையுற்ற நிலையில் காணப்பட்டார். அவரை நபி (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்று கொண்டிருக்கையில், அப்பாஸ் (றழி) அவர்களது வீட்டுக்கு முன்னால் செல்லும் போது அவர் கூட்டத்தை விட்டும் விலகி, அப்பாஸ் (றழி) அவர்களது வீட்டில் நுழைந்து விட்டார். வெளியே வராது அவருடனேயே இருந்தார். இவ்விடயம் நபி (ஸல்) அவர்களிடம் எடுத்துரைக்கப் பட்டபோது, அவர்கள் சிரித்தார்கள். அம்மனிதனுக்கு எதுவித தண்டனையும் வழங்குமாறு அவர்கள் பணிக்கவில்லை.[29]

இமாம் தபரீ வேறொரு அறிவிப்பாளர் வரிசை மூலமாக இப்னு அப்பாஸ் (றழி) அவர்களது கீழ்வரும் அறிவிப்பைத் தருகிறார். ''மது அருந்துதலுக்காக இறுதிக் காலப் பகுதியிலேயே நபி (ஸல்) அவர்கள்

29- (பத்ஹுல் பாரீ, பாகம்: 15, பக்கம்: 77)

அடிப்பதைத் தண்டனையாக வழங்கினார்கள். தபூக் யுத்தத்தில் அவர்கள் பங்குபற்றுகையில் ஒருநாள் போதையிலிருந்த ஒருவர் இரவு நேரத்தில் நபி (ஸல்) அவர்களது அறையில் நுழைந்து விட்டார். அப்போது, "இவரிடம் ஒருவர் வந்து இவரது கையைப் பிடித்து இவருக்குரிய தங்குமிடத்தில் அவரைக் கூட்டிக் கொண்டு போய்ச் சேர்க்கட்டும்" என அவர்கள் கூறினார்கள். (பத்ஹுல் பாரீ)

மதுபானப் பாவனையிலிருந்து அப்போதுதான் அம்மக்கள் விடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனால், ஆரம்பத்தில் நபி (ஸல்) அவர்கள் தண்டனை விடயத்தில் கவனம் செலுத்தாது இருந்தார்கள். சட்டவாக்கம் ஸ்திரமான நிலையை அடைந்தபோது, மதுமானம் அருந்துதலுக்கு வரையறுத்த தண்டனையை அவர்கள் விதிக்காவிட்டாலும் அடியை, கசையடியை தண்டனையாக வழங்கினார்கள். அவர்கள் 40 கசையடிகளை வழங்கினார்கள். நாற்பதுக்குக் குறைந்தளவு கசையடிகளையும் வழங்கினார்கள். நாற்பதுக்கு கூடுதலான கசையடிகளையும் வழங்கினார்கள் என்பதனை எல்லா அறிவிப்புக்களையும் இணைத்து நோக்கும்போது புரிய முடிகின்றது.

அபூபக்ர் (றழி) அவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் நாற்பது கசையடிகளைத் தண்டனையாக வழங்கினார்கள். சிந்தனையைப் பயன்படுத்தியே இம்முடிவுக்கு வந்தார்கள் என இமாம் ஷாதிபீ குறிப்பிடுகின்றார்.[30]

---

30- (இஃதிஸாம், பாகம்: 2, பக்கம்: 118) இப்னு அப்பாஸ் (றழி) கூறுகிறார்: நபி (ஸல்) அவர்களது காலப்பகுதியை விட அபூபக்ர் (றழி) அவர்களது காலப்பகுதியில் மது அருந்துபவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது. எனவே, அவர் இத்தண்டனையை அவர்களுக்கு கடமையானதாக ஆக்கி விட்டால் சிறந்ததல்லவா?! என கூறிவிட்டு, நபி (ஸல்) அவர்களது காலப்பகுதியில் அடிக்கப்பட்ட அளவுக்கும் சமீபமான ஒரு தண்டனை பற்றி ஆராய்ந்தார்கள். மரணிக்கும் வரை மது அருந்துவோருக்கு நாற்பது கசையடிகள் எனும் தண்டனையை அமுல்படுத்தினார்கள். (பைஹகி)

நபி (ஸல்) அவர்களது காலத்தில் மது அருந்துவோருக்கு நாற்பது கசையடிகள் வழங்கப்பட்டது என அபூபக்ர் (றழி) எடுத்த முடிவு அண்ணளவானதாகும். அனஸ் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் ஏறத்தாழ நாற்பது கசையடிகள் வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வறிவிப்பும் நாற்பது கசையடிகள்'' என்பது அண்ணளவானது, திட்டவட்டமானதல்ல என்பதை உணர்த்துகிறது.

இமாம் அப்துர் ரஸ்ஸாக் அபூஸஈத் அல்குத்ரீ (றழி) அவர்களிட மிருந்து, அபூபக்ர் (றழி) அவர்கள் மது அருந்துபவர்களுக்கு இரு செருப்புக்களாலும் நாற்பது அடிகளை வழங்கினார்கள்.[31] எனும் அறிவிப்பைப் பதிவு செய்துள்ளனர்.

உமர் (றழி) அவர்கள் மதுபானம் அருந்துதலுக்கு வழங்கப்படும் கசையடி சம்பந்தமாக மக்களோடு ஆலோசித்தார்கள். மக்கள் மதுவை அருந்துகின்றனர். அவர்களுக்கு அதற்குரிய துணிச்சல் வந்துவிட்டது என அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போது அலி (றழி) அவர்கள், போதையிலுள்ளவர் அவ்வாறிருக்கும்போது உளறுவார். அவ்வாறு உளறும்போது அபாண்டம் சுமத்துவார். எனவே, மது அருந்தலுக்கு உரிய தண்டனையாக அவதூறுக்குரிய தண்டனையை வழங்குங்கள் எனக் கூறினார்கள். இதனால், உமர் (றழி) அவர்கள் மது அருந்துதலுக்குரிய தண்டனையாக எண்பது கசையடிகளை நிர்ணயித்தார்கள்.[32]

இங்கு மதுஅருந்துதலுக்கான தண்டனையைப் பற்றி சிந்திக்கும் போது அதனால் வருகின்ற ஒரு விளைவை வைத்து தண்டனையை தீர்மானித்துள்ளனர். மது அருந்துதல் அவதூறு சொல்வதற்கு வழிவகுக்கலாம். அளவுக்கு அதிகமாக உளறுகின்ற ஒருவர் அவதூறு சொல்வதற்கான சாத்தியப்பாடு உள்ளது.

---

31- (அப்துர் ரஸ்ஸாக், முஸன்னப், பாகம்: 7, பக்கம்: 379) எனும் அறிவிப்பை பதிவு செய்கிறார். செருப்பால் அடிக்கும் முறை வரையறுக்கப்பட்ட தண்டனை வகையைச் சார்ந்ததல்ல.

32- (அப்துர் ரஸ்ஸாக், முஸன்னப், பாகம்: 7, பக்கம்: 378)

மனிதர்கள் மதுபானம் அருந்துதலில் மூழ்கி உள்ளனர். அதற்குரிய தண்டனையை அவர்கள் அற்பமானதாகக் கருதுகின்றனர் என காலித் பின் வலீத் (றழி) அவர்கள், உமர் (றழி) அவர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தமையே தண்டனை சம்பந்தமாக அவர்கள் ஆலோசனை நடாத்தியதற்கான காரணமாகும் என குறிப்பிடப்படுவதும் உண்டு.

உமர் (றழி) அவர்கள் ஆலோசனை கேட்டபோது ''வரையறுக்கப்பட்ட தண்டனைகளுள் (ஹுதூத்) ஆகக் குறைந்த தண்டனையாக காணப்படுவது எண்பது கசையடிகளாகும்'' என அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (றழி) அவர்கள் கூறினார்கள். எனவே, உமர் (றழி) அவர்கள் மது அருந்துதலுக்கு எண்பது கசையடிகளைத் தண்டனையாக வழங்குமாறு கட்டளை பிறப்பித்தார்கள்.[33]

நபி (ஸல்) அவர்களது காலப்பகுதியிலும், அபூபக்ர் (றழி) அவர்களது ஆட்சிக் காலத்திலும், உமர் (றழி) அவர்களது ஆட்சியில் சிறிது காலமும் மது அருந்துபவனுக்கு கைகளாலும் செருப்புக்களாலும் அடிக்கும் நிலையும், அவனது காதைத் திருகும் நிலையும்தான் காணப்பட்டது. மனிதர்கள் பாதிப்படைவதற்குப் பயந்து அதற்குரிய தண்டனையை நாற்பது கசையடிகள் என நிர்ணயித்தார்கள். மனிதர்கள் அப்போதும் மதுவிலிருந்து விலகிக் கொள்ளாததைக் கண்ணுற்ற அவர்கள் அறுபது கசையடிகளை தண்டனையாக நிர்ணயித்தார்கள். அப்போதும் கூட மக்கள் மதுவிலிருந்து விலகிக் கொள்ளாததைக் கண்ணுற்ற அவர்கள் எண்பது கசையடிகளைத் தண்டனையாக நிர்ணயித்தார்கள். பின்னர், வரையறுக்கப்பட்ட தண்டனைகளுள் ஆகக் குறைந்தது இதுவே என அவர்கள் குறிப்பிட்டார்கள்.[34]

---

33- (முஸ்லிம், நஸாஈ) பத்ஹுல் பாரீ, பாகம்: 15, பக்கம்: 67

34- (முஸன்னப், பாகம்: 7, பக்கம்: 377-378)

உமர் (றழி) அவர்களது இக்கருத்து ''வரையறுக்கப்பட்ட தண்டனைகளுள் ஆகக் குறைந்த தண்டனை எண்பது கசையடிகள்'' என்ற அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (றழி) அவர்களது கருத்தோடு அவர்கள் இணங்குகிறார்கள் என்பதையே காட்டுகிறது. அதாவது அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட தண்டனைகளுள் ஆகக்குறைந்தது எண்பது கசையடிகளாகும். விபச்சாரத்துக்கு, களவுக்கு வழங்கப்படும் தண்டனைகளை விட இது குறைந்த தண்டனை என்பதையே அவர்கள் இங்கு குறிப்பிட்டுள்ளனர்.

ஸாஇப் பின் யஸீத் கூறுகிறார்: நபி (ஸல்) அவர்களது காலத்திலும் அபூபக்ர் (றழி) அவர்களது காலத்திலும் உமர் (றழி) அவர்களது ஆட்சியின் ஆரம்பப் பகுதியிலும் மது அருந்துபவர் எம்மிடம் அழைத்து வரப்படுவார். நாம் அவருக்கு எமது கைகளாலும், செருப்புக்களாலும், போர்வைகளாலும் அடிப்போம். உமர் (றழி) அவர்களது கிலாபத்தின் இறுதிக் காலப்பகுதியில் அவர்கள் மது அருந்தியவனுக்கு நாற்பது கசையடிகளை வழங்கினார்கள். மக்கள் தொடர்ந்தும் அத்துமீறிச் சென்றபோது, பாவச் செயல்களில் ஈடுபட்டபோது மது அருந்துபவனுக்கு எண்பது கசையடிகளை தண்டனையாக வழங்கினார்கள். (புகாரி)

இந்த அறிவிப்பில் கிலாபத்தின் இறுதிக்காலம் எனக் குறிப்பிடப் படுவது கிலாபத்தின் மத்திம காலப்பகுதியையாகும். ஏனெனில், ஏற்கனவே, உமர் (றழி) அவர்களது கிலாபத்தின் ஆரம்பக் காலப் பகுதியில் நபி (ஸல்) அவர்களதும் அபூபக்ர் (றழி) அவர்களதும் காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த தண்டனையே அமுலில் இருந்ததாக இவ்வறிவிப்பின் ஆரம்பப்பகுதி கூறுகிறது. இமாம் நஸாஈயின் அறிவிப்பில் உமர் (றழி) அவர்களது கிலாபத்தின் மத்திம காலப்பகுதியில் தான் அவர்கள் நாற்பது கசையடிகளைத் தண்டனையாக வழங்கினார்கள். மனிதர்கள் தொடர்ந்தும் அத்துமீறிச் சென்றபோது, பாவச் செயல்களில் ஈடுபட்டபோது எண்பது கசையடிகளைத் தண்டனையாக வழங்கினார்கள் என்ற கருத்து தெளிவாகவே இடம்பெற்றுள்ளது.

உஸ்மான் (றழி) அவர்கள் சிலவேளைகளில் எண்பது கசையடிகளையும் வேறு சிலவேளைகளில் நாற்பது கசையடிகளையும் வழங்கியுள்ளார். அலி (றழி) அவர்களும் இவ்விரு தண்டனைகளையும் வழங்கியதாக வரலாறு கூறுகிறது. அத்தோடு அவர்கள் இவையனைத்தும் ஸுன்னாவாகும் என்றும் கூறியுள்ளார்கள். முஆவியா (றழி) அவர்கள் தொடர்ந்தும் எண்பது கசையடிகளையே வழங்கினார்கள். (தாரகுத்னீ)

இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், நபி (ஸல்) அவர்கள் மது அருந்துதலுக்கு குறிப்பிட்ட ஒரு தண்டனையை வரையறுத்து விட்டுச் செல்லவில்லை. அவ்வாறு அவர்கள் வரையறுத்திருந்திருந்தால் அது சம்பந்தமாக ஆலோசிக்க வேண்டிய தேவையோ, சிந்தனையைப் பயன்படுத்த வேண்டிய தேவையோ, அவதூறு சொல்லலுடன் அல்லது ஆகக்குறைந்த வரையறுக்கப்பட்ட தண்டனையுடன் ஒப்பிட வேண்டிய தேவையோ அல்லது வேறுவகையான அளவுகோல்களைப் பயன்படுத்த வேண்டிய தேவையோ ஸஹாபாக்களுக்கு ஏற்பட்டிருக்க மாட்டாது.

மது அருந்துதலுக்குரிய தண்டனை விடயத்தில் திட்டவட்டமாக பின்பற்றுவதற்குக் கட்டாயமான ஒரு சட்ட வசனம் நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஸஹாபாக்களுக்கு கிடைக்காததனால் கால மாற்றங்களுக்கு ஏற்பவும், சூழ்நிலைகள் மாறுவதற்கு இணங்கவும் அவர்களது தீர்ப்புக்கள் வித்தியாசப்பட்டமைந்தன. இதனை உமர் (றழி) அவர்களது ஆட்சிக் காலப் பகுதியில் நாம் தெளிவாகக் காண்கிறோம். ஆரம்பத்தில் அவர்கள் நாற்பது கசையடிகளை வழங்கினார்கள். பின்னர், அறுபது கசையடிகளை வழங்க ஆரம்பித்தார்கள். பின்னர், எண்பது கசையடிகள் வழங்கினார்கள். மக்கள் மதுஅருந்துதலை விட்டு விலகாது படிப்பினை பெறாது இருக்கும் நிலை தீவிரமடைவதற்கேற்ப தண்டனையில் அவர்கள் மாற்றங்களைச் செய்தார்கள்.

அலி (றழி) அவர்கள் மது அருந்துதலுக்குத் தண்டனையாக எண்பதுக்கும் மேற்பட்ட கசையடிகளை சில சந்தர்ப்பங்களில் வழங்கினார்கள் என்ற கருத்தும் சில அறிவிப்புக்களில் இடம்

பெற்றுள்ளது. நஜ்ஜாஷீ அல் ஹாரிஸீ என்ற கவிஞர் ரமழான் மாதத்தில் மதுவருந்தினார். அலி (றழி) அவர்கள் அவருக்கு எண்பது கசையடிகளை வழங்கினார்கள். பின்னர், அவரை சிறை செய்தார் கள். அடுத்த நாள் வெளியே அழைத்து வந்து மேலும் இருபது கசை யடிகளை வழங்கினார்கள். பின்னர், உமக்கு இருபது கசையடிகளை நான் வழங்கியமைக்குக் காரணம் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதில் நீர் காட்டும் துணிச்சலும், ரமழானில் நீர் நோன்பை விட்டுவிடுவதும் தான். வேறு எதுவுமல்ல எனக் குறிப்பிட்டார்கள்.[35]

இது இவ்வாறிருக்க மது அருந்துதலுக்கு நாற்பது கசையடிகளுக்கு அதிகமாக தண்டனை வழங்கப்படுவதை அலி (றழி) அவர்கள் விரும்பவில்லை என்ற கருத்து வேறுபல அறிவிப்புக்களில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உமர் (றழி) அவர்கள் ரமழானில் யாராவது மது அருந்தினால், கசையடிகள் வழங்குவதுடன் மாத்திரம் திருப்தியுறவில்லை. அவரை நாடு கடத்தவும் செய்தார்கள். ரமழான் மாதத்தில் மது அருந்திய ஒரு வயோதிபர் உமர் (றழி) அவர்களிடம் அழைத்து வரப்பட்டார். பாழ்படுத்துவோரை அழிக்கட்டும், பாழ்படுத்துவோரை அழிக்கட் டும்.'' ரமழான் மாதத்தில், எமது பிள்ளைகள் நோன்பு நோற்றிருக் கும் நிலையிலா மது அருந்துவது?! என வினவி விட்டு, அவ் வயோதிபருக்கு எண்பது கசையடிகளை வழங்கினார்கள். பின்னர், அவரை ஷாமுக்கு நாடு கடத்தினார்கள். (முஸன்னப், பைஹகீ)

குற்றம் செய்தவனின் நிலை, அவனது அத்துமீறலின் தன்மை, குற்றம் அவன் மூலம் பலமுறை நிகழ்ந்திருத்தல், அவனது துர்நடத்தை சமூகத்தில் பிரபல்யமடைந்திருத்தல், தண்டனையினால் அவன் படிப்பினை பெறாதிருத்தல் போன்ற காரணங்கள் ஒருவனுக்குரிய தண்டனை விடயத்தில் கண்டிப்புக் காட்டப்பட காரணமாக அமையும். இதே கண்டிப்பை மது அருந்தியுள்ள ஆனால், சமூகத்தில் பாவச் செயலில் துர்நடத்தையில் ஈடுபடுபவர்

---

35- (முஸன்னப், பைஹகீ, பாகம்: 8, பக்கம்: 321)

எனக் கருதப்படாத ஒருவர் விடயத்தில் காட்ட முடியாது. எனவே, குற்றஞ் செய்தவனின் நிலைக்கும் குற்றத்தின் தன்மைக்கும் ஏற்ப தண்டனை வேறுபடும் என்பதையே இவையனைத்தும் உணர்த்துகின்றன.

இதனாலேயே சில அறிவிப்புக்களில் தவறுதலாக மது அருந்திய ஒரு பலவீனர் உமர் (றழி) அவர்களிடம் அழைத்து வரப்பட்டால் அவருக்கு நாற்பது கசையடிகள் வழங்குவார்கள்(36) என இடம்பெற்றுள்ளது. ஆனால், மதுவருந்தும் பெரும்பாவத்தில் பிடிவாதமாக இருக்கும் யாரும் மாட்டிக்கொண்டால் அவர்களோடு வேறுவிதமாகவே நடந்து கொண்டார்கள்.

உமர் பின் அப்துல் அஸீஸ் (றஹ்) மனிதர்கள் பாவங்களைச் செய்யும் அளவுக்கு புதுப்புது தீர்வுகளும் தோன்றும் என்பதனூடாகவும் சொல்ல வருவது இதனையேயாகும்.

அதிசயிக்கத்தக்க அம்சம் யாதெனில், மது அருந்துபவனுக்கு எண்பது கசையடிகள் வழங்குமாறு உமர் (றழி) அவர்களுக்கு ஆலோசனை வழங்கிய அலி (றழி), பின்னர் அக்கருத்தை மாற்றிக் கொண்டார்கள். மது அருந்துபவன் அவதூறு சொல்வதற்கு, அபாண்டம் சுமத்துவதற்கு சாத்தியப்பாடு காணப்படுகின்றது என்பதனாலேயே அவ்வாலோசனையை முன்வைத்திருந்தார்கள். பின்னர், நாற்பது கசையடிகள் வழங்குவதோடு அவர் நிறுத்திக் கொண்டதாக சில அறிவிப்புக்கள் கூறுகின்றன. அவ்வறிவிப்புக்களை பலவீனமானது என்று கூறி சிலர் நிராகரிப்பதுமுண்டு.

மது அருந்துதலுக்குரிய தண்டனையை ஷரீஅத் திட்டவட்டமாக வரையறுக்கவில்லை. ஆதலால், அதனை வரையறுக்கும் பொறுப்பு ஆட்சியாளர்களுக்கும் முஜ்தஹிதுகளுக்கும் விடப்பட்டுள்ளதனால் இத்தகைய ரிவாயத்துக்களை (அறிவிப்புக்களை) மறுக்க வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். ஏற்கனவே தண்டனை கடுமையாக இருந்ததனால் அலி (றழி) அவர்களது காலப்பகுதியில்

---

36- (பத்ஹுல் பாரீ, பாகம்: 15, பக்கம்: 76)

மக்கள் மது அருந்துவதிலிருந்து பரவலாக விலகியிருந்திருக்கக் கூடும். எனவே, நபி (ஸல்) அவர்களது காலத்திலும், அபூபக்ர் (றழி) அவர்களது காலத்திலும் இருந்தது போன்ற தண்டனையை அமுலாக்கி அவர் இலகுபடுத்தும் பணியை மேற்கொண்டிருக்கக் கூடும்.

அலி (றழி) அவர்கள் கூறுகிறார்கள் ''நான் யாருக்காவது ஒரு வரையறுக்கப்பட்ட தண்டனையை வழங்கி அதனால் அவர் மரணித்தால் அதற்காக நான் வருந்தியது கிடையாது. ஆனால், மதுபானம் அருந்திய ஒருவருக்கு தண்டனை வழங்கி அவர் மரணித்தால் அதற்காக நான் வருந்துவேன். அவருக்காக நஷ்டஈடு வழங்குவேன். ஏனெனில், மது அருந்துபவனுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு தண்டனையை வழங்கும் வழிமுறையை நபி (ஸல்) அவர்கள் உருவாக்கவில்லை.'' (புகாரி, முஸ்லிம்)

இதனாலேயே அறிஞர்களில் ஒரு பிரிவினரிடமிருந்து இமாம்களான தபரீ, இப்னுல் முன்திர் ஆகியோரும் வேறு சிலரும் மதுபானம் அருந்துதலுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு தண்டனை கிடையாது. சீர்திருத்த (தஃஸீர்) தண்டனையே உண்டு எனும் கருத்தைப் பதிவு செய்துள்ளனர். நபி (ஸல்) அவர்கள் மதுவருந்தியவனுக்கு வழங்கப்படும் அடிகளின் எண்ணிக்கையை வரையறுக்கவில்லை எனும் கருத்தில் வந்துள்ள ஆதாரபூர்வமான ஹதீஸ்களையும், இப்னு அப்பாஸ் (றழி), இப்னு ஷிஹாப் (றஹ்) ஆகியோர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள நபி (ஸல்) அவர்கள் மதுவருந்தியவனுக்கு அடிக்கும் விடயத்தில் ஒவ்வொருவரதும் நிலைமைக்கேற்ப தமது தண்டனையை சுருக்கிக் கொண்டார்கள் எனும் ஹதீஸையும் இவர்கள் தமது கருத்துக்கு ஆதாரங்களாக முன்வைக்கின்றனர்.

மதுபானம் அருந்துதல் விடயத்தில் கடமையான ஒரு தண்டனை (ஹத்) காணப்படுகிறது என்பதில் இஜ்மாஃ இருப்பதாக கூறுபவர்களின் கருத்துக்களைக் குறிப்பிடும் இமாம் இப்னு ஹஜர் இறுதியில் மேலுள்ள கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.[37]

---

37- (பத்ஹுல் பாரீ, பாகம்: 15, பக்கம்: 77)

இமாம் ஷவ்கானீ தனது 'அத்துரருல் பஹிய்யா' எனும் நூலில், யார் போதையூட்டும் ஒரு பானத்தை அருந்துகிறாரோ அவர் சித்த சுயாதீனமுடையவராக, சுயவிருப்பின் பேரில் மது அருந்தியவராக இருந்தால் - ஆட்சியாளர் பொருத்தமானது என கருதுகின்ற அளவு கசையடிகள் வழங்கப்படும். அது நாற்பது கசையடிகளாக இருக்க லாம் அல்லது அதைவிடக் குறைவாக இருக்கலாம் அல்லது அதைவிட அதிகமாக இருக்கலாம். கசை மூலமாக அன்றி செருப்பி னால் அவர் அடிக்கப்படவும் முடியும்.

'ஸய்யீத் ஸித்தீக் கான் துரருல் பஹிய்யா' எனும் நூலுக்கு எழுதிய விளக்கவுரையான 'ரவ்ழதுன் நதிய்யா' எனும் நூலில் அக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகிறார். மதுபானம் அருந்துதல் சம்பந்தமாக வந்துள்ள அனைத்து ஹதீஸ்களையும் தொகுத்து நோக்குகையில் தான் அவர் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறார். இவற்றின் அடிப்படையில் மதுபானம் அருந்துதலுக்குரிய தண்டனையானது தஃஸீர் எனும் தண்டனைப் பிரிவிலேயே அடங்குகிறது என அவர் கூறுகிறார்.

மதுபானம் அருந்துதலுக்கு வரையறுக்கப்பட்ட ஒரு தண்டனை கிடையாது என்பதே இமாம் புஹாரி அவர்களதும் கருத்தாக இருந்துள்ளது என்பதனை ஸஹீஹுல் புஹாரியில் இருந்தும் புரிய முடிகிறது. கசையடிகளின் எண்ணிக்கை சம்பந்தமாக அடிப்படை யில் அவர் எத்தலைப்புக்களையும் இடவில்லை. தெளிவாக எண்ணிக்கையைக் குறிப்பிட்டு நபி (ஸல்) அவர்களிடம் கூறியதாக எந்த ஹதீஸையும் அவர் பதிவு செய்யவும் இல்லை என இமாம் இப்னு ஹஜர் குறிப்பிடுகிறார்.

நாம் இதுவரை குறிப்பிட்ட அனைத்து கருத்துக்கள் ஊடாகவும் மது அருந்தியவனுக்குரிய தண்டனை சம்பந்தமாக ஸஹாபாக்கள் வழங்கிய தீர்வு, காலத்துக்குக் காலம் மாறியுள்ளது. சூழ்நிலைகள் வித்தியாசப்படுவதற்கேற்ப மாறியுள்ளது என்பதனையே விளக்க முனைந்தோம். அல்லாஹ்விடமிருந்தோ, அவனது தூதரிட மிருந்தோ வரையறுத்த தண்டனையைக் குறிப்பிட்டு ஓர் சட்ட வசனம் வராமையே இதற்கான காரணமாக அமைந்தது. தீர்ப்புக்கான

காரணங்கள் வித்தியாசப்படுவதற்கேற்ப தீர்ப்பும் மாறுபடுவது கட்டாயமானது என நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள கருத்தை உறுதிப்படுத்துவதாக ஸஹாபாக்களின் இந்நடவடிக்கை அமைந் துள்ளது.

## ஸகாதுல் பித்ரும் ஸஹாபாக்களது தீர்ப்பும்

சட்டத் தீர்ப்புக்கான நியாயங்கள் / காரணங்கள் மாறுபட்டு அமை வதற்கேற்ப தீர்ப்பும் வித்தியாசப்படும் என்ற சட்ட விதிக்கு ஸஹா பாக்கள் காலத்திலிருந்து இன்னோர் உதாரணத்தை நோக்குவோம். ஸகாத்துடன் தொடர்புபட்ட ஓர் உதாரணத்தையே இங்கு நாம் தெரிவு செய்துள்ளோம்.

ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் குறிப்பிடுவதைப் போல் நபி (ஸல்) அவர்கள் பேரீச்சம் பழம், திராட்சைப்பழம், வாற்கோதுமை, பாற்கட்டி ஆகிய உணவுப் பொருட்களில் இருந்து ஒரு ஸாஉ ஸகாதுல் பித்ராக கடமையாக்கினார்கள்.

ஆனால், சில ஸஹாபாக்கள் தமது காலப்பகுதியில் ஒரு ஸாஉ பேரீச்சம் பழத்துக்கு அல்லது ஒரு ஸாஉ வாற்கோதுமைக்கு சமமாக அரை ஸாஉ கோதுமையைக் கருதினர். எனவே, ஸகாதுல் பித்ராக அரை ஸாஉ கோதுமையையே அவர்கள் கொடுத்தனர் என்பதற்கும் நம்பகமான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

கோதுமையை ஸகாதுல் பித்ராக வழங்கலாம் என்பதற்கு அடிப்படையாகக் கொள்ள முடியுமான உறுதியான எந்த ஹதீஸும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. அக்காலப்பகுதியில் மதீனா வில் மிகவும் குறைந்தளவு கோதுமையே காணப்பட்டது.

ஸஹாபாக்களின் காலத்தில் கோதுமைப் பாவனை அதிகரித்த போது, ஒரு ஸாஉ வாற்கோதுமைக்குப் பகரமாக அரை ஸாஉ கோதுமை வழங்க முடியம் என அவர்கள் கருதினர் என இமாம் இப்னுல் முன்திர் குறிப்பிடுகிறார்.

உஸ்மான் (றழி), அலி (றழி), அபூஹுரைரா (றழி), ஜாபிர் (றழி), இப்னு அப்பாஸ் (றழி), இப்னு ஸுபைர் (றழி), அஸ்மாஉ பின்து

அபீபக்ர் (றழி) ஆகியோர் ஸகாதுல் பித்ராக அரை ஸாஉ கோதுமை வழங்கலாம் என கருதியதற்கான அறிவிப்புக்களைக் குறிப் பிட்டுள்ளார்.

பரிசுத்த ஆறு ஹதீஸ் கிரந்தங்களிலும் பின்வரும் ஹதீஸ் இடம்பெறுகிறது. அபூஸஈத் (றழி) அறிவிக்கிறார். ''எம்மோடு நபி (ஸல்) அவர்கள் இருந்த காலத்தில் ஒரு ஸாஉ உணவுப் பொருளை அல்லது ஒரு ஸாஉ பேரீச்சம் பழத்தை அல்லது ஒரு ஸாஉ வாற்கோதுமையை அல்லது ஒரு ஸாஉ உலர்ந்த திராட்சைப் பழத்தை அல்லது ஒரு ஸாஉ பாற்கட்டியை ஸகாதுல் பித்ராக வழங்கினோம். முஆவியா எம்மிடத்தில் வரும் வரை -மதீனாவுக்கு வரும் வரை இதே நிலையிலேயே நாம் தொடர்ந்திருந்தோம். அவர் 'ஒரு ஸாஉ பேரீச்சம் பழங்களுக்கு நிகரானதாக இரு முத்து கோதுமை உள்ளது' என நான் கருதுகிறேன்'' எனக் கூறினார். மக்கள் அவரது கருத்தை ஏற்று பின்பற்றலாயினர்.

இமாம் இப்னுல் முன்திர் அவர்களும் ஏனையோரும் குறிப் பிட்டுள்ள இந்த ஸஹாபாக்களும், அவ்வாறே முஆவியா (றழி) அவர்களும் அவரது கருத்தை அங்கீகரித்தோரும் அரை ஸாஉ கோதுமையை ஸகாதுல் பித்ராக வழங்கலாம் என்கின்றனர். ஹதீஸில் ஒரு ஸாஉ வழங்கப்பட்டதற்கு, நபி (ஸல்) அவர்களது காலம் முதல் ஒரு ஸாஉ வழங்குதலே அமுலில் இருந்தது என்பதற் குத் தான் ஆதாரம் காணப்பட்ட போதிலும் அவர்கள் இம்முடிவுக்கு வந்துள்ளனர். பெறுமதியை அடிப்படையாகக் கொண்டே இம் முடிவுக்கு வந்தனர். ஏனைய உணவுப் பொருட்களின் விலையை விட மிகவும் விலை கூடியதாக கோதுமை காணப்படுவதை அவர்கள் அவதானித்தனர்.

உதாரணமாக, பேரீச்சம் பழம், வாற்கோதுமை போன்றவற்றின் விலையை விட கோதுமையின் விலை அதிகமாக இருந்தது. எனவே தான் பெறுமதியில் அரை ஸாஉ கோதுமை ஒரு ஸாஉ உணவுப் பொருட்களுக்கு சமமாக இருப்பதை வைத்துத்தான் அரை ஸாஉ கோதுமையை ஸகாதுல் பித்ராக வழங்கலாம் என அவர்கள் தீர்ப்பளித்தனர்.

## உமர் (றழி) அவர்களும் குதிரைக்கான ஸகாதும்

கால மாற்றங்களுக்கு ஏற்ப தீர்ப்பு மாறுபடும் என்பதற்கு இன்னோர் உதாரணமாக குதிரைகளுக்கான ஸகாத் விடயத்தில் உமர் (றழி) அவர்கள் வழங்கிய தீர்ப்பு அமைந்துள்ளது.

ஷாமிலிருந்து சில மனிதர்கள் உமர் (றழி) அவர்களிடத்தில் வந்தனர். ''எம்மிடத்தில் குதிரைகள், அடிமைகள் போன்ற சொத்துக் கள் உள்ளன. அவற்றுக்கு ஸகாத் வழங்க வேண்டும். எம்மைத் தூய்மைப்படுத்த வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்' என்றனர். அதற்கு உமர் (றழி) அவர்கள், 'எனக்கு முன்னால் எனது தோழர்கள் இருவரும் செய்ததையே நானும் செய்வேன்' என பதிலளித்தார்கள்.

உமர் (றழி) அவர்கள் ஏனைய ஸஹாபாக்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அப்போது அலி (றழி) அவர்கள், 'உமக்குப் பின்னால் தொடர்ந்து பெறப்படுகின்ற ஒரு வரி போன்று அது அமையா விட்டால், அது சிறந்ததுதான்' என்றார்கள்.[38]

யஃலா பின் உமையா கூறுகிறார்: அப்துர் ரஹ்மான் - யஃலாவின் சகோதரர் யமனைச் சேர்ந்த ஒருவரிடத்தில் ஒரு பெண் குதிரையை வாங்கினார். நூறு இளம் ஒட்டகைகளைக் கொடுத்தே அவர் இக்குதிரையை வாங்கினார். விற்பனை செய்தவர் கைசேதப்பட்டார். உமர் (றழி) அவர்களிடத்தில் வந்த அவர், யஃலாவும் அவரது சகோதரரும் 'எனக்குரிய ஒரு குதிரையை என்னிடமிருந்து கொள்ளையடித்துக் கொண்டனர்' என முறையிட்டார். தன்னிடத் தில் வருமாறு உமர் (றழி) யஃலாவுக்கு கடிதம் எழுதினார். உமர் (றழி) அவர்களிடத்தில் வந்த யஃலா நடந்தவற்றைச் சொன்னார். அப்போது, உங்களிடத்தில் குதிரைகள் இவ்வளவு பெறுமதி யானவையா?! ஒரு குதிரை இவ்வளவு பெறுமதியானதாக இருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை!! நாற்பது ஆடுகள் இருந்தால் ஒரு ஆட்டை எடுக்கும் நாங்கள் குதிரைகளிலிருந்து எதையுமே பெறாது

38- (பிக்ஹுஸ் ஸகாத், பாகம்: 1, பக்கம்: 229)

விட்டு விடுவதா?! ஒவ்வொரு குதிரைக்காகவும் ஒரு தீனாரை எடுங்கள் எனக் கூறினார்கள். ஒவ்வொரு குதிரைக்கும் ஒரு தீனார் வழங்கப்படலைக் கடமையாக்கினார்கள்.[39]

இந்நிகழ்வு, ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வின் பின்னர் இடம்பெற்றதாக அறிவிப்புக்கள் கூறவில்லை. எனினும், அதற்குப் பின்னரே இது இடம்பெற்றிருப்பது பொருத்தமானது. ஆரம்ப நிகழ்வில் உமர் (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களோ, அபூபக்ர் (றழி) அவர்களோ செய்யாத ஒரு விடயத்தை எவ்வாறு செய்யலாம்?! என்ற தயக்கத்தில் இருந்தார்கள். எனவே தான் ஸஹாபாக்களிடம் ஆலோசனை கேட்டார்கள். அவ்வேளை அலி (றழி) அவர்கள் தமது ஆலோசனையை வழங்கினார்கள்.

இரண்டாவது நிகழ்வில், உமர் (றழி) அவர்கள் யாரிடத்திலும் ஆலோசனை பெறவில்லை. அவருக்கு அவ்விடயத்தைப் பற்றிய பூரண தெளிவு காணப்பட்டது. சமூகத்தை அவதானித்து, மக்களுக் குச் செவிமடுத்து தனது கருத்தை அவர்கள் உருவாக்கியிருந்தார்கள். ஒவ்வொரு குதிரைக்காகவும் ஒரு தீனாரைப் பெறுமாறு தமது கவர்னர்களைப் பணித்தார்கள். இங்கு காலம் மாறுபடுவதற்கு இணங்க, சூழ்நிலை மாறுபடுவதற்கு ஏற்ப உமர் (றழி) அவர்கள் குதிரைகளின் ஸகாத் சம்பந்தமான தீர்ப்பை மாற்றிக் கொண்டுள்ளார் கள். முதலாவது நிகழ்வின்போது எக்கருத்தில் இருந்தார்களோ, அதே கருத்தில் இரண்டாவது நிகழ்வின்போதும் எதுவித மாற்றமு மின்றி அவர் நிலைத்திருக்கவில்லை. மாற்றமாக தனது தீர்ப்பை அவர் மாற்றிக் கொள்கிறார். ஏனெனில், சூழ்நிலைமைகள் வித்தி யாசப்பட்டு அமைவதற்கு ஏற்ப இஜ்திஹாத் வித்தியாசப்படும்.

ஒரே விவகாரத்தில் வித்தியாசமான இரண்டு தீர்ப்புக்களை உமர் (றழி) வழங்கினார்கள். அப்போது காலம் மட்டுமே மாறியிருந்தது. இதுபற்றி அவரிடம் வினவப்பட்டபோது, முதலில் நாம் வழங்கிய தீர்ப்பு நாம் அறிந்து வைத்திருந்ததன் அடிப்படையில் வழங்கிய தாகும். இப்போது வழங்கும் தீர்ப்பு எமக்கு இப்போதுள்ள அறிவின் அடிப்படையில் வழங்குவதாகும் எனக் குறிப்பிட்டார்கள்.

---

39- (பைஹகி) பிக்ஹுல் ஸகாத், பாகம்: 1, பக்கம்: 226

## உமர் (றழி) அவர்களும் நவ முஸ்லிம்களும்

நபி (ஸல்) அவர்களது காலத்திலும், அபூபக்ர் (றழி) அவர்களது காலத்திலும் 'முஅல்லபதுல் குலூப்' எனும் பெயரில் சமூகத்தில் அறிமுகமாகியிருந்த பிரிவினருக்கு உமர் (றழி) அவர்கள் தொடர்ந்தும் ஸகாத் வழங்கப்படுவதை நிறுத்தினார்கள். 'அல்லாஹ் இஸ்லாத்துக்கு கண்ணியத்தைக் கொடுத்து விட்டான். இஸ்லாம் பலம் பெற இவர்களது தேவை கிடையாது' என அவர்கள் குறிப்பிட்டார்கள்.

உமர் (றழி) அவர்களது இந்நடவடிக்கை சில அறிஞர்கள் வாதிடுவது போல அல்குர்ஆனிலுள்ள, ஸுன்னாவிலுள்ள ஒரு சட்டத்தை மாற்றியமைக்கும் தொழிற்பாடல்ல. 'முஅல்லபதுல் குலூப்' எனும் பிரிவினருக்குரிய பங்கை இனி ஒருபோதும் வழங்கப்படாத வகையில் இரத்துச் செய்கின்ற ஒரு தொழிற்பாடுமல்ல. மாற்றமாக, அப்பங்கு எதுவித மாற்றத்துக்கும் உட்படாது தொடர்ந்திருக்கும். வஹீ முற்றுப்பெற்று விட்டதனால் இத்தகைய ஒரு மாற்றம் இடம்பெற மாட்டாது. அல்குர்ஆனும் ஸுன்னாவும் உறுதிப்படுத்துகின்ற ஒரு சட்டத்தை, நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்வின் இறுதிக்கட்டம் வரை தொடர்ந்தும் அமுல்படுத்திய ஒரு சட்டத்தை, அபூபக்ர் (றழி) அவர்களும் தொடர்ந்து அமுல்படுத்திய ஒரு சட்டத்தை மாற்றியமைக்கும் உரிமை உமர் (றழி) அவர்களுக்கும், ஏனைய ஸஹாபாக்களுக்கும் எவ்வாறு கிட்ட முடியும்?!

உமர் (றழி) அவர்கள் தமது காலப்பகுதியில் இப்பங்கைக் கொடுத்து இஸ்லாத்தின்பால் உள்ளங்களை இணைக்க வேண்டிய தேவை இல்லை எனக் கருதினார்கள். எனவே தான் 'ஒருங்கிணைத்தல்' எனும் பெயரில் ஸகாத் பெறுவதை நியாயமாகக் கருதி அதனைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற மனிதர்களை அச்செயற்பாட்டிலிருந்து அவர்கள் தடுத்தார்கள்.

இஸ்லாத்தின் பால் இப்பங்கை வழங்கி உள்ளங்களை இணைக்க வேண்டிய தேவை உள்ளதா? இல்லையா? அவ்வாறு இணைப்பதாயின் அதற்கென தெரிவு செய்யப்பட வேண்டிய பிரிவினர்கள்

யாவர்? இவை பற்றியெல்லாம் அறிஞர்களின் ஆலோசனையோடு முடிவெடுக்கும் உரிமை ஆட்சித் தலைவருக்கு உண்டு. இவ்விடயத்தில் தீர்ப்பு காலத்துக்குக் காலம் மாறுபடும். நிலைமைகளுக்கேற்ப தீர்ப்பு மாறுபடும்.

## மூன்று முறை தலாக் சொல்லலும் உமர் (றழி) அவர்களும்

இமாம் இப்னு தைமிய்யா கூறுகிறார்: உமர் (றழி) அவர்கள் 'நான் உன்னை மூன்று முறை விகாரத்து செய்கிறேன்' என ஒருவர் ஒரு தடவை கூறினாலும் அவர் தனது மனைவியை விட்டும் முழுமையாக பிரிந்தவராக, மூன்று தலாக் சொன்னவராக கட்டாயம் கருதப்படுவார் எனும் முடிவை எடுத்தார்கள். இவ்வாறு, ஒருவர் ஒரு தடவை சொன்னால் அது ஒரு முறை தலாக் சொல்லியதாகவே கருதப்படும் என்பதை அவர்கள் அறிந்தே இருந்தார்கள். எனினும், மனிதர்கள் அதிகமாக இவ்வாறு தலாக் சொல்லும் பழக்கம் உடையவர்களாக இருப்பதைக் கண்ணுற்ற உமர் (றழி), அதற்காக அவர்களைத் தண்டிக்கவே இத்தகைய ஒரு நடவடிக்கையை மேற்கொண்டார்கள். அதனை அக்காலத்தில் வாழ்ந்த ஸஹாபாக்களும் ஏற்றுக்கொண்டனர். தான் மேற்கொண்ட நடவடிக்கையினைப் பற்றி அவர்கள் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்கள்.

''மனிதர்கள் மிகவும் நிதானமாக நடக்க வேண்டிய ஒரு விடயத்தில் அவசரப்பட்டு முடிவெடுக்கின்றனர். நாம் அவர்களது முடிவை அவர்கள் மீது அமுல்படுத்திவிட்டால் எவ்வாறிருக்கும்?'' எனக் கூறிய அவர்கள் மூன்று தலாக்கையும் ஒரே முறையில் சொன்னால் அதனை மூன்று தலாக்குகளாகவே கருதப்படும் எனும் சட்டத்தை அமுலாக்கினார்கள். மக்கள், இவ்வாறு ஒரே தடவையில் மூன்று தலாக்குகளையும் சொல்வதைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இச்சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஒருவர், தான் ஒரே தடவையில் மூன்று தலாக்குகளையும் சொன்னால் தலாக் முழுமையாக நிகழ்ந்து விடும். அதன் பின்னர் மனைவியை அடைய எதுவித வழியும் இருக்காது என்பதனைப் புரிந்து

கொள்ளும் போது இவ்வாறு தலாக் சொல்வதிலிருந்து விலகிக் கொள்வார் என்பதனாலேயே இச்சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

இங்கு மூன்று தலாக்குகளையும் ஒரே தடவையில் சொன்னால் அதனை கட்டாயமாக மூன்று தலாக்குகளாக கருதியமை சமூக நலனைக் கருத்திற் கொண்டு உமர் (றழி) அவர்கள் வழங்கிய ஒரு தண்டனையாகும். மூன்று தலாக்குகளும் ஒரே முறையில் சொல்லப்பட்டால், அது ஒரு தலாக்காகவே கருதப்படும் நிலை நபி (ஸல்) அவர்களது காலத்திலும் அபூபக்ர் (றழி) அவர்களது காலத்திலும் காணப்பட்டது என்பது அவர்கள் அறியாத ஒரு விடயமல்ல. ஏன்?! அவர்களது கிலாபத்தின் ஆரம்ப காலப் பகுதிகளிலும் இந்நிலைமையே காணப்பட்டது. மனிதர்கள் அதிகமாக மூன்று தலாக்குகளையும் ஒரே வார்த்தையில் சொல்ல ஆரம்பித்தபோது, இறைவனது வசனங்களை பரிகாசமாக எடுத்துக் கொண்டபோது தான் உமர் (றழி) அவர்கள் மூன்று தலாக்குகளையும் ஒரே வார்த்தையில் சொன்னாலும் அதுவும் மூன்று தலாக்குகளே எனும் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மஹ்மூத் பின் ஸபீத் கூறுகிறார்: ''மனிதர்கள் அதிகமாக மூன்று தலாக்குகளையும் ஒரே முறையில் சொல்ல முற்பட்ட வேளையில், உமர் (றழி) அவர்கள் அதற்காக அவர்களைத் தண்டித்தார்கள். பிறகு, தான் மரணிக்க முன்னர் மேற்கொண்ட அந்நடவடிக்கைக்காக வருந்தினார்கள்.'' (முஸ்னத் அஹ்மத், ஸுனனுன் நஸாஈ)

## வெற்றி கொள்ளப்பட்ட நிலங்களைப் பங்கீடு செய்தல் சம்பந்தமான தீர்ப்பு

ஸஹாபாக்கள் காலத்தில் தீர்ப்பு, கால மாற்றத்துக்கேற்ப மாறிய (முஸன்னப், பைஹகீ, பாகம்: 8, பக்கம்: 321) பிரச்சினைகளுக்கு இன்னோர் உதாரணம் பின்வருமாறு: முஸ்லிம்கள் போராட்டத்தின் போது கைப்பற்றிய நிலங்களை வெற்றியைப் பெற்றுக் கொடுத்த போராளிகளிடையே எவ்வாறு பங்கிடுவது? என்பது சம்பந்தமாக உமர் (றழி) அவர்களது காலத்தில் நிலவிய கருத்து முரண்பாடு இதற்கான இன்னோர் உதாரணமாகும்.

பிலால் (றழி) அவர்களும், இன்னும் சில ஸஹாபாக்களும் ஷாம் நிலங்கள் வெற்றி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அவற்றை வெற்றி கொண்டவர்களிடையே அவை பங்கிடப்பட வேண்டும் எனும் கருத்தைக் கொண்டிருந்தனர். நபி (ஸல்) அவர்கள் கைபர் நிலங்கள் வெற்றி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வெற்றி யைப் பெற்றுக்கொடுத்தவர்களிடையே அந்நிலங்களைப் பங்கீடு செய்தமையை தமது கருத்துக்கு ஆதாரமாக முன்வைத்தனர். இக்கருத்து ''மேலும், நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்! போரில் ஏதேனும் பொருள்களை நீங்கள் பெற்றிருந்தால் அவற்றில் ஐந்திலொரு பாகம், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் வறியவர்களுக்கும் பயணி களுக்கும் உரியதாகும்'' எனும் வசனத்துடனும் இணங்கிக் செல்லக் கூடியதே. இவ்வசனத்திலிருந்து கனீமத்தில் ஐந்தில் நான்கு பகுதி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தவர்களுக்கு உரியது எனும் கருத்தைப் புரிய முடிகிறது. நபி (ஸல்) அவர்கள் கைபர் நிலங்களில் பாதியைப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். பாதியை அங்கேற்படும் துன்பங்களை ஈடு செய்வதற்காக வக்ப் செய்தார்கள் என்ற கருத்தும் சில அறிவிப்புக்களில் காணப்படுகிறது.

எனினும், உமர் (றழி) அவர்களும் அலி (றழி), முஆத் (றழி) போன்ற ஸஹாபாக்களில் இருந்த சட்ட அறிஞர்களும் அந்நிலங் களைப் பங்கிடக் கூடாது; அவை அவற்றின் சொந்தக்காரர்களின் கைகளிலேயே தொடர்ந்தும் இருக்க வேண்டும்; அதற்காக அவர்கள் கராஜ் எனும் நிலவரியைச் செலுத்த வேண்டும்; அவ்வரி அக்காலப்பகுதியில் வாழும் அனைத்து முஸ்லிம்களினதும் நலன்களுக்காக செலவிடப்படும்; பின்னால் வரும் சந்ததிகளுக்கான ஓர் சொத்தாகவும் அது அமையும் எனும் கருத்தைக் கொண்டி ருந்தனர். சட்ட அறிஞர்களின் பாஷையில் சொல்வதாயின், முழு முஸ்லிம் சமூகத்துக்காகவும் அந்நிலங்கள் வக்ப் செய்யப்பட வேண்டும் எனும் கருத்தை அவர்கள் கொண்டிருந்தனர்.

ஈராக் நிலங்களைப் பொறுத்தவரையிலும் ஏனைய நிலங்களைப் பொறுத்தவரையிலும் உமர் (றழி) அவர்கள் இக்கருத்தையே

அமுல்படுத்தினார்கள். பின்னால் வந்த கலீபாக்களும் உமர் (றழி) அவர்களது வழிமுறையையே தொடர்ந்து பின்பற்றினர்.

நபி (ஸல்) அவர்கள் கைபர் நிலங்களைப் பங்கீடு செய்ததைப் பொறுத்தவரையில், அவர்கள் அந்நிலங்களுள் பாதியையே பங்கீடு செய்தார்கள். பாதியை துன்பங்களின் போது பயன்படுத்த வக்ப் செய்தார்கள் என்ற கருத்து இடம்பெற்றுள்ளது. அத்தோடு, இவ்வாறு பங்கீடு செய்தமை இஸ்லாத்தின் ஆரம்ப காலப்பகுதி யிலேயே இடம்பெற்றது. அக்காலத்தில் அவ்வாறு பங்கிட வேண் டிய பாரிய தேவை இருந்தது. அவ்வாறு பங்கிடுவதுதான் சமூக நலனுக்கு ஏற்றதாகவும் காணப்பட்டது. ஆனால், பிற்காலத்தில் நிலங்களை வக்ப் செய்வதில்தான் சமூக நலன் காணப்பட்டது. எனவே, அவ்வாறு வக்ப் செய்தல் கடமையாகிவிட்டது என விளக்கம் தருகின்றனர்.

உமர் (றழி) அவர்கள் கூறினார்கள்: ''பின்னால் வரும் சந்ததிகள் இல்லையேல், நபி (ஸல்) அவர்கள் கைபர் நிலங்களைப் பங்கிட்டது போல் நானும் நிலங்களைப் பங்கிட்டிருப்பேன்.'' நபி (ஸல்) நிலங்களைப் பங்கிட்டதை அறிந்திருந்தும் உமர் (றழி) நிலங்களை வக்ப் செய்தார்கள். இது நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட அந்நடவடிக்கையையே மேற்கொள்வது கடமையானதல்ல என்பதை உணர்த்துகிறது. சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு நபி (ஸல்) அவர்கள் முடிவெடுத்த இடங்களிலேயே, ஆட்சித்தலை வர் என்ற ரீதியில் அவர் மேற்கொண்ட அதே நடவடிக்கையை மேற்கொள்வது கடமையாகாது. அத்தோடு நபி (ஸல்) அவர்கள் ஒரு செயலைச் செய்திருப்பது மாத்திரம் அது கடமையானது என்பதற்கு ஆதாரமாக அமையாது. மாற்றமாக, அது அனுமதிக்கப்பட்டது என்பதை மாத்திரமே அது காட்டி நிற்கும். செயல் மாத்திரம் அது கடமையானது என்பதற்கான ஆதாரமல்ல. எனவே தான் உமர் (றழி) அவர்களும், அவரோடிருந்தவர்களும் கனீமத்தாக பெறப்பட்ட நிலங்களைப் பங்கீடு செய்யும் விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட அதே நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

உமர் (றழி) அவர்களும் அவரது முடிவை ஏற்றுக் கொண்ட அலி (றழி), முஆத் (றழி) போன்ற ஸஹாபாக்களும் நடத்திய கலந்துரையாடல்கள், கனீமத் நிலங்களை முஸ்லிம்களுக்கு வக்ப் செய்வதால் வருகின்ற நலன்களுக்கும், வெற்றி கொண்ட தனிநபர்களிடையே நிலங்களைப் பங்கீடு செய்வதனால் வருகின்ற தீமைகளுக்கும் அவர்கள் காட்டிய ஆதாரங்கள் என்பவற்றை வாசிக்கும் ஒருவர் ஸஹாபாக்கள் தமது மார்க்கத்தில் எவ்வளவு தெளிவுடன் காணப்பட்டனர் என்பதையும், சமூக நலனுக்கு முரணான எந்த சட்டமும், கொள்கையும் தமது மார்க்கத்தில் இருக்காது என்பதில் அவர்களிடம் காணப்பட்ட உறுதியான நம்பிக்கையையும் நன்கு தெரிந்து கொள்வார்.

## பஞ்ச காலத்தில் உமர் (றழி) அவர்களது தீர்ப்பு

சூழ்நிலைகள் மாற்றமடைவதற்கு ஏற்ப தீர்ப்பு மாறுபடும் என்பதற்கு முன்வைக்க முடியுமான இன்னோர் உதாரணமாக 'ஆமுர் ரமாதா' என அழைக்கப்படுகின்ற பஞ்ச வருடத்தில் உமர் (றழி) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை அமைந்துள்ளது. அவ் வருடத்தில் மிக முக்கியமான இரண்டு தீர்ப்புக்களை அவர்கள் வெளியிட்டார்கள்.

கால்நடைகளுக்கான ஒட்டகை, மாடு, ஆடு - ஸகாதை பஞ்சம் நீங்கும் வரை, மழை செய்து போதியளவு மேய்ச்சல் நிலங்கள் உருவாகும் வரை பிற்படுத்துதல்:- பஞ்சம் நிலவும் வருடத்தில் ஸகாத் திரட்டுவதை உமர் (றழி) அவர்கள் பிற்படுத்தினார்கள். மழை பெய்ததன் பின்னர் என்னை அனுப்பி வைத்தார்கள். இரண்டு வருடங்களுக்குரிய ஸகாதை அவர்களிடமிருந்து அறவிடுவீராக! பின்னர் ஒரு வருட ஸகாதைப் பங்கிடுவீராக. அடுத்த வருடத்துக்கு உரியதை என்னிடம் கொண்டு வருவீராக என கூறினார்கள் என்பதாக இப்னு தியாப் கூறுகிறார்.[40]

---

40- (அல் அம்வால், பக்கம்: 374) இதனை இமாம் அபூ உபைத் பதிவு செய்கிறார்.

உமர் (றழி) அவர்களிடம் காணப்பட்ட ஆழ்ந்த அறிவையும், மிகுந்த தெளிவையும், குடிமக்களில் அவர் காட்டிய அன்பையும் இந்நிகழ்ச்சி பறை சாட்டுகின்றது. ஸகாதை அவர் முழுமையாக நீக்கி விடவில்லை. மாற்றமாக, அதனை அறவிடுவதைப் பிற்படுத்தினார். சொத்துக்களை வைத்திருப்போரை கஷ்டத்துக்கு உள்ளாக்கக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்தார்.

திருடியவர்களின் கைகளை வெட்டுவதைத் தவிர்த்தல்:- பஞ்சம் நிலவும் வருடத்தில் கைவெட்டப்படக் கூடாது என உமர் (றழி) அவர்கள் கூறினார்கள். (அல் அம்வால், பக்கம்: 559)

இமாம் இப்னு கையிம், உமர் (றழி) அவர்கள் கூறியதாக ஸஅதீ என்பவர் அறிவிப்புச் செய்கின்ற, 'பேரீத்தம் பழக் குலையைத் திருடியதற்காக, பஞ்சம் நிலவும் வருடத்தில் திருடியதற்காக கைவெட்டப்பட மாட்டாது' எனும் கூற்றைப் பதிவு செய்கின்றார்.

அஹ்மதிடம் இந்த கூற்றைப் பற்றி வினவினேன். அதற்கு அவர், குலை என்பது பேரீத்தம் குலையைக் குறிக்கும். 'ஸனா' எனும் சொல் பஞ்சத்தைக் குறிக்கும் என கூறினார். அப்போது நான், நீங்களும் இக்கருத்தை முன்வைக்கிறீர்களா? என வினவினேன். அதற்கு அவர், சத்தியமாக 'ஆம்' என்றார். பஞ்சத்தினால் திருடினால் நீங்கள் கையை வெட்ட மாட்டீர்களா? என வினவினேன். மனிதர்கள் பஞ்சத்திலும் கஷ்டத்திலும் இருக்கும் வேளையில், அவசியத் தேவைதான் களவெடுக்கக் காரணமாக இருந்திருப்பின் கையை வெட்ட மாட்டேன் என அவர் பதிலளித்தார் என ஸஅத் குறிப்பிடுகின்றார்.

உமர் (றழி) அவர்களது இந்நடவடிக்கை ஹாதிப் பின் அபீ பல்தஆ (றழி) அவர்களது பணியாட்கள் விடயத்தில் அவர்கள் நடந்து கொண்ட முறைக்கு நிகரானதாக காணப்படுகிறது. ஹாதிப் பின் அபீ பல்தஆவின் பணியாட்கள் முஸைனா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு மனிதனின் ஒட்டகையைத் திருடினர். அவர்கள் உமர் (றழி) அவர்களிடம் அழைத்து வரப்பட்டனர். அப்போது தாம் செய்த குற்றத்தை அவர்கள் ஒப்புக் கொண்டனர். அவ்வேளை, உமர் (றழி)

அப்துர் ரஹ்மான் பின் ஹாதிபுக்கு தன்னிடத்தில் வருமாறு அறிவித்தார்கள். அவர் வந்தபோது, ஹாதிபின் பணியாட்கள் முஸைனா கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவரின் ஒட்டகத்தைத் திருடியுள்ளனர். அதனை அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர் என்றார்கள். பின்னர், உமர் (றழி) அவர்கள், கஸீர் பின் அஸ் ஸலத்! நீர் சென்று அவர்களது கைகளைத் துண்டிப்பீராக என்றார்கள். அவர்கள் சென்று கொண்டிருக்கையில் திரும்ப அவர்களை உமர் (றழி) தன்னிடம் வரவழைத்தார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் அவர்களிடம் வேலை வாங்குகிறீர்கள். அதேநேரம் அவர்களைப் பசியிலும் போடுகிறீர்கள். அவர்களில் ஒருவர் தனக்கு தடுக்கப்பட்டவற்றைப் புசித்தாலும் அது அவருக்கு ஆகுமானதாக இருக்கும் அளவுக்கு பட்டினியில் இடப்படுகிறார் என்பது எனக்குத் தெரியாது இருந்திருந்தால் அவர்களது கைகளைத் துண்டித்திருப்பேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நான் அவ்வாறு அவர்களது கைகளைத் துண்டிக்காது விடுவதால், உம்மீது உமக்கு துயரத்தைத் தரும் ஒரு நஷ்டஈட்டை விதிக்கிறேன் என அப்துர் ரஹ்மான் பின் அல்பல்தஆவைப் பார்த்துக் கூறினார். உனது ஒட்டகைக்கு நீர் எவ்வளவு பெறுவீர்? என வினவினார். அதற்கு அவர் நானூறு என்றார். அப்போது உமர் (றழி), நீர் போய் அம்மனிதனுக்கு எண்ணூறு கொடும் எனக் கூறினார்கள்.

இவ்விரு தீர்ப்புக்களிலும் (தண்டனையைத் தவிர்த்தல், இருமடங்கு நஷ்டஈடு வழங்கல்) உமர் (றழி) அவர்களது கருத்தை இமாம் அஹ்மத் அங்கீகரிக்கிறார் என இப்னு கையிம் குறிப்பிடுகிறார். பஞ்சத்தின்போது கை துண்டிக்கப்படக் கூடாது என்ற இமாம் அஹ்மதின் கருத்தையே இமாம் அவ்ஸாஈயும் கொண்டிருக்கிறார்.

இம்முடிவு முழுக்க ஒப்பீட்டு ரீதியாக பெறப்பட்ட ஒரு முடிவு ஷரீஆவின் விதிகளுக்கு இணங்க வழங்கப்பட்ட ஒரு முடிவு. வருடம் முழுக்க பஞ்சம் நிலவும்போது, கஷ்டம் நிலவும் போது மனிதர்களுக்கு நிறைய தேவைகள் இருக்கும்; நிர்ப்பந்தங்கள் இருக்கும். கள்வனுக்கும் கூட அவனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அத்தியவசியமானவை தேவையாக இருக்கும். இந்நிலையில், சொத்தின் உரிமையாளர் விலையைப் பெற்றுக்

கொண்டோ அல்லது இலவசமாகவோ -இது விடயத்தில் கருத்து முரண்பாடு உண்டு- அதனை வழங்குவது கடமையாகும்.

அதனை இலவசமாக வழங்குவது கடமையாகும். உதவி செய்வது, உயிர்களை வாழவைப்பது கடமை என்ற வகையில் இலவசமாக வழங்குவதே கடமையாகிறது. இலவசமாக வழங்கு வதற்கு முடியுமாயின் வழங்கி விட வேண்டும். மிகவும் தேவை யுடன் அடுத்தவன் இருக்கும் நிலையில் தாராளத்தன்மையுடன் அவனது நலனுக்கு முன்னுரிமை வழங்க முடியுமாயின் வழங்கிவிட வேண்டும் என்ற கருத்தே சரியானது.

தேவையுள்ளவன் களவெடுத்தால் கையைத் துண்டிப்பதைத் தவிர்ப்பதற்கு காரணமாக அமைகின்ற பலமான ஒரு சந்தேகமாக பசி அமைந்துள்ளது. அநேகமான சட்ட அறிஞர்கள் குறிப்பிடுகின்ற அதிகமான சந்தேகங்களை விட இச்சந்தேகம் மிகவும் பலமானது. குறிப்பாக, பஞ்ச காலத்தில் தேவையுள்ளவனுக்கு தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒருவரது சொத்திலிருந்து தேவை யானதைப் பறிமுதல் செய்து கொள்ள அனுமதி இருக்கிறது. பஞ்சம் நிலவும் வருடத்தில் ஏழைகள் அதிகமாக இருப்பார்கள். நிர்ப்பந் தத்துக்கு உள்ளானவர்கள் அநேகமானோர் இருப்பர். இவர்களுள் வறுமையின் காரணமாக திருடியவன் யார்? காரணமின்றியே திருடியவன் யார்? என பிரித்தறிவது முடியாத காரியமாக இருக்கும். இந்நிலையில் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டியவன் யார்? தண்டனை விதிக்கப்படக் கூடாதவன் யார்? என்ற சந்தேகம் எழுகின்றது. இச்சந்தேகம் தண்டனை தவிர்க்கப்பட காரணமாக அமைகிறது.

ஆம், திருடன் வறியவனல்ல, அவனுக்கு திருட வேண்டிய எத் தேவையும் கிடையாது என தெளிவாகத் தெரியும்போது கரம் துண்டிக்கப்படும்.[41]

---

41- (அஃலாமுல் முவக்கிஈன், பாகம்: 3, பக்கம்:22-23)

இதுவரை நோக்கியவற்றிலிருந்து உமர் (றழி) அவர்கள் ஒரு தண்டனையை அது கடமையானதன் பின்னர் இரத்துச் செய்ய வில்லை என்பது தெளிவாகிறது. மாற்றமாக, தண்டனையைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும் என்பதைத்தான் கடமையாக்குகின்ற பலமான சந்தேகம் காணப்படுவதனால் இங்கு தண்டனை விதிப்பது கடமையாகவில்லை. எனவேதான் அவர் தண்டனையைத் தவிர்த்தார்.

## அல்குர்ஆனை ஒன்றுதிரட்டுதலும் எழுதலும்

நபி (ஸல்) அவர்களது காலத்தில் அல்குர்ஆன் நூல்வடிவில் ஒன்று திரட்டப்பட்டிருக்கவில்லை. அபூபக்ர் (றழி) அவர்களது காலத்திலேயே அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டது.

அபூபக்ர் (றழி) அவர்களது காலத்திலோ, உமர் (றழி) அவர்களது காலத்திலோ நூல்வடிவில் ஒன்றுதிரட்டப்பட்ட ஒரேயொரு அல்குர்ஆன் பிரதிக்கு மேல் இருக்கவில்லை. உஸ்மான் (றழி) அவர்களது காலத்தில் பல பிரதிகள் எழுதப்பட்டன. ஏற்கனவே மக்களுக்கு மத்தியில் இருந்தவை எரிக்கப்பட்டன.

இவ்விரு நிகழ்வுகளும் ஸஹாபாக்களது காலத்தில் இடம்பெற்ற மகத்தான, ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய இரு நிகழ்வுகளாகும்.

நபி (ஸல்) அவர்களது காலத்தில் அல்குர்ஆன் மனித உள்ளங் களில் மனனத்தின் மூலமாக பாதுகாக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அக்காலத்தில் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஓலைகள், கற்கள், எலும்புகள், தோல்கள் போன்ற அச்சமூகத்திற்குப் பொருத்தமான எளிமையான சாதனங்களில் அல்குர்ஆன் எழுதியும் வைக்கப்பட்டது. அச்சமூகத்தில் கடதாசிப் பாவனை மிக் குறைவாகவே இருந்தது.

மதம் மாறியோருக்கு எதிரான போராட்டத்தின் போது, யமாமா யுத்தத்தில் அல்குர்ஆனை மனனமிட்டிருந்த பலர் ஷஹீதாகினர். அபூபக்ர் (றழி). அவர்களது காலப்பகுதியில் இடம்பெற்ற இப் போராட்டத்தில் எழுநூறு பேர் அல்குர்ஆனை மனனமிட்டவர்கள் - ஷஹீதாகியதாக கூறப்படுவதுண்டு. அவ்வேளை, உமர் (றழி)

அவர்கள் அல்குர்ஆனை நூலுருவில் ஒன்றுதிரட்டுமாறு அபூபக்ர் (றழி) அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். உபை, இப்னு மஸ்ஊத், ஸைத் போன்ற முக்கியமான அறிஞர்கள் மரணித்து விடுவார்களோ என்ற பயமே இவ்வேண்டுகோளை விடுக்க காரணமாக அமைந்தது. ஆரம்பத்தில், அபூபக்ர் (றழி) இப்பணியில் ஈடுபடத் தயங்கினார்கள். உமர் (றழி) அவர்களிடம், நபி (ஸல்) அவர்கள் செய்யாத ஒரு வேலையை நான் எவ்வாறு செய்வது? என வினவினார்கள். அதற்கு அவர், அல்லாஹ்வின் மீது சத்தியமாக, அது நன்மையானது! எனக் கூறினார். அப்பணிக்கு அல்லாஹ் எனது உள்ளத்தை விரிவுபடுத்தும் வரை உமர் (றழி) அதனைப் பற்றி எனக்கு ஞாபகமூட்டிக் கொண்டேயிருந்தார். இறுதியில், அவரது கருத்தே எனது கருத்தாகவும் மாறியது என அபூபக்ர் (றழி) அவர்கள் கூறுகிறார்கள். அபூபக்ர் (றழி) அவர்கள் அல்குர்ஆனை ஒன்று திரட்டும் பணியையும் எழுதும் பணியையும் பொறுப்பேற்குமாறு ஸைத் பின் ஸாபித் (றழி) அவர்களுக்கு அறிவித்தார்கள். ஸைத் நபி (ஸல்) அவர்களிடம் வஹியை எழுதும் பணியில் ஈடுபட்டவர். ஆரம்பத்தில் அவர் அபூபக்ர் (றழி) அவர்கள் தயக்கம் காட்டியது போல இப்பணியில் ஈடுபட தயக்கம் காட்டினார். நபி (ஸல்) அவர்கள் செய்யாத ஒரு வேலையை நீங்கள் இருவரும் எவ்வாறு செய்ய முடியும்?! என அபூபக்ர் (றழி) அவர்களிடமும், உமர் (றழி) அவர்களிடமும் வினாத்தொடுத்தார். அப்போது, அபூபக்ர் (றழி): ''அல்லாஹ்வின்மீது சத்தியமாக அது நன்மையானது'' என பதிலளித்தார்.

ஸைத் (றழி) கூறுகிறார்: ''அல்லாஹ் அபூபக்ரினதும் உமரினதும் உள்ளங்களை எதற்கு விரிவுபடுத்தினானோ, அதற்கு எனது உள்ளத்தையும் விரிவுபடுத்தும் வரை நான் இதுபற்றி அவருடன் கதைத்துக் கொண்டே இருந்தேன்.'' ஸைத் (றழி) தனது பணியை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றினார். உள்ளங்களில் பாது காக்கப்பட்டிருந்த, பல்வேறு சாதனங்களில் எழுதி வைக்கப்பட்டி ருந்த அல்குர்ஆனை ஒன்று திரட்டினார். அவற்றை தாள்களில் பதிவு செய்தார். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட அல்குர்ஆன் அபூபக்ர் (றழி) அவர்கள் மரணிக்கும் வரை அவரிடம் இருந்தது. உமர் (றழி)

அவர்கள் மரணிக்கும் வரை தன்னிடத்தில் அதை வைத்திருந்தார். பின்னர், அது ஹப்ஸா (றழி) அவர்களிடத்தில் இருந்தது.

இவ்வாறு ஒன்றுதிரட்டப்பட்ட அல்குர்ஆன் பிரதி, ஓதுவதற்காக ஒன்று திரட்டப்படவில்லை. அல்குர்ஆனின் உத்தியோகபூர்வ பிரதியாக, பாதுகாக்கப்பட வேண்டிய பிரதியாக இருப்பதற்கும், தேவையின்போது ஆதாரமாகக் கொள்ளப்படுவதற்கும் தான் அது ஒன்று திரட்டப்பட்டது.

இப்பணி சந்தேகத்துக்கு இடமின்றி மகத்தான ஒரு பணியாக இருந்தது. இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் அத்தியாவசியமான ஒரு பணியாக இருந்தது. தனது கண்ணியம் மிக்க வேதத்தைப் பாதுகாப்பதற்காகவும் ''நிச்சயமாக நாமே இவ்வுபதேசத்தை இறக்கினோம். நாமே அதனைப் பாதுகாக்கவும் செய்வோம்'' என்ற வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகவும் இம்மகத்தான பணியை மேற்கொள்ளும் பாக்கியத்தை அந்த ஸஹாபாக்களுக்கு அல்லாஹ் அருளினான். அல்குர்ஆனை நபி (ஸல்) அவர்கள் நூலுருப்படுத் தாமைக்கு காரணம் உண்டு. அவர்களது காலத்தில் நிகழ்வுகளுக்கு ஏற்றவகையில் அல்குர்ஆன் பகுதி பகுதியாக இறங்கிக் கொண்டி ருந்தது. அவர்கள் உயிர் வாழும் வரை புதிது புதிதாக ஏதாவது இறங்கும் என்ற எதிர்பார்ப்பு இல்லாது போகவில்லை. ஆனால், ஸஹாபாக்களது காலத்தில் அல்குர்ஆன் பரிபூரணமடைந்த நிலையில் காணப்பட்டது. வஹியின் வருகை துண்டிக்கப்பட்டு விட்டது. எனவே, அல்குர்ஆனை நூலுருப்படுத்துவதில் நபி (ஸல்) அவர்களது காலத்தில் காணப்பட்ட தடைகள் நீங்கிவிட்டன. அல்குர்ஆனை ஒழுங்கு முறைப்படி ஒன்றுதிரட்டி எழுத வேண்டிய தேவை காணப்பட்டது. காலமும் சூழலும் மாறியபோது நிலைமை யும் மாறியது. அல்லது தீர்ப்பும் மாறியது.

உஸ்மான் (றழி) அவர்களது காலப்பகுதியில் புதியதொரு சூழல் தோன்றியது. எனவே, வேறொரு புதிய நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஸஹாபாக்கள் பல்வேறு பிரதேசங் களிலும் பரவியிருந்தமையால் கிராஅத்துக்களைப் பொறுத்தவரை யில் மக்களிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றலாயின.

நிலைமை மிகவும் சிக்கலானது. கருத்துவேறுபாடுகள் பாரியளவு உருவாகின. ஒவ்வொரு சாராரும் தத்தமது கருத்துக்களில் பிடிவாதமாக இருந்தனர். ஷாம் வாசிகளிடையேயும் ஈராக்வாசிகளிடையேயும் கருத்து முரண்பாடு தோன்றியது. அதனை ஹுதைபா (றழி) பின்வருமாறு குறிப்பிடுகிறார்: அவர்கள் ஆர்மீனிய்யா யுத்தத்துக்காக ஒன்று சேர்ந்திருந்தனர். ஒவ்வொரு பிரிவினரும் -ஓதுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த ஏழு முறைகளுள்- தமக்கு கிடைத்த அறிவிப்புக்களின் பிரகாரம் அல்குர்ஆனை ஓதி வந்தனர். அவர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றின. அவர்கள் தமக்கிடையே பிரச்சினைப் பட்டுக் கொண்டனர். சிலர் சிலரை 'காபிர்' என்றனர். அவர்களை விட்டும் தாம் நிரபராதிகள் என்றனர். பரஸ்பரம் ஒருவரையொருவர் சபித்துக் கொண்டனர். ஹுதைபா (றழி) அம்மக்களிடையே கண்டகாட்சி அவருக்கு அச்சத்தைக் கொடுத்தது. மதீனாவுக்கு அவர் வருகை தந்தபோது - இமாம் புகாரி, இமாம் திர்மிதி குறிப்பிடுவது போல, தன் வீட்டுக்குச் செல்ல முன்பாகவே அவர் கலீபா உஸ்மான் (றழி) அவர்களிடம் வந்தார், இச்சமுதாயம் அழிய முன்னர் அதனைக் காப்பாற்றுவீராக! என வேண்டினார். எதன் மூலம் அழிவு வருகிறது? என கலீபா வினவவே, அல்லாஹ்வின் வேதத்தின் விவகாரத்தில், நான் இந்த யுத்தத்தில் பங்கேற்றேன். ஈராக்கிலிருந்தும் ஷாமிலிருந்தும், ஹிஜாஸிலிருந்தும் இந்த யுத்தத்துக்காக மக்கள் ஒன்றிணைந்திருந்தனர் எனக் குறிப்பிட்ட அவர், அங்கு தான் கண்டவற்றை விவரித்தார். அவர்கள் தங்களது வேதத்தின் விவகாரத்தில் யூதர்கள், கிறிஸ்தவர்கள் கருத்து முரண்பட்டுக் கொண்டது போல கருத்து முரண்படுவார்களோ எனக் நான் அஞ்சுகிறேன் என கூறினார்.

அல்குர்ஆனை நூலுருவில் பல பிரதிகளாக ஒன்றிணைக்க வேண்டும் என உஸ்மான் (றழி) கருதினார். அவ்வாறு பிரதிகளை உருவாக்கி, நகரங்களுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் மனிதர்கள் அதனை மூலாதாரமாகக் கொள்வதற்கு வழிவகுக்கலாம். அவ்வாறே, முஸ்லிம்களிடையே அல்குர்ஆனின் விவகாரத்தில் முரண்பாடுகள் தோன்றுவதை, பிரச்சினைகள் உருவாவதைத் தடுக்கலாம் என அவர் கருதினார்.

ஸஹாபாக்களை ஒன்றுசேர்த்த கலீபா அவர்களிடம் ஆலோசனையை வேண்டி நின்றார். அச்சபையில் அலி (றழி) அவர்களும் சமூகமளித்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் விசுவாசிகளின் தலைவரே! உங்களது கருத்து என்ன? என வினவினர். எல்லா மனிதர்களையும் ஒரே கிராஅத்தில் ஒன்றிணைக்க வேண்டும் என்பதே எனது கருத்து. இப்போதே நீங்கள் கருத்து வேறுபாடு பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் எனின், இதற்குப் பிறகு இதனை விட கடுமையாக நீங்கள் முரண்படுவீர்கள்! என அவர் பதிலளித்தார். அப்போது அவர்கள், விசுவாசிகளின் தலைவரே! உங்களது கருத்தே எங்கள் கருத்தும் என்றனர். ஹப்ஸா (றழி) அவர்களுக்கு ''உங்களிடம் உள்ள அல்குர்ஆன் பிரதியை அனுப்பி வையுங்கள், நாங்கள் அதனை பிரதிபண்ணி விட்டு உங்களிடமே ஒப்படைக்கிறோம்'' என உஸ்மான் (றழி) அறிவித்தார். ஹப்ஸா (றழி) தன்னிடமிருந்த அல்குர்ஆன் பிரதியை அனுப்பி வைத்தார். ஸைத் பின் ஸாபித் (றழி), அப்துல்லாஹ் பின் ஸுபைர் (றழி), ஸாபித் பின் அல்ஆஸ் (றழி), அப்துர் ரஹ்மான் பின் அல் ஹாரிஸ் (றழி) ஆகியோரை பிரதி பண்ணுமாறு பணித்தார். அவர்கள் அதனைப் பிரதி பண்ணினர். ஹப்ஸா (றழி) அவர்களிடமிருந்து பெறப்பட்ட மூலப்பிரதி அவர்களிடமே மீள ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் பிரதிபண்ணிய அல்குர்ஆன் பிரதிகளை உஸ்மான் (றழி) ஒவ்வொரு பிரதேசத்துக்கும் அனுப்பி வைத்தார். அப்பிரதிகள் தவிர்ந்த, ஏடுகளிலும், தாள்களிலும் எழுதி வைக்கப்பட்டிருந்த அல்குர்ஆன் பிரதிகளை எரித்து விடுமாறு அவர் கட்டளை பிறப்பித்தார்.[42]

முஹாஜிரீன்களையும், அன்ஸாரிகளையும், பெரும்பாலான முஸ்லிம்களையும் ஒன்றிணைத்து, ஆலோசனை கேட்டதன் பின்னரே உஸ்மான் (றழி) இந்நடவடிக்கையை மேற்கொண்டார். அவர்கள் அனைவரும் நபி (ஸல்) அவர்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற உறுதியான, ஆதாரபூர்வமான, பிரபல்யமான கிராஅத்துக்களில் மக்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும், ஏனைய

---

42- (தப்ஸீர் அல் குர்துபீ, பாகம்: 1, பக்கம்: 44-45)

கிராஅத்துக்கள் ஓரங்கட்டப்பட வேண்டும் என்ற ஏகோபித்த கருத்தைக் கொண்டிருந்தனர். உஸ்மான் (றழி) அவர்களது கருத்தைச் சரியானது எனக் கருதினர். அவர்கள் அனைவரதும் கருத்து சிறந்த, பாக்கியம் பொருந்திய ஒரு கருத்தாகவே அமைந்திருந்தது என இமாம் குர்துபீ குறிப்பிடுகிறார்.[43]

அல்குர்ஆனைப் பிரதிபண்ணிய, ஏற்கனவே சமூகத்தில் இருந்த அல்குர்ஆன் பிரதிகளை எரித்த இத்தொழிற்பாட்டை சிலர் ஆட்சே பித்தனர். பொதுவாக, மக்கள் தமக்குப் பரிச்சயமானவற்றுக்குப் புறம்பான, புதிய எந்த ஒரு நடவடிக்கையையும் ஆட்சேபிப்ப துண்டு. இந்த சந்தர்ப்பத்தில், உஸ்மான் (றழி) அவர்களைப் புகழ்ந்து, அவர்களைப் பாதுகாப்பதற்காக அலி (றழி) அவர்கள் குரல்கொடுக்க வேண்டியிருந்தது. ''மனிதர்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். உஸ்மானின் விவகாரத்தில் நீங்கள் எல்லை மீறி நடந்து கொள்வதையிட்டு, அல்குர்ஆனை எரித்தவர் என அவரை அழைப் பதையிட்டு நான் உங்களை எச்சரிக்கிறேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக முஹம்மத் (ஸல்) அவர்களின் தோழர்களான எங்களில் முக்கியமானவர்கள் சார்பாகவே அவர் அந்நடவடிக்கையை மேற்கொண்டார் என அலி (றழி) கூறியதாக ஸுவைத் பின் கப்லா குறிப்பிடுகிறார்.

அலி (றழி) கூறியதாக, உமர் பின் ஸஈத் பின்வருமாறு கூறுகிறார்: உஸ்மானின் காலத்தில் ஆட்சியாளராக நான் இருந்திருந்தாலும் உஸ்மான் அல்குர்ஆனின் விவகாரத்தில் எடுத்த அதே நடவடிக்கை யையே நானும் எடுத்திருப்பேன்.[44] உஸ்மான் (றழி) அவர்கள் முரண்பட வேண்டும் என்ற ஆசையில் தனக்கு முன்பிருந்தவர் களுக்கு மாற்றமாக, நடக்கவில்லை. மாற்றமாக அவரது காலப்பகுதி முன்னைய இரு கலீபாக்களதும் காலப்பகுதியை விட வித்தியாசமாக இருந்தது. கருத்துமோதல்கள் பெரும்பிரச்சினையாக, கடுந் தீமையாக மாற்றமுறுவதற்கான அறிகுறிகள் தென்பட்ட வண்ணமி

43- (தப்ஸீர் அல் குர்துபீ, பாகம்: 1, பக்கம்: 44-45)

44- (தப்ஸீர் அல் குர்துபீ, பாகம்: 1, பக்கம்: 47)

ருந்தன. இத்தகைய ஓர் அவல நிலையைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கிலேயே, ஸஹாபாக்களின் ஆலோசனையோடு அல்குர் ஆனின் பிரதிகள் எழுதப்பட வேண்டும்; மக்களை அவற்றிலே ஒன்றிணைக்க வேண்டும்; ஏனைய அல்குர்ஆன் பிரதிகள் எரிக்கப்பட வேண்டும் என்ற தீர்ப்பை அவர் வழங்கினார். காலமும், சூழ்நிலையும் வேறுபட்டதன் காரணமாகவே தீர்ப்பும் வித்தியாச மானதாக அமைந்திருந்தது.

## இப்னு அப்பாஸ் (றழி) அவர்களும் கொலையாளியும்

நிலைமைகளுக்கு ஏற்ப தீர்ப்பு மாறுபட்டமையும் என்பதற்கான சிறந்ததோர் உதாரணமாக கொலையாளியின் பாவ மன்னிப்பு சம்பந்தமாக இப்னு அப்பாஸ் (றழி) வழங்கிய தீர்ப்புக்கள் அமைந் துள்ளன. ஒரு மனிதர் இப்னு அப்பாஸ் (றழி) அவர்களிடம் வந்து முஸ்லிமைக் கொலை செய்த ஒருவனுக்கு பாவமன்னிப்பு உண்டா? என வினவினார். அவர் இல்லை, அவருக்கு நரகம்தான் கிட்டும்'' என்றார். அம்மனிதர் திரும்பிச் செல்கையில், அவ்விடத்தில் இருந்தவர்கள், நீங்கள் எமக்கு இவ்வாறு தீர்ப்பு வழங்குபவராக இருக்கவில்லை. இன்று ஏன் இவ்வாறு தீர்ப்பு வழங்குகிறீர்கள்? என வினவினர். அதற்கு இப்னு அப்பாஸ், அம்மனிதர் கோபத்தில் இருக்கிறார். ஒரு முஸ்லிமைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார் என நான் கருதுகிறேன். எனவே, இவ்வாறு தீர்ப்பு வழங்கினேன் என்றார். அப்போது அவர்கள், அம் மனிதனுக்குப் பின்னால் ஆளனுப்பி அவனைப் பற்றி ஆராய்ந்தனர். இப்னு அப்பாஸ் கூறிய நிலையிலேயே அம்மனிதன் இருந்ததை அவர்களால் கண்டுகொள்ள முடிந்தது (இப்னு அபீ ஷைபா)

இப்னு அப்பாஸ் (றழி) அம்மனிதனின் இரு கண்களிலிருந்தும் கக்குகின்ற பகைமையையும், கோபத்தையும், கொலைவெறியையும் அவதானித்தார்கள். அம்மனிதர் குற்றம் செய்ததன் பின்னால் தனக்கு பாவமன்னிப்பின் வாயிலைத் திறந்து கொடுக்கும் ஒரு தீர்ப்பை குற்றம் செய்வதற்கு முன்னரே பெற்றுக்கொள்ள விரும்பினார்.

இதனை உணர்ந்த இப்னு அப்பாஸ் (றழி) அம்மனிதன் பெரும் பாவத்தில் சிக்கிக் கொள்ளக்கூடாது எனும் நோக்கில் அவனுக்கு பாவமன்னிப்பு இல்லை என்ற தீர்ப்பைக் கூறி அவனுக்கு முன்னால் இருந்த குற்றத்திற்கான வாயிலை அடைத்து விட்டார். அவனை அடக்கி விட்டார். அவனது கண்களில், ஏற்கனவே இடம்பெற்று விட்ட கொலைக் குற்றத்துக்கான கைசேதம் தென்பட்டிருப்பின் பாவமன்னிப்பு உண்டு'' என்ற தீர்ப்பை வழங்கி, நம்பிக்கையின் வாயிலையே அவர் திறந்து விட்டிருப்பார்.

ஸுப்யான் கூறியதாக ஸஈத் பின் மன்ஸூர் அறிவிப்புச் செய்கிறார்: அறிஞர்களிடம் கொலை செய்பவரது நிலைமை என்ன? என விசாரித்தால், அவனுக்கு பாவமன்னிப்பு கிடையாது என்றே பதிலளித்தனர். ஒரு மனிதன் உண்மையாகவே கொலைக் குற்றத்தில் மாட்டிக்கொண்டால், நீர் பாவமன்னிப்புக் கோருவீராக! என அவரை ஏவினர்.

அநேகமான சட்ட அறிஞர்கள் எல்லா விவகாரங்களிலும் இப்னு அப்பாஸ் (றழி) வகுத்துக் கொடுத்த இவ்வழிமுறையையே பின்பற்றுகின்றனர். அதாவது, குற்றத்தில் மாட்டிக் கொண்டு விட்டவனுக்கு சலுகை வழங்குகின்றனர். இலகுபடுத்திக் கொடுக்கின்றனர். சலுகை வழங்க, இலகுபடுத்த முடியுமாக இருக்கும் காலமெல்லாம் இவ்வாறு செய்கின்றனர். ஆனால், இதுவரை குற்றத்தில் ஈடுபடாதவனுக்கு, குற்றத்தில் ஈடுபட முன் தீர்ப்பு கேட்பவனுக்கு கடினமான தீர்ப்புக்களையே வழங்குகின்றனர்.

உதாரணமாக, ஒருவர் தான் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யாது இருந்தால் மனைவி தலாக் பெற்றுவிடுவாள் என சத்தியம் செய்கிறார். பின்னர், அக்காரியத்தை அவர் செய்து விடுகிறார். இந்நிலையில், அடிப்படையில் தலாக் இடம்பெற மாட்டாது என்ற தீர்ப்பை சிலர் வழங்குவர். ஸலபீக்களில் சிலரது கருத்து இதுவே. அவர் சத்தியத்தை முறித்திருப்பதனால் கப்பாரா கொடுக்க வேண்டும் என சிலர் தீர்ப்பளிப்பர். இக்கருத்தையே இமாம் இப்னு தைமிய்யா, இப்னுல் கையிம் ஆகியோரும் கொண்டுள்ளனர். அவர் சத்தியம் செய்தார்; அக்காரியத்தைச் செய்யவில்லை. அதனைச் செய்ய

வேண்டிய தேவை அவருக்கு இல்லை என்றிருப்பின் அவரும் சத்தியத்தை முறித்தவருக்குரிய தீர்ப்புக்கே உள்ளாவார் என்ற கருத்தையே பெரும்பாலான அறிஞர்கள் கொண்டுள்ளனர். இங்கு நிலைமைகளுக்கு ஏற்ப தீர்ப்பு வித்தியாசப்பட்டிருப்பதை காண முடிகிறது.

## தாபிஈன்களின் காலமும், தொடர்ந்து வந்த காலப் பகுதியும்

தீர்ப்புக்கள் கால மாற்றத்துக்கு ஏற்ப மாற்றமுற்றமைக்கு தாபிஊன்களின் காலத்தில் அநேகமான உதாரணங்களை நாம் காண முடியும்.

நபி (ஸல்) அவர்களது காலப்பகுதியை விடவும், ஸஹாபாக்களது காலப்பகுதியை விடவும் தமது காலத்தில் நிலைமைகள் மாறுபட்டிருப்பதை அவதானித்த அவர்கள், பொதுமக்களுக்கு தீங்கு நிகழ்வதைத் தடுக்கும் நோக்கில் கட்டுப்பாட்டு விலை விதிக்க அனுமதித்தனர்.

உமர் பின் அப்துல் அஸீஸ் (றஹ்) மதீனாவில் கவர்னராக இருக்கும்போது, ஒரு சாட்சியையும் சத்தியத்தையும் அடிப்படை யாகக் கொண்டு தீர்ப்பு வழங்கினார். ஆனால், ஷாமில் அவர் இருக்கும்போது இரண்டு சாட்சிகள் இருப்பதை கட்டாயப்படுத்தி னார். மதீனா மக்களின் நிலைமையை விட ஷாம் மக்களின் நிலை வேறுபட்டது என அவர் அறிந்திருந்தமையே இதற்கான காரண மாகும்.

மனிதர்கள் புதிது, புதிதாக தீமைகளை உருவாக்குவதற்கு ஏற்ப அவர்களுக்கு புதிய, புதிய தீர்ப்புக்கள் வழங்கப்படும் என்ற பிரபல்யமான கருத்தை முன்வைத்தவர் உமர் பின் அப்துல் அஸீஸ் (றஹ்) தான்.

இமாம் அபூஹனீபா தனது காலப்பகுதியில், சாட்சியின் நிலை அறியப்படாதிருந்தாலும் அவரது சாட்சியத்தை ஒப்புக் கொண்டார். வெளிப்படையில் அவர் நேர்மையானவராக இருப்பதை வைத்து

அவர் தீர்ப்பு வழங்கினார். ஆனால், அவரது தோழர்கள் இருவரும் சாட்சியின் நிலைமை தெரியாவிடில் அவரது சாட்சியத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களது காலத்தில் மக்களிடையே பொய் பரவியிருந்தமையே இதற்கான காரணமாகும்.

இமாம் அபூஹனீபாவுக்கும் அவரது இரு தோழர்களுக்குமிடை யிலான இத்தகைய முரண்பாடுகளுக்கு ஆதாரங்களில் இருந்த வேறுபாடு காரணமாக அமையவில்லை. மாற்றமாக, காலவேறு பாடே இம்முரண்பாட்டுக்குக் காரணம் என ஹனபீ மத்ஹப் அறிஞர்கள் கூறுகின்றனர்.

பல்வேறு விவகாரங்களில் பிற்கால ஹனபீ மத்ஹப் அறிஞர்கள் முன்னைய அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு முரணாக நடந்துள்ளனர். அவர்களோடு முரண்பட்டுள்ளனர். இதற்கு கால, சூழ்நிலை மாற்றங்களே காரணமாக அமைந்தன. இதைப்பற்றி பிற்கால ஹனபீ மத்ஹப் அறிஞர்களுள் ஒருவராகிய இமாம் இப்னு ஆபிதீன் 'நஷ்ருல் உர்ப்' எனும் தனது பிரபலமான நூலை எழுதி யுள்ளார். இந்நூலில், அதிகமான சட்டங்கள் கால மாற்றத்துக்கு ஏற்ப மாறுபடுகின்றன. அக்கால மக்களின் வழக்காறு மாறுபடுவது அல்லது அத்தியாவசிய நிலைமை தோன்றுவது அல்லது மக்கள் சீர்கெடுவது; இவ்வாறு சட்டம் மாறுபடுவதற்குரிய காரணங்க ளாகும். இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கையில் சட்டம் மாறாது தொடர்ந்திருக்குமாயின் அதனால் மக்கள் கஷ்டப்படுவர். தீங்கு களுக்கு உள்ளாவர். இலகுபடுத்தலையும் தீங்கையும் சீர்கேட்டை யும் தடுத்தலையும் அடிப்படையாகக் கொண்ட ஷரீஆவின் விதிகளுக்கு முரணானதாக இந்நிலை அமைந்துவிடும். இதனா லேயே மத்ஹப் அறிஞர்கள் அநேகமான இடங்களில் தமது மத்ஹபின் இமாமின் கருத்துக்களுக்கு முரணாக நடப்பதை நாம் காணலாம். தனது கால சூழலை அடிப்படையாகக் கொண்டே மத்ஹபின் இமாம் அக்கருத்துக்களை முன்வைத்திருப்பார். தமது காலத்தில் அவர் உயிரோடு இருந்திருந்தால் தாம் கூறும் கருத்துக் களையே அவரும் முன்வைத்திருப்பார் என அவர்கள் அறிந்திருப்ப தனாலேயே இவ்வாறு முரண்பட்டுள்ளனர். அவரது மத்ஹபின்

அடிப்படை விதிகளைச் சார்ந்தே இத்தகைய ஒரு நிலைப்பாட்டை அவர்கள் எடுத்தனர்.

மாலிகீ மத்ஹபில் இமாம் ஷிஹாபுத்தீன் கராபீ தனது 'அல்புரூக்', 'அல்அஹ்காம் பீ தமய்யுஸில் பதாவா மினல் அஹ்காம்' ஆகிய இரு நூல்களிலும் மாற்றமடைந்து விட்ட ஒரு வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு சட்டமும், தற்போது வழக்கில் இல்லாத ஒரு வழக்காறை அடியாகக் கொண்ட ஒரு சட்டமும் மாற்றமுறுவது கட்டாயமானதாகும் என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கு சிறந்ததோர் உதாரணமாக மாலிகீ மத்ஹபில் பிரபல்யமான ஒரு நூலாகக் கருதப்படுகின்ற அர்ரிஸாலாவின் ஆசிரியர் - இந்நூலுக்கு மாலிகீ மத்ஹபின் முக்கியமான சில அறிஞர்கள் விளக்கம் எழுதியுள்ளனர் - இமாம் அபூ முஹம்மத் பின் அபீ ஸைத் அல் கைரவானீ (மரணம்: 386 ஹிஜ்ரி) பற்றி குறிப்பிடப்படுகின்ற பின்வரும் நிகழ்வைத் தரலாம்.

இமாம் கைரவானியின் வீட்டின் ஒரு சுவர் விழுந்திருந்தது. சில பிரிவினர்களால் தனக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சமும் அவருக்கு இருந்தது. எனவே, காவலுக்காக ஒரு நாயை தனது வீட்டில் கட்டி வைத்திருந்தார். இமாம் மாலிக் இதனை வெறுத்தார் என அவரிடம் கூறப்பட்டபோது, எமது காலப்பகுதியில் இமாம் மாலிக் இருந்திருந்தால் கொடூர சிங்கமொன்றைத் தான் வைத்துக் கொண்டு இருந்திருப்பார்'' எனப் பதிலளித்தார்.

ஒவ்வொரு மத்ஹபிலும் இவ்வாறான நிலைப்பாடுகளை நாம் காண முடியும். அதன் அளவைப் பொறுத்தவரையில், அவற்றுக் கிடையில் வேறுபாடு இருக்கலாம். இவையனைத்தும் இந்த ஷரீஆவை அல்லாஹ் நன்கு விரிந்ததாக, நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதாக ஆக்கி, அதனை எல்லாக் காலங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் ஏற்றதாக அமைத்து வைத்துள்ளான் என்பதற்கான ஆதாரங்களாக அமைகின்றன.

பல்வேறுபட்ட காலங்களின் நிகழ்வுகளை, வித்தியாசமான சூழல்களின் நிகழ்வுகளையும் எதிர்கொள்ளும் அளவுக்கு எவ்வாறு இஸ்லாமிய ஷரீஆ விரிந்து காணப்படுகிறது?

முன்னேற்றத்தை அது எவ்வாறு எதிர்கொள்கின்றது? புதிதாக தோற்றம் பெறுகின்ற அனைத்துப் பிரச்சினைகளையும் மனிதர்களின் நலன்களைப் பூர்த்தி செய்யும் வகையிலும் ஷரீஆவின் இலக்குகளைப் பரிபூரணப் படுத்தும் வகையிலும் காலத்தின் தேவையைப் புறக்கணிக்காத வகையிலும் அது எவ்வாறு தீர்த்து வைக்கின்றது? போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் பொறுப்பையே இவ்வாய்வு ஏற்றுள்ளது. மிகவுமே நம்பகமான மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்ட ஆதாரங்களுடன் இவ்விடைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கலாநிதி யூஸுஃப் அல்கர்ளாவி

Published by

**Dharul Hikma Publication**

110, Kalawewa, Vijithapura.
0772262640, 0714204216

Price: 250.00

Tel:0112684851
Rs: 250
ISLAMIC BOOK HOUSE
00028546-1
Islamiya Shareeavin Visalaththanmaiyum N.T-Abbas
03.11.2016